# வைகறை வெளிச்சம்

மார்ச் 2016 - ஜமாஅத்துல் அவ்வல் - 1437

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது

துணை ஆசிரியர்
கே.எம். இல்யாஸ் ரியாஜி

**தனி இதழ் : ரூ. 20/-**
**ஆண்டுச் சந்தா:**
**உள்நாடு : ரூ. 240/-**
**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு
VAIGARAI VELICHAM
52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Cell.: 8148129887

E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts.


بسم الله الرحمن الرحيم


| | |
|---|---|
| ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தில் நடந்தது என்ன? | 6 |
| மோடி அரசில் காஸ்சிலிண்டர்கள் ஏமாற்றப்படும் ஏழைகள்! | 40 |
| கற்காலம் – ஒரு வரலாற்றுப் பொய் | 43 |
| மோடியை இயக்கும் சக்திகள்! | 45 |
| நெல்சன் மண்டேலாவின் பேரன் இஸ்லாத்தை ஏற்றார் | 48 |
| மௌனத்தின் சாட்சியம் விவாதம் | 50 |
| பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி | 64 |
| எது முதலில்? | 56 |
| முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? | 60 |
| தரீக்குல் குர்ஆன் – | 64 |


“முஃமின்களே! நீதியை நிலைநாட்டுவதில் அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இதுவே இறைவனை அஞ்சி வாழ்வதன் அர்த்தமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் (நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்”

(அல்குர்ஆன்: 5:8)

http:/www.facebook.com / vaigaraivelichammgm

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# முன்னாள் 'மந்திரி' சிதம்பரம் அம்பலப்படுத்திய இரகசியம்

*டெல்லி பல்கலைகழக மாணவர்கள் பெப்ருவரி திங்கள் 9 ஆம் நாள் ஓர் சலாச்சார நிகழ்ச்சியை நடத்தினார்கள்.*

*அதில் நாடாளுமன்ற தாக்குதலில் பலிகடாய் ஆக்கப்பட்ட அப்சல் குருவை நினைவு கூர்ந்தார்கள்.*

*அதில் நாடாளும் பாரதீய ஜனதா கட்சியின் மாணவர் அமைப்பாகிய அகில பாரதீய வித்யார்த் பரீஷத் புகுந்து தேச விரோத முழக்கங்களை எழுப்பினர்.*

*அதேபோல் டெல்லியில் அதே நாளில் நடந்த மற்றொரு அரங்க நிகழ்ச்சியிலும் புகுந்து இந்தியாவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினார்கள். வழக்கம் போல் பழியை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தவர்கள் மேல் போட்டார்கள்.*

*நமது பாசிச அரசும், அதன் பிடியிலிருக்கும் டெல்லி காவல்துறையினரும், டெல்லி பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் கண்ணைய்யா குமார் உட்பட பலரை கைது செய்து, தேச விரோத குற்றங்கள் உட்பட பல பிரிவின் கீழ் வழக்குகளை ஜோடித்தார்கள்.*

*ஆனால் மாணவர் உலகம் பொங்கி எழுந்தது.*

*மக்கள் வெள்ளமென திரண்டு எதிர்ப்பைக் காட்டினார்கள்.*

*நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் ஸதம்பிக்கும் அளவில் வாதங்கள் நடந்தன.*

*இதனிடையே அப்சல் குருவை கொலை செய்யும் போது மத்திய அரசில் அங்கம் வகித்த சிதம்பரம் தன் மௌனம் கலைத்தார். ஓர் இமாலய உண்மையைச் சொன்னார். அது,*

"I said, one can hold an honest opinion that the case was not correctly decided and the degree of involvement of Afzal Guru was not correctly assessed."

*"நான் சொன்னேன் ஒருவர் கண்ணியமானதொரு கருத்தைக் கொண்டவராக இருக்கலாம். அந்த வழக்கு - (நாடாளுமன்ற தாக்குதல் வழக்கு) சரியாக தீர்ப்பளிக்கபடவில்லை. மட்டுமல்ல, அப்சல் குருவுக்கு அதில் என்ன பங்கு என்பதும் சரியாக தீர்மானிக்கப்படவில்லை"* Source : The Hindu - 26.2.2016 and 27.2.2016

*சிதம்பரம் இவ்வளவு நாள்கள் கழித்தாவது இப்படிப் பேசியது ஓர் அரசியல் அறிவிப்புதான்.*

*உண்மையில் நாடாளுமன்ற தாக்குதலில் அப்சல் குருவுக்கு எள்முக்கின் முனை அளவு கூட பங்கேதுமில்லை என்பதே உண்மை. அது இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. (பார்க்க அட்டைப்பட கட்டுரை)*

*இப்படிப் பாதி உண்மையை சொல்லியிருக்கும் முன்னாள் மந்திரி சிதம்பரம் அவர்கள் உள்துறை அமைச்சர் பதவியிலும் இருந்தார்.*

*அப்போது கஷ்மீரில் பட்டப்பகலில் பாதுகாப்புப் படையினரால் கொலை செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்களின் தாய்மார்கள் அந்த இராணுவ அதிகாரிகள் மீது வழக்குத் தொடர்ந்திட அனுமதி கேட்ட போதெல்லாம் அனுமதியை மறுக்கவே செய்தார்.* Source : Widos and Half Widows by Apsana Rhashid.

அந்த இராணுவ அதிகாரிகளுக்கெதிராக அத்தனை ஆதாரங்களுமிருந்தும் அனுமதி மறுத்தார். அன்றும் இன்றும் கஷ்மீர் மக்களுக்கு அநியாயம் செய்தததில் பாரதீய ஜனதா அரசுக்கு எவ்வளவு பங்குண்டோ அதே அளவு பங்கு காங்கிரசுக்கும் உண்டு. அதில் முன்னாள் அமைச்சர் சிதம்பரத்திற்கும் பங்குண்டு. இதனை கஷ்மீரின் பாதி விதவைகள் என்ற நூலில் நாம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

இங்கே, நமது இந்தியாவில் நீதியும், நியாயமும் கிள்ளுக்கீரையாகப் போய்விட்டது. ஆமாம் ஆளுக்கொரு நீதி ஆளைப்பார்த்து நீதி இதைத்தான் மூத்த வழக்கறிஞர் இராஜீவ்தான் இப்படிக் குறிப்பிட்டார்.

பெண்கள், தலீத்கள், முஸ்லிம்கள் இவர்களுக்கு நீதியே கிடைக்காது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு நீதிகிடைக்காது என்பது மட்டுமல்ல, அவர்கள் நீதியின் பெயரால் கொடுமைப்படுத்தவும் படுவார்கள். The Hindu - 29.11.2003

இந்தக் கொடிய நிலை மாறவேண்டுமென்றால் நீதியை அனைத்து நிலையிலும் நிலைநாட்டிடும் கொள்கை ஒன்று ஆட்சிக் கட்டிலில் ஏறிடவேண்டும். எல்லா நிலையிலும் நீதியை நிலை நாட்டிய வழிகாட்டுதலும் வரலாறு இஸ்லாத்திற்கு மட்டுமே உண்டு.

நீதியை நிலைநாட்டுவதற்கான வழிகாட்டுதல் என வருகின்றபோது இஸ்லாம் இதன் அடிப்படை ஆதாரமாக அருளப்பட்ட அருள் மறை குர்ஆன் இப்படிக் கூறுகின்றது.

“முஃமின்களே! நீதியை நிலைநாட்டுவதில் அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இதுவே இறைவனை அஞ்சி வாழ்வதன் அர்த்தமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் (நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்” (அல்குர்ஆன்: 5:8)

வரலாறு என்று வருகின்றபோது,

அன்று என் வீடு இடிக்கப்பட்டுவிட்டது உங்கள் மஸ்ஜித் -ஐ பெரியதாக்கிட எனக்கு நியாயம் வேண்டும் எகிப்திலிருந்து ஒரு முஸ்லிமல்லாத பெண்மணியிடமிருந்து கலீபா உமர் பின் கத்தாப் (ரழி) அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. எகிப்தின் கவர்னரிடம் விளக்கம் கேட்டார்கள், கலீபா உமர் (ரழி) அவர்கள்.

எகிப்தின் கவர்னர் இப்படிப் பதில் சொன்னார், இஸ்லாத்திற்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. பள்ளிவாசலை பெரிதாக்கிட வேண்டும் என்ற நிலை. இந்தப் பெண்மணியிடம் எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் தருகின்றோம் எனச் சொல்லிவிட்டோம். அந்தப் பெண்மணி ஒப்புதல் தரவில்லை. எப்போது வேண்டுமானாலும், அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனக் கூறிவிட்டு அந்தப் பெண்மணியின் வீட்டை இடித்துவிட்டு, பள்ளிவாசலைப் பெரிதாக்கி விட்டேன். அந்தப் பெண்மணி போதிய அளவில் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனப் பதில் சொன்னார்.

இதற்கு கலீபா உமர் (ரழி) அந்த பெண்மணி சம்மதிக்கவில்லையென்றால் மஸ்ஜித் - ஐ இடித்துவிட்டு வீட்டைக் கட்டிக் கொடுங்கள் என ஆணையிட்டார்கள். அவ்வண்ணமே நடந்தது.

இந்தக் கொள்கையும் இந்த வரலாறும் நம் நாட்டு நடப்பாக்கிட அனைவரும் உழைப்போம்.

பாசிசத்தை மாய்ப்போம்!! பாரதத்தைக் காப்போம்!!



# ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தில் நடந்தது என்ன?

இந்தியாவில் இந்துத்துவா ஃபாஸிஸம் தன் வேர்களை ஆழமாக வேரூன்றி விட்டது. அதன் விஷக்கிளைகள் நாடெங்கும் பரவி நிற்கின்றன.

இந்த ஃபாஸிஸத்திற்கு எதிராக சிந்திப்பவர்களுக்கு அது மூன்றே வழியை தான் விட்டு வைத்துள்ளது.

ஒன்று அவர்களை கொலை செய்வது, இரண்டாவது அவர்களை கொடுமைப்படுத்தி தற்கொலை செய்து கொள்ள செய்வது, மூன்றாவது அவர்களுக்கு எதிராக தேச துரோக வழக்கை பதிவது (அரசு எந்திரத்தை பயன்படுத்துவது).

ஆம். இந்த மூன்று வழிகளை தாண்டி வேறு ஒன்றை இந்துத்துவா சிந்திப்பவர்களுக்கு விட்டு வைக்கவில்லை.

இந்தியாவில் சிந்திப்பதும் சிந்திக்க வைப்பதும் கூட தேசத்துரோகமே...

சிந்திப்பதும் சிந்திக்க வைப்பதும் தேசத்துரோகம் என்றால் நாங்கள் சிந்தித்து கொண்டே இருப்போம். சிந்திக்க வைத்துக்கொண்டே இருப்போம்.

“தோழர்களே, நாம் அஞ்ச வேண்டிய, பதட்டப்பட வேண்டிய தேவையில்லை. அவர்களிடம் பெரும்பான்மை இருக்கலாம், நாடாளுமன்றத்தில் நிறைய சீட்டுகள் இருக்கலாம், அரசு இயந்திரம் காவல்துறை,

இராணுவம் இருக்கலாம், இருந்தும், அவர்கள் கோழைகள். அவர்கள் நம்மை கண்டு அஞ்சுகிறார்கள். அவர்கள் நமது போராட்டங்களை கண்டு அஞ்சுகிறார்கள். நாம் சிந்திக்கிறோம் என்பதே அவர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது" என்பது (ஜே.என்.யு மாணவர் சங்கமான DSU தலைவரான உமர் காலித் அவர்களின் வார்த்தைகள்.

"தேச விரோதியாவது அனைத்திலும் எளியது. நீங்கள் சிந்திக்க தொடங்கிவிட்டாலே உங்களுக்கு தேசவிரோதி என்ற முத்திரை விழுந்துவிடும்." என்பது உமர் காலித் அவர்களின் நண்பரின் கூற்று.

சிந்திக்காதே..இது இந்துத்துவா சொல்லித்தரும் பாடம்.

சிந்தியுங்கள்..இது நாம் சொல்லித்தரும் பாடம்.

ஆட்சி அதிகாரம் எல்லாமே அவர்கள் கையில். ஆனாலும் நாம் சிந்திப்பது அவர்களை சிரமத்திற்குள்ளாக்குகிறது. நாம் சிந்திப்பதால் அவர்கள் முட்டாளாகிறார்கள்.

சிந்திக்கும் தளங்கள் அனைத்தையும் அவர்கள் தடுக்கப் பார்க்கிறார்கள். ஆனால் ஆர்ப்பரித்து வரும் கடல் அலையை கைகளால் தடுக்க நினைக்கும் மூடர்களை போல அவர்கள் தோற்கிறார்கள்.

## தேசபக்தர்களும் தேசதுரோகிகளும்

இப்போது சிந்தித்து பாருங்கள்.

வெள்ளையர்களுக்கு வெண்சாமரம் வீசியவர்கள் தேசபக்தர்கள். தேசத்திற்காக வெள்ளையர்களை எதிர்த்தவர்கள் தேச விரோதிகள்.

தேசப்பிதாவை கொன்றவர்கள் தேச பக்தர்கள் அதனை எதிர்த்து குரல் கொடுப் பவர்கள் தேசத்துரோகிகள்.

நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து தேசியக்கொடியை தன் அலுவலகத்தில் ஏற்றாத ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதன் தொண்டர்கள் தேசபக்தர்கள். அதனை மதித்து வாழ்ந்து வரும் நாம் தேசத்துரோகிகள்.

நாடெங்கும் குண்டு வைத்து அப்பாவி மக்களை கொன்று குவித்த இந்துத்துவவாதிகள் தேசபக்தர்கள். கொலை செய்யப்பட்ட நாம் தேசத்துரோகிகள்.

தன் ஆட்சிக்கு கீழ் இருந்த பலகீனமான ஆண்கள், பெண்கள், குழந்தைகளை கொன்று குவிப்பதை ஊக்குவித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து விட்டு இன்று நாட்டின் பிரதான பதவியில் இருப்பவர்கள் தேசபக்தர்கள். கொன்று குவிக்கப்பட்டவர்கள் தேச விரோதிகள்.

இராணுவப்பள்ளிக் கூடங்களை நடத்தி அதில் இந்துத்துவ தீவிரவாதிகளை உற்பத்தி செய்து இராணுவத்திற்குள் அனுப்பியவர்கள் தேசபக்தர்கள். இதனை எதிர்க்கும் நாம் தேசத்துரோகிகள்.

இந்தியாவின் அரசியலமைப்பு சட்டத்தை தூக்கி எறிந்து விட்டு இராணுவ புரட்சியின் மூலம் இந்தியாவின் ஆட்சி பீடத்தை கைப்பற்ற நினைப்பவர்கள் தேச அபிமானிகள். இதனை எதிர்க்கும் நாம் தேச துரோகிகள்.

இதுதான் இந்துத்துவா சொல்லித்தரும் பாடம்.

இந்த பாடத்தை எதிர்த்து குரல் கொடுப்பவர்கள் கொல்லப்படுகிறார்கள். தற்கொலை செய்து கொள்ள நிர்ப்பந்தப் படுத்தப்படுகிறார்கள். தேச துரோக வழக்குகள் பாய்கின்றன.

## தாய்நாடு

இவர்கள் பூகோளரீதியாக பிரிவினைகளை ஏற்படுத்தி எல்லைக்கோடுகளின் அடிப்படையில் நியாய அநியாயத்தை கற்பிக்கிறார்கள். இந்த அடிப்படையிலேயே நம்மை நடக்க சொல்கிறார்கள்.

இது சரி என்றால் பாகிஸ்தானில் உள்ள ஒருவன் அந்த நாடு செய்யும் ஒரு செயலை தவறு என்று கருதினால் அது பாகிஸ்தானுக்கு எதிரான தேச துரோகம். உதாரணத்திற்கு இந்தியாவில் தீவிரவாத செயல்களை பாகிஸ்தான் தூண்டுகிறது என்ற இந்தியாவின் கருத்திற்கு ஒரு பாகிஸ்தான் குடிமகன் ஆதரவு தெரிவித்தால்

அது அந்த பாகிஸ்தானியன் பாகிஸ்தானுக்கு எதிராக செய்யும் தேச துரோகம்.

ஒரு பேச்சுக்கு இப்படி வைத்துக் கொள்வோம், தமிழ் நாடும், கர்நாடகமும் வெவ்வேறு நாடுகள். இப்போது தமிழ் நாட்டிற்கு தண்ணீர் தர மறுப்பதை கன்னடன் ஒருவன் தவறென்று சொன்னால் அது கர்நாடகத்திற்கு செய்யும் தேசதுரோகம். அதில் முழுக்க முழுக்க நியாயமே இருந்தாலும் சரி.

இப்படி தான் நம்மையும் சிந்திக்க சொல்கிறார்கள். இதற்கு மாறாக சிந்திப்பவர்களை தேசதுரோகி என்கிறார்கள்.

ஆனால் நமக்கோ வேறுபாடங்கள் உள்ளன.

**யாதும் ஊரே! யாவரும் கேளிர்!**

உலகில் உள்ள அனைவரும் என் ஊர். உலகில் உள்ள அனைவரும் என்னுடைய உறவுகள். உலகில் எந்த மூலையில் அநியாயம் நடந்தாலும் அது அநியாயம் தான். அது என் சொந்த நாட்டில் நடந்தாலும் அநியாயம் தான். இதுதான் நமக்கு சொல்லிக்கொடுக்கப்பட்டுள்ள பாடம். அறிவார்ந்த பாடம்.

நமக்கு எல்லை கோடுகள் எதுவும் கிடையாது. எல்லாவற்றையும் தாண்டி மனிதம் காக்கப்பட வேண்டும். இதனை பாழ்படுத்துபவர்கள் எத்தனை பெரிய அதிகாரத்தில் இருந்தாலும் அவர்கள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

இப்படி சிந்தித்தவர்கள் தான் கொல்லப்பட்டுள்ளார்கள், தற்கொலை செய்து கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள், தேச துரோக வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

இருப்பினும் ஃபாஸிஸத்தை எதிர்த்து நியாயத்திற்காக பலர் குரல் கொடுத்து தன் இன்னுயிரையும் தந்துக்கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது நம்மை தொற்றிக்கொண்டு நிற்கும் கேள்வி, இதனை நாம் எப்படி எதிர் கொள்ள போகிறோம்? இதனை எதிர்த்து நாம் என்ன செய்ய போகிறோம்?

ஆய்ந்து அறிதல் வேண்டும்... அதற்கேற்ற அஞ்சாமை வேண்டும்...

## முதல் வழி - கொலை செய்யப்பட்டவர்கள்




இதற்கு ஓர் உதாரணம் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் சுட்டுக்கொலை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் கோவிந்த் பன்சாரே அவர்கள்.

மேலும் சில உதாரணங்கள் 2013ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுட்டுக்கொல்லப்பட்ட நரேந்தர தபோல்கர் மற்றும் 2015 ஆகஸ்ட் மாதம் கர்நாடகாவில் சுட்டுக்கொலை செய்யயப்பட்ட சாகித்ய அகாடமி விருது பெற்ற கல்புர்கி அவர்கள்.

இவர்கள் செய்த குற்றமெல்லாம் சிந்தித்தது மற்றும் சிந்திக்க தூண்டியது.

கோவிந்த் பன்சாரே அவர்கள் கர்கரேயை கொலை செய்தது யார்? என்ற புத்தகத்தின் அறிமுக விழாவில் பங்கெடுத்தார். கொலை செய்யப்பட்டார்.

மற்ற இருவரும் இந்துத்துவாவினருக்கு எதிராக குரல் கொடுத்தவர்கள். பாஸிஸம் அவர்களை பலி கொண்டு விட்டது.

இந்த பட்டியலில் இன்னும் பலர் உண்டு.

மேலதிகமான விவரங்களுக்கு வைகறை வெளிச்சம் முந்தைய இதழ்களை படிக்கவும்.



## இரண்டாவது வழி - தற்கொலை செய்து கொள்ள நிர்பந்திக்கப்பட்டவர்கள்

ரோஹித் வெமுலா. இந்த பெயரை யாரும் மறக்க முடியாது.

தீர்க்கமான முகம். நேர்கொண்ட பார்வை. ஆழ்ந்த அறிவு. கவர்ச்சியான பேச்சு. ஆளுமைத்திறன். இவற்றிற்கு சொந்தக்காரரர் தான் ரோஹித் வெமுலா. இவர் ஹைதராபாத் பல்கலைகழகத்தின் ஆராய்ச்சி (பி.எச்.டி) மாணவர். அந்த படிப்பை முடித்திருப் பாரேயானால் அவர் ஒரு ஆராய்ச்சி டாக்டர்.

ஆனால் அவர் ஒரு தலித். அதற்கு மேலும் அவர் ஒரு சிந்தனையாளர். குறிப்பாக இந்தியாவின் உண்மை நிலையை குறித்து சிந்திப்பவர். இது ஒன்றே போதுமாக இருந்தது அவர் உயிர் பறிபோவதற்கு.

அவர் கடந்த 17 ஜனவரி 2016 அன்று தற்கொலை செய்து கொண்டார்(?). அதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்.

இவர் அப்படி என்ன குற்றம் செய்தார்? ஏன் இவர் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்.

இவர் 'யாகூப் மேமனின்' தூக்கு தண்டனையை எதிர்த்தும் அஃப்சல் குருவின் தூக்கு தண்டனையை எதிர்த்தும் குரல் கொடுத்தார். டெல்லி பல்கலைகழகத்தில் காட்டப்படவிருந்த "முசாபர் நகர் பாக்கி ஹை" என்ற ஆவணப்படத்தை தடுத்து தாக்கிய சம்பவத்தை எதிர்த்தும் தாக்குதல் நடத்திய ஏ.பி.வி.பி (அகில பாரதீய வித்யார்த்தி பரீஷத்) என்ற அமைப்பை எதிர்த்தும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்.

இதன் காரணமாக ஏ.பி.வி.பி.யினர் அவர் மீது தாக்குதல் நடத்தினர். மத்திய அமைச்சர் பண்டாரு தத்ராத்ரேயாவும் மத்திய மனிதவளத்துறை அமைச்சர் ஸ்மிருதி ஈரானியும் ஹைதராபாத் பல்கலைகழகத்தின் அதிகாரி களுக்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வலியுறுத்தி கடிதங்கள் எழுதினர்.

ரோஹித் வெமுலாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவருடைய கல்வி உதவித்தொகை நிறுத்தப்பட்டது. மாதம் ரூ.25,000 வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டவுடன் அவருக்கான வாழ்வாதாரம் தடைபட்டு போனது. அவருக்கு மட்டுமல்ல அவருடன் சேர்த்து இன்னும் ஐந்து மாணவர்களுக்கும் கல்வி உதவித்தொகை நிறுத்தப்பட்டது. இதே நிலையில் ஏழு மாதங்கள் வரை ரோஹித் துன்புறுத்தப்பட்டார். இறுதியில் தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

## தற்கொலை செய்து கொண்ட மற்ற தலித் மாணவர்கள்

தலித் மாணவர்களுக்கு எதிராக ஹைதராபாத் பல்கலைகழகம் வழங்கியுள்ள முதல் மரண தண்டனையல்ல இது. இதற்கு முன்னர் 2008ம் ஆண்டு செந்தில் குமார் என்ற தலித் மாணவர் தற்கொலை செய்து கொண்டார். அதன் பின்னர் 2013ம் ஆண்டு பி.ராஜூ என்பரும் மதாரி வெங்கடேஷ் என்பவரும் தற்கொலை செய்து கொண்டனர். இவர்கள் இருவரும் தலித் மாணவர்களே.

செந்தில் குமார் தமிழ்நாட்டை சேர்ந்தவர். பி.எச்.டி மாணவர். இவர் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

பி. ராஜூ தலித் ஸ்டுடண்ட் பெடரேஷன் என்ற அமைப்பில் உறுப்பினர். இவர் தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மதாரி வெங்கடேஷ் இவரும் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டார். இவர் வேதியியல் ஆராய்ச்சி மாணவர்.

கேரளாவில் உள்ள பொறியியல் கல்லூரியில் (Human Resource Development (IHRD) Engineering College)படித்து வந்த ரஜானி எஸ் ஆனந்த் என்பவர் (மலையாள தலித்) 2004ம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டார்.

2007ம் ஆண்டு அஜய் ஸ்ரீ சந்திரா என்பவர் பெங்களூரில் Indian Institute of Science (IISc), Bangalore என்ற கல்வி நிறுவனத்தில் தற்கொலை செய்து கொண்டார். இவரும் தலித்.

ஆக இவர்கள் செய்த முதல் தவறு தலித்தாக பிறந்தது. அடுத்த தவறு சிந்தித்தது.

http://www.thenewsminute.com/article/rohith-vemula-wasn%E2%80%99t-alone-it-not-easy-being-dalit-science-scholar-indian-universities-37838

https:/thedeathof\meritinindia.wordpress.com/2011/04/26/84/

## ரோஹித்தின் கடிதம்

ரோஹித் தன் தற்கொலை கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“என் பிறப்பு ஓர் அபாயகரமான விபத்து....நான் எப்போதும் நெருக்கடியில் இருக்கிறேன்... நான் ஒன்றும் இல்லாத வெற்று...

நான் எப்போதுமே ஓர் எழுத்தாளனாகவே விரும்பினேன். ஓர் அறிவியல் எழுத்தாளனாக... கார்ல் சாகன் போல...ஆனால் கடைசியில் இந்த கடிதம் ஒன்று தான் என்னால் எழுதப்படுகிறது.”

அமெரிக்க விண்ணியல் அறிவியலாளர் கார்ல் சாகன் அவர்களின் மனைவி ஆன் ட்ருயான் தலித் மாணவர்களுக்கு எதிரான கொடுமைகளுக்கு எதிராக தன் கவலைகளை தெரிவித்திருந்தார்.

கவிஞர் அசோக் வாஜ்பாயி என்பவர் ரோஹித் வெமுலாவின் கொலைக்கு கண்டனம் தெரிவித்து தனக்கு வழங்கப்பட்ட டி.லிட். என்ற விருதினை திருப்பியளித்தார்.

ரோஹித் வெமுலாவின் தந்தை மணிக்குமார் தன்னுடைய மகனின் இறப்பு தற்கொலை அல்ல, கொலை என்றும் நீதி விசாரணை தேவை என்றும் கோரியுள்ளார்.

உலகம் முழுவதிலுமுள்ள தலைசிறந்த 131 கல்வியாளர்கள் தங்களது கண்டன கடிதத்தினை ஹைதராபாத் பல்கலைகழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## தேசத்துரோக வழக்குகள்

ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தில் கன்னையா குமார் விஷயத்திலும் இதுவே தான் நடந்தது.

ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தில் நான்கு மாணவர் அமைப்புகள் உள்ளன. அதில் மூன்று முற்போக்கு சிந்தனை கொண்டவை. ஒன்று ஏ.பி.வி.பி அமைப்பு.

ஜவஹர்லால் நேரு பல்கலைகழக மாணவர்கள் அஃப்சல் குரு நினைவு தினத்தில் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். அதில் எழுப்பப்பட்ட கேள்விகள் பிரச்சனைகள் அனைத்தையும் தாண்டி நியாயமானவை. அப்படி தான் முற்போக்கு சிந்தனையாளர்கள் நினைக்கின்றனர்.

1. அஃப்சல் குரு சட்டத்தின் அடிப்படையிலேயோ அல்லது சாட்சிகளின் அடிப்படையிலேயோ குற்றவாளி என தண்டனை விதிக்கப்பட்டவர் அல்ல. அவர் கூட்டு மனசாட்சியின் அடிப்படையிலே குற்றவாளியாக்கப்பட்டவர். கூட்டு மனசாட்சி என்பது யாருடைய கூட்டு மனசாட்சி. இப்படி ஒரு சொல்லாட்சியோ அல்லது கூட்டு மனசாட்சியின் கீழ் தண்டனை வழங்கலாம் என்பதோ இந்திய குற்றவியல் சட்டத்தில் உள்ளதா?

2. ஒருவேளை அஃப்சல் குரு குற்றவாளி என்றே வைத்துக்கொண்டாலும் அவருடைய குடும்பத்தாருக்கு கூட தெரிவிக்காமல் அவரை தூக்கிலிட்டது என்ன நியாயம்?

3. தூக்கிலிட்ட பின்பும் அவருடைய சடலத்தை அவருடைய குடும்பத்தாருக்கு ஒப்படைக்காமல் நடந்து கொண்டது சர்வதேச சட்டங்களுக்கு புறம்பானதாக இல்லையா?

இது போன்ற கேள்விகளே பெரும்பாலும் அந்த நிகழ்ச்சியில் எழுப்பப்பட்டது.

### தேச விரோத கோஷம்

இதற்கிடையே அந்த கூட்டத்தில் திடீரென்று சிலர் புகுந்து இந்தியாவுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பினர். அவ்வாறு கோஷங்கள் எழுப்பியவர்கள் ஏ.பி.வி.பி அமைப்பை சேர்ந்தவர்கள் என்று பின்னர் தெளிவாக ஊடகங்களால் அடையாளம் காட்டப்பட்டது. எனினும் அவர்கள் மீது எந்த நடவடிக்கையையும் டெல்லி காவல்துறை மேற்கொள்ளவில்லை.

தேசத்திற்கு எதிராக கோஷங்கள் எழுப்புபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும், அவர்கள் விட்டு வைக்கப்பட மாட்டார்கள் என முதலில் கொக்கரித்த உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் அறிவிப்புகள் எதுவும் ஏ.பி.வி.பி.யினருக்கு எதிராக பாயவில்லை.

பிஜேபி எம்.பி மகேஷ்கிரி மற்றும் ஆர்.எஸ்.எஸ்.இன் மாணவர் அமைப்பு ஏ.பி.வி.பி போன்றவை டெல்லி காவல் துறையினரிடம் அளித்த புகாரின் அடிப்படை யில் பிரிவு 24ஏ மற்றும் 24 பி இன் கீழ் வழக்கு பதியப்பட்டது. அதன் பின்னர் காவல்துறை தன் கடமையை செவ்வனே நிறைவேற்றியது. ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தின் மாணவர் தலைவர் கன்னையா குமார் தேசதுரோக வழக்கில் கைது செய்யப்பட்டார்.

### ஜீ தொலைக்காட்சி மற்றும் டைம்ஸ் நவ் தொலைக்காட்சி

பின்னர் கன்னையா குமார் பேசிய காணொளி காட்சிகள் சில ஊடகங்களில் தணிக்கை செய்யப்பட்டு, சோடிக்கப்பட்டு (எடிட் செய்யப்பட்டு) சில கோஷங்கள் பின்னணியில் சேர்க்கப்பட்டு ஒளிபரப்பப் பட்டது. குறிப்பாக ஜீ டி.வி என்ற தொலைக் காட்சி சேனல் இந்த சேவையை தேசத்திற்காக தேசபக்தியின் காரணமாக செய்தது. பின்னர் இந்த வீடியோ டைம்ஸ் நவ் என்ற சேனலிலும் ஒளிபரப்பப்பட்டது.

ஆனால் இதனை மற்ற தொலைக்காட்சி சேனல்கள் அப்படியே ஒளிபரப்பாமல் அதனை ஆய்வுக்கு உட்படுத்தின. அதில் என்.டி.டி.வி என்ற செய்தி தொலைக்காட்சி மிகத்தெளிவாக இந்த வீடியோ ஒரிஜினல் வீடியோ அல்ல மாறாக இது கோஷங்கள் சேர்க்கப்பட்ட வீடியோ என்பதை தெளிவாக காட்டியது.

### தணிக்கை செய்யப்பட்ட வீடியோ என்பதை நிரூபித்தது எப்படி?

சாதாரணமாக எந்த விதமான சேர்க்கையும் இல்லாத காணொளியில் இரண்டு படுகைகள் (Layer) இருக்கும். ஆங்கிலத்தில் இதனை லேயர் என்று சொல்வார்கள். ஒன்று ஒளிக்கான லேயர். மற்றொன்று ஒலிக்கான லேயர். அதாவது ஒன்று படத்திற்கான லேயர். மற்றொன்று சத்தத்திற்கான லேயர். இதில் மூன்றாவதாக ஒரு லேயர் தேவைப்பட்டால் நம் தேவைக்கேற்ப சேர்ப்பது தேவையில்லாத சத்தத்தை நீக்குவது இதுதான் வீடியோ எடிட்டிங். இதன்படி மேற்சொல்லப்பட்ட காணொளியை ஆய்வு செய்ததில் மூன்றாவதாக ஒரு லேயர் சத்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இது ஒரிஜினல் வீடியோ இல்லை என்பதற்கு இதுவே ஆதாரம் என என்.டி.டி.வி மிகத் தெள்ளத் தெளிவாக அந்த வீடியோ எடிட்டிங் மென்பொருளை திரையில் காட்டி நிரூபித்தது.

இதன் காரணமாக சேர்க்கை சேர்த்து ஒளிபரப்பிய தொலைக்காட்சியும் அதனை அடியொற்றி நடந்த தொலைக்காட்சியும் பதிலளிக்க திராணியற்று போனது.

பின்னர் ஜீ தொலைக்காட்சி சேனலில் இந்த வீடியோவை நேரடியாக பதிவு செய்த ஊடகவியலாளர் விஷ்வா தீபக் என்பவர் தன் பதவியை ராஜினாமா செய்தார். (இது ஒரு வரலாற்று ஆவணம். அவருடைய கடிதம் தனியாக தரப்பட்டுள்ளது. வாசகர்கள் அவருடைய கடிதத்தை கவனமாக படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்)

அதன் பின்னர் கன்னையா குமாரின் பேச்சு எந்த வித சேர்க்கையும் இல்லாமல் ஒழுங்காக முகநூலின் வாயிலாக வெளிவந்தது. (இதன் தமிழாக்கம் இந்த கட்டுரையில் தனியாக தரப்பட்டுள்ளது.)

இதன் பின்னரும் இந்த இரு நிறுவனங்களும் மன்னிப்பு எதுவும் கோராமல் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

இதில் டைம்ஸ் நவ் தொலைக்காட்சி சேனலின் நெறியாளர் அர்னாப் கோஸ்வாமி நேர்காணலில் ஜவஹர்லால் நேரு பல்கலைகழக மாணவர்கள் செய்தது குற்றமே என இந்த வீடியோவை ஆதாரமாகக் கொண்டு கர்ஜித்தது பின்னர் சந்தி சிரித்தது.

**பாட்லா நீதிமன்ற தாக்குதல்**

இதன் பின்னரும் கன்னையா குமார் அவர்கள் தேச துரோக வழக்கில் கைது செய்யப்பட்டு பாட்லா நீதிமன்றம் கொண்டு வரப்பட்டார். அப்போது அங்கு அவருக்காக ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூடி இருந்தனர். ஊடகங்களும் கூடி இருந்தன.

அப்போது, அங்கு குழுமியிருந்த மாணவர்கள், ஆசிரியர், பத்திரிகையாளர் மீது பாரதீய ஜனதா எம்.எல்.ஏக்கள், அக்கட்சியை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் ஆகியோர் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் மாணவர்களும், தி இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியாளர் உள்ளிட்ட பலர் காயமடைந்தனர். இவற்றை தனது செல்போனில் படமெடுத்த NDTV-யின் பெண் பத்திரிக்கையாளர், பாரதீய ஜனதா ஆட்களால் மிரட்டப்பட்டுள்ளார். “படங்களை அழிக்கா விட்டால், எலும்புகள் முறிக்கப்படும்” என்றும் அந்த பத்திரிக்கையாளர் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

**கோர்ட் வாசலில் மாணவர்கள், பத்திரிகையாளர்களைத் தாக்கிய பாஜக வழக்கறிஞர்கள்!**

இந்நிலையில், கன்னையா குமாருக்கு ஆதரவு தெரிவிக்கும் பொருட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிறுபான்மை அமைப்பின் உறுப்பினர்கள் சிலர் நீதிமன்ற வளாகத்தில் காத்திருந்ததனர். அப்போது நிதியமைச்சர் அருண் ஜேட்லியின் கார், அந்த பக்கமாக செல்வதை பார்த்தவுடன், டெல்லியில் நிலவும் சூழலுக்கு பதில் அளிக்குமாறு கோஷமிட்டனர்.

இதையடுத்து, கம்யூனிஸ்ட் கட்சியின் சிறும்பான்மையின அமைப்பின் உறுப்பினரும், தலைவர்களில் ஒருவருமான அமீக் ஜமேய் என்பவரை, டெல்லி மாநிலத்தின் பாரதீய ஜனதா எம்.எல்.ஏ, ஓ.பி ஷர்மா மற்றும் அவரது ஆதரவாளர்கள் தாக்க தொடங்கினர்.

எம்.எல்.ஏ வைத் தொடர்ந்து, வேறு சிலரும் அடிக்க தொடங்கியதால்,அமீக் ஜமேய் நிலை குலைந்து கீழ விழுந்தார்.

ஆனாலும் , பாரதீய ஜனதா எம்.எல்.ஏ, ஓ.பி ஷர்மாவும் அவரது ஆதரவாளர்களும் அமீக் ஜமேயை வெறி கொண்டு தாக்கி இருக்கிறார்கள். “ரோஹித் வெமுலாவிற்க்காக எத்தனை நாள் போராடுவீர்கள்” என்று கத்தியபடியே தன்னை அடித்ததாக அமீக் தெரிவித்துள்ளார்.

சுமார் 20 நிமிடங்களுக்கு மேலாக அமீக் அடி வாங்கியபோதும், அதை வேடிக்கை பார்த்து கொண்டிருந்த டெல்லி போலீசார், அங்கு ஊடகத்தினர் குவிவதை கண்டதும், அமீக்கை அப்புறப்படுத்தியுள்ளனர்.

காவல் நிலையத்தில், மொபைல் போன்கள் பறிமுதல் செய்யப்பட நிலையில், மூன்று மணி நேரம் உட்கார வைக்கப்பட்ட அமீக்கை, அதன் பின்னரே போலீசார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அமீக்கை எதற்காக அடித்தீர்கள் என்று பாரதீய ஜனதா எம்.எல்.ஏ., ஓ.பி சர்மாவிடம் பத்திரிக்கையாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அதற்கு பதிலளித்துள்ள ஓ.பி.ஷர்மா “துப்பாக்கி இருந்தா அமீக்கை சுட்டிருப்பேன்” என்று கூறியுள்ளார்.

இந்த தாக்குதல்களை எதிர்த்து டெல்லியில் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆனால் இதில் இரண்டு தொலைக்காட்சி நிறுவனங்கள் மட்டும் கலந்து கொள்ள வில்லை. அவை எவை என்பது மக்களுக்கு தெளிவாகவே தெரிந்திருக்கும்.

ஆம். ஜீ டிவியும் டைம்ஸ் நவ் சேனலும் தான் அவை.

### ஜே.என்.யூ மாணவர்கள் தேச துரோகிகளே...டெல்லி காவல்துறை

டில்லி போலிஸ் இரண்டு ஆண்டுகளாகவே ஜே என் யு மாணவர்களை வேவு பார்த்து வந்தது. அவர்கள் மாட்டுக்கறி சாப்பிடுகிறார்கள், துர்கையை வணங்குவதற்கு பதிலாக மகிஷாசுரனை வணங்குகிறார்கள், எனவே அவர்கள் தேசத் துரோகிகள் என்று அது அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இப்போது தெரிகிறதா மோடி அரசாங்கத்திற்கு எது தேசதுரோகம் என்று.

### ஏ.பி.வி.பி தலைவர்கள் ராஜினாமா

இதில் முத்தாய்ப்பு என்னவெனில் ஏ,பி.வி.பி அமைப்பின் ஜவஹர்லால் நேரு பல்கலைகழக பிரிவின் தலைவர்கள் இந்த அநியாயங்களை தாங்க முடியாமல் ராஜினாமா செய்ததுதான்.

ஏ.பி.வி.பி அமைப்பின் இணை செயலாளர் பிரதீப், தலைவர் ராஹுல் யாதவ் மற்றும் செயலாளர் அன்கிட் ஹன்ஸ் ஆகியோர் தாங்கள் இந்த அநியாயங்களை எதிர்ப்பதாகவும் மோடி அரசின் ஊதுகுழல்களாக தாங்கள் இருக்க இயலாது எனவும் கூறி ராஜினாமா செய்துள்ளனர்.

http://indiatoday.intoday.in/story/jnu-abvp-members-resignation-letter-kanhaiya-kumar-sedition/1/599138.html

# பிரச்சனைக்கு காரணமான நாடாளுமன்றத் தாக்குதலின் பின்னணி என்ன?

நாடாளுமன்ற தாக்குதல் (டிசம்பர் 13,2001) மீண்டும் ஒரு முறை விவாதத்திற்கு வந்திருக்கின்றது.

நாடாளுமன்றத் தாக்குதல் உண்மையைச் சொன்னால் முற்றுகைக்கான மொத்தப் பழியையும் அப்சல் குரு என்ற அப்பாவியின் மீது போட்டு அவரை கொலை செய்தது முந்தைய காங்கிரஸ் அரசு.

அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள், ஐயங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டு விட்டது என்பதால் அல்ல. மாறாக நாட்டு மக்களின் மனசாட்சியைத் திருப்திபடுத்திட என்றொரு பொல்லாத தத்துவத்தைக் கண்டுபிடித்து மரண தண்டனை வழங்கியது, மனசாட்சியற்ற உச்ச நீதிமன்றம்.

யாருடைய மனங்களை திருப்திபடுத்தினார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள். இந்தக் கேள்விக்கு நீண்ட நாள்களாகப் பதில் சொல்லிடவில்லை நீதியை பரிபாலிப்பவர்கள்.

ஆனால் அப்சல் குருவை கொலை செய்த காங்கிரஸ் அரசில் அங்கம் வகித்த அமைச்சர் மூத்த வழக்கறிஞர் கபில் சிபால் பாரதீய ஜனதா கட்சியினரை பார்த்து இப்படிச் சொன்னார்.

அப்சல் குருவை தூக்கிலே போட வேண்டும் என எங்களுக்கு அத்துணை அழுத்தம் கொடுத்த நீங்கள், ஏன் இராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்களைத் தூக்கிலே போட குறுக்கே நிற்கின்றீர்கள். அப்படியானால் இந்த நாட்டின் பாசிஸ்ட்டுகளைக் திருப்திப்படுத்துவதுதான் அப்சல் குருவை கொலை செய்ததன் நோக்கம் என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. (TNIE)

இப்போது ஏன் பாசிஸ்ட்டுகளின் மாணவர் அமைப்பாகிய ABVP - அகில் பாரதீய வித்யார்த்தி பரீஷத் ஏன் இப்போது அப்சல்குரு என்றவுடன் அலறுகின்றது? என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம். ஏனெனில் அப்சல் குருவின் தூக்கு விவகாரம் நாட்டில் விவாதமானால் நாடாளுமன்ற தாக்குதல் அல்லது முற்றுகை விவாதமாகும். நாடாளுமன்ற தாக்குதல் விவாதமானால் அந்தத் தாக்குதல் நடந்த போது ஆட்சியில் அமர்ந்திருந்த பாரதீய ஜனதா கட்சியின் தகிடு

தத்தங்கள் அம்பல மாகும். அதில் குறிப்பாக நாடாளுமன்ற தாக்குதல் நடந்த சூழல் வெளிச்சத்திற்கு வரும்.

## 2001இல் நாடாளுமன்றத் தாக்குதல் நடந்த சூழல்

நாட்டை நாங்கள் தாம் நலமாக்கு வோம் என பல நூறு கொலைகளைச் செய்து ஆட்சியைக் கைப்பற்றியது பாரதீய ஜனதா கட்சி. ஆனால் அதனால் எதையும் சாதிக்க இயலவில்லை. மாறாக பல ஊழல்கள் நாடாளுமன்றத்தை உலுக்கிற்று. அதிலும் குறிப்பாக கார்கில் போரில் நமது இராணுவ வீரர்கள் பெருமளவில் உயிரிழந்தார்கள். அவர்களுக்குச் சவப்பெட்டிகளை வாங்கிய தில் பயங்கரமான ஊழல் தலைவிரித்தாடியது. அப்போது இராணுவ அமைச்சராக இருந்த ஜார்ஜ் பெர்னாண்டஸ் பதவி விலகிடும் நிலை.

நாடெங்கும் மக்கள் பாரதீய ஜனதா கட்சி ஆட்சியைக் காறி உமிழ்ந்தார்கள்.

நாட்டிற்காக உயிரைத் தந்தவர்களை அடக்க வாங்கப்படும் சவப்பெட்டியிலுமா ஊழல் செய்வார்கள் இந்தப் பரிவாரக் கும்பல்கள் என அங்கலாயித்தார்கள் மக்கள்.

எங்கே பிணம் விழுந்தாலும் இவர் களுக்கு பணம் தான் என அங்கலாயித்தார்கள் மக்கள்.

இதுவே அப்போதைய நாடாளுமன்ற கூட்டத் தொடரிலும் பெரும் விவாதமானது.

பாரதீய ஜனதா கட்சி அரசு செய்வதறியாமல் திணறிக் கொண்டிருந்தது.

இப்படி நாடாளும்மன்றம் நடக்காமல் போனதில் அப்போதைய உள்துறை அமைச்சர் அத்வானிக்கு ஒரு பெரும் சங்கடம்.

## அத்வானியின் அன்றைய கவலை

ஆமாம்! அப்போதைய உள்துறை அமைச்சர் அத்வானி பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்தவர். வந்த நாளிலிருந்தே சிறுபான்மை முஸ்லிம்களைக் கொன்றொழிப் பதை இலட்சியமாகக் கொண்டவர். இன்றளவும் அவரது 80 ஆண்டு கால வாழ்க்கையில் பல லட்சம் முஸ்லிம்கள் கொலை செய்யப்படுவதற்கு காரணமாக அமைந்தார். குஜராத் இனப்படுகொலை புகழ் மோடியை வார்த்து வளர்த்தெடுத்தவர். இவருடைய கைகளில் நம் நாட்டின் உள்துறை வரப்பெற்றவுடன் சிறுபான்மை யினரை ஒடுக்குவதற்கு ஒரு பொல்லாத சட்டத்தைக் கொண்டு வந்தார். அந்தச் சட்டம்தான் பொடா என்ற Prevention of Terrorism Activities Act - தீவிரவாத செயல்களின் தடுப்புச் சட்டம்.

இந்த சட்டத்தை அவர் அந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் விவாதித்திடவும், நிறைவேற்றிடவுமிருந்தார். ஆனால் அன்றைய நாடாளுமன்ற கூட்டத்தொடரில் சவப்பெட்டி ஊழலே மிகைத்து நின்றது. பிரதமராக இருந்த வாஜ்பேயி செய்வதறியாமல் திணறிக் கொண்டிருந்தார்.

13.12.2001 அன்றும் காலையில், நாடாளும்மன்றம் கூடியது. அதே சவப் பெட்டி ஊழல் தலைவிரித்துத் தாண்டவ மாடியது. நாடாளுமன்றம் காலையில் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

பிரதமர் வாஜ்பேயி நாடாளுமன்றத்தை விட்டு வெளியே போய்விட்டார். எதிர் கட்சித் தலைவி சோனியா காந்தியும் வெளியேறி விட்டார். 11.40 மணிக்கு ஒரு அம்பாசிடர் கார் நாடாளுமன்ற வளாகத்திற்குள் வந்தது. அந்தக் காரை சோதனை செய்யாமல் நாடாளு மன்றத்திற்கு உள்ளே விட்டுவிடுகின்றார்கள். காரிலிருந்து ஒருவர் இறங்கி வெளியே போய்விடுகின்றார். எஞ்சியோர் இறங்கிய வுடன் பாதுகாப்புபடையினர், அவர்களைச் சுடுகின்றார்கள். அவர்கள் ஐந்துபேரும் இறந்து போகின்றார்கள். சில பாதுகாப்புப் படையினரும் மடிகின்றார்கள்.

## நாடு கபளீகரப்படுகின்றது.

உடனே நாடாளுமன்றத்திற்குள் புகுந்தவர்கள் பாகிஸ்தானிலிருந்து வந்த தீவிரவாதிகள் என அத்வானி அறிக்கை விடுகின்றார்.



அடுத்து பொடாவை நிறை வேற்றினால் தான் இதுபோன்ற தாக்குதல்களைத் தடுத்திட இயலும் எனக் கூப்பாடு.

இதன் பின், டெல்லியில் தன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த அப்சல் குரு, டெல்லியின் சிறப்புக் காவல் துறை அலுவலகத்திற்கு இழுத்து வரப்படுகிறார். அங்கு டெல்லி சிறப்புக் காவல் துறையின் 'Delhi's Special Police' அலுவலகத்தில் வைத்து நாட்டு மக்களுக்குக் காட்டப்படுகின்றார். காவல் துறையினர் அவரிடம் நீதானா தாக்குதலை நடத்தியது? எனக் கேட்கின்றார்கள். அவர் இல்லை என்கின்றார். உடனேயே தொலைக்காட்சியில் அது துண்டிக்கப்பட்டு மறைக்கப்படுகின்றது.

உலக வரலாற்றில் ஒரு குற்றவாளியை தொலைக்காட்சியில் விசாரணை செய்தது நாடாளுமன்றத் தாக்குதலில் தான்.

இப்படி குற்றம் சுமத்தப்படுவதற்கு முன்போ, குற்றம் சுமத்திய பின்போ தொலைக்காட்சியில் காட்டுவது சட்டப்படி குற்றம் என்றார்கள் சட்ட வல்லுநர்கள். ஆனால் அத்வானி மோடி வகையறாக்கள் சட்டத்தை எப்போதும் சட்டை செய்ததில்லை.

இப்படி ஐந்தாறு அப்பாவிகளைக் கைது செய்து ஊடகங்களின் முன்னால் காட்டி 'பொடா' என்ற பாசிச பயங்கரவாத சட்டத்தை நடப்பில் கொண்டு வந்தார்கள் அன்று இந்த பாசிஸ்ட்டுகள். இதற்கு முன்னால் இந்த சட்டத்தை நாடாளுமன்றம் இரண்டு முறை நிராகரித்திருந்தது.

இந்த சட்டத்தை கொண்டு வருவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிடத்தான் நாடாளுமன்றத் தாக்குதலை அரசு ஏற்பாடு செய்தது என பின்னர் ஆர்.பி.எஸ். மணி, சந்தீஷ் சர்மா ஆகிய இரு மத்திய அரசின் செயலாளர்கள் பகிரங்கமாக அறிக்கை விட்டார்கள். நீதிமன்றங்களில் பதிவு செய்தார்கள்.

இந்த செய்தியை Times of India ஆங்கில நாளிதழ் தனது 14.7.2013 இதழில் முதல் பக்கத்தில் வெளியிட்டது.

ஆகவே அன்றிருந்த பாரதீய ஜனதா கட்சிதான் நாடாளுமன்றத் தாக்குதலை நடத்தியது. அது பொடா என்ற சட்டத்தைக் கொண்டு வருவதற்காகவே என இரண்டு அரசு செயலாளர்கள் சொன்னார்கள். இந்த உண்மை வெளிவந்த போது பிரதமர் பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த மன்மோகன் சிங் இதை மறுக்கவில்லை, வாய் திறக்கவும் இல்லை.

அதனால் தான் இன்று பாசிச பரிவாரங்கள் தங்கள் மாணவர் அமைப்பை குண்டர்களாகப் பயன்படுத்தி உலகப் புகழும் தரமும் வாய்ந்த டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தை அமர்களப்படுத்தி வருகின்றார்கள். காரணம் அப்சல் குரு தூக்கிலிடப்பட்ட பெரும் பாதகத்தின் பின்னணிகள் தெரிந்திட வந்தால், இவர்களின் கொலைகார அரசியல் வெளிச்சத்திற்கு வந்திடும்.

இவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் அப்சலை தூக்கிலிட்டார்கள்.

தூக்கில்தான் போட்டார்களா? அடித்துக் கொன்றார்களா? யாருக்குத் தெரியும்? ஏனெனில் பிணத்தைக் கூட காட்டிட வில்லையே.

### யார் இந்த அப்சல் குரு?

இவர் கஷ்மீரிலுள்ள ஓர் சராசரி குடும்பத்தில் பிறந்தவர். நன்றாகப் படிப்பவர். மருத்துவ கல்லூரியில் சேர்ந்து மருத்துவராக வேண்டும் என விரும்பியவர். ஆனால் அதற்குரிய பொருளாதார வசதிகளைப் பெற்றிருக்கவில்லை. இதனால் இவருடைய சகோதரர் இவருடைய மருத்துவ படிப்புச் செலவுகளை ஏற்றுக் கொள்ள முன்வந்தார்.

அவர் மருத்துவப் படிப்பைப் படித்துக் கொண்டிருக்கும் போதுதான் கஷ்மீரில் அது நடந்தது.

### ஜனநாயக படுகொலை

1987 இல் கஷ்மீர் சட்டசபைக்குப் பொதுத் தேர்தல் நடந்தது. ஆனால் நமது மத்திய நடுவண் அரசு ஒரு ஜனநாயக படுகொலையை அங்கே நிகழ்த்தியது. ஆமாம் தேர்தல் முடிவுகளில் துணிந்து தில்லு முல்லுகளை நடத்தியது. தோற்றுப் போனவர்களையெல்லாம் வெற்றிப் பெற்றவர்கள் என அறிவித்தது. வெற்றிப் பெற்றவர்களையெல்லாம் தோற்றுப் போனவர்கள் என அறிவித்தது. (Source : 13 December 9 - A Reader with intro by Arundhati Roy). இதனால் கஷ்மீரில் வாழ்ந்த மக்கள் ஒட்டுமொத்தமாகவும் இளைஞர்கள் குறிப்பாகவும் விரக்தியடைந்தார்கள்.

சிலர் ஆயுதந்தாங்கிய போர் ஒன்றுதான் முடிவு, விடிவு என முடிவு செய்தார்கள். அப்படி முடிவு செய்தவர்களில் ஒருவர்தான் அப்சல் குரு. அப்சல் குருவோடு தொடர்பு கொண்டவர்கள். அவரை பயிற்சிக்காக அழைத்து சென்றார்கள். இது பாகிஸ்தானில் நடந்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால் ஆயுதம் தாங்கிய போர்தான் முடிவு என முடிவு செய்தவர்களிடையே பயங்கர கருத்து மோதல்கள். இதனால் அப்சல் குரு விரக்தி அடைந்தார். மீண்டும் தன் இயல்பு வாழ்க்கைக்காக இல்லம் காஷ்மீர் திரும்பினார்.

அப்சல் குரு இப்படி ஆயுதப் பயிற்சிக்காகப் போய், கருத்து வேறுபாடுகளால் மனம் நொந்து திரும்பி வந்திருக்கின்றார் என்ற செய்தி நமது சிறப்புக் காவலர்களின் காதுகளுக்கு வந்தது. Special Task Force - சிறப்புப் படை. இது கஷ்மீரில் மட்டுமே இருக்கின்ற ஒன்று. அவர்கள் அப்சலை இழுத்து வந்து நீ சரணடைந்த போராளிகள் பட்டியலில் இடம் பெற வேண்டும். (Surrendered Militant) என்றார்கள். காரணம், ஆயுதப் போராட்டந்தான் முடிவு எனச் சொல்லி பயிற்சிக்காக சென்ற முஸ்லிம் இளைஞர்களை மீண்டும் கஷ்மீர் கொண்டு வந்தால் இந்த STF என்ற சிறப்புப் படைக்கு பல பதக்கங்கள் பரிசுகள் இவற்றைத் தருவதாக அரசு ஓர் அறிவிப்பை செய்திருந்தது.

இந்த அறிவிப்பால் பயனடைந்திட விரும்பும் சிறப்புப் பாதுகாப்புப் படையினர் சும்மா இருந்த இளைஞர்களையெல்லாம் இழுத்துவந்து அவர்களை சரணடைந்த போராளிகளாகக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

### சரணடைந்த போராளி

அவர்களுக்கு அப்சல் ஒரு வரப்பிரசாதமானார். ஆமாம் அப்சலை சரணடைந்த போராளியாகக் காட்டிய பின் அவருடைய இல்லத்திற்கு அடிக்கடி சென்றார்கள். பணம் பிடுங்கினார்கள். ஒரு விசாரணை என அழைத்து வந்து பல நாட்களாக சித்ரவதைச் செய்தார்கள். அப்சல் இன்னும் பல இளைஞர்களை அழைத்து வந்து சரணடைந்த போராளியாகக் காட்டிட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார்கள். சரணடைந்த போராளி களுக்கு ஒரு சான்றிதழ் வழங்கும் பழக்கம் ஒன்றும் அரசால் அறிமுகப்படுத்தப் பட்டது.

நான் சரணடைந்த போராளியாக ஒத்துக் கொள்கின்றேன். ஆனால் அதற்கான

சான்றிதழைத் தந்திட வேண்டும் என்றார் அப்சல் குரு. சான்றிதழ் வேண்டுமானால் நீ இன்னும் இரண்டு பேரை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும், என நிபந்தனை வைத்தார்கள்.

மேஜர் ராம் மோகன் என்ற இராணுவ அதிகாரிதான் அப்சலை தொடர்ந்து சித்ரவதைப்படுத்தி நிரம்பப் பணத்தையும் கொள்ளை அடித்தார். இவர் 22 ராஷ்டிரிய ரைபிள் என்ற படைப்பிரிவைச் சார்ந்தவர். இவர் தந்த மின் அதிர்வு சித்ரவதையினால் அப்சல் தன் உடல் வலிவை முற்றாக இழந்தார். இரண்டு நண்பர்களை அழைத்து வந்து, தன்னைக் காப்பாற்றும்படியும், இதற்காக அவர்கள் தங்களைச் சரணடைந்த போராளிகளாகக் காட்டிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார் அப்சல். அவர்களும் அப்சலின் அவல நிலையைக் கண்டு அனுதாபப்பட்டார்கள். தங்களைச் சரணடைந்த போராளிகளாகக் காட்டிட முன்வந்தார்கள். சரணடைந்தார்கள்.

ஆனால் நமது காவல்துறையினர் (கஷ்மீரில் இவர்களுக்குப் பாதுகாப்புப் படையினர் என்று பெயர்). அத்தோடு விடவில்லை. கஷ்மீர் மக்களை உளவு பார்த்து அவ்வப்போது தகவல் தந்திட வேண்டும் என நிபந்தனை விதித்தார்.

சரணடைந்த போராளி என்ற சான்றிதழ் கிடைத்தப் பின்னர், அப்சல் மருத்துவ உபகரணங்களை விற்பனைச் செய்யும் ஒரு வியாபாரியாக மாறினார். வியாபாரம் நன்றாகவே நடந்தது. திருமணமும் செய்து கொண்டார். ஒரு மகனும் பிறந்தான். ஆனால் கஷ்மீர் காவல்துறை, சிறப்புப் படை எஸ்.டி.எஃப் (STF) பாதுகாப்புப்படை என்ற பெயரில் உலவும் இராணுவம், இவர்களுக்கு லஞ்சம் கொடுத்து முடியவில்லை. அவர் களுக்குக் கப்பம் கட்டியே வளர்ந்து வந்த வியாபாரம் நலிந்தது. இதில் வெந்த புண்ணிலே பாய்ச்சப்பட்ட வேல் என்ன வெனில் கப்பத்தையும் வாங்கிக் கொண்டு நடுஇரவில் வந்து அடிக்கடி அழைத்துச் சென்று சித்ரவதை செய்தார்கள். இதைத் தான் அப்சல் குருவாலும், அவனுடைய குடும்பத்தவர்களாலும் பொறுத்துக்கொள்ள இயலவில்லை.

இறுதியாக காவல்துறை, பாதுகாப்புப் படை, சிறப்புப் படை இவற்றிடம் ஒட்டுமொத்தமாக எங்களை விட்டுவிடுங்கள். நாங்கள் எங்காவது போய் பிழைத்துக் கொள்கின்றோம் என முறையிட்டார்கள் அப்சல் குருவின் குடும்பத்தினர். அப்படி யானால் நாங்கள் கேட்கும் பணத்தை தந்து விட்டுப் போ என்றார்கள் சிறப்புப் படையினர்.

இந்தப் பெரும் பேரத்தில் டி.எஸ்.பி., உதவிக் காவல்துறை கண்காணிப்பாளர், வினைய் குப்த்தா - டி.எஸ்.பி., தரிந்தர் சிங் ஆகியோர் ஈடுபட்டார்கள். ஒட்டுமொத்தமாக ஒரு லட்சம் ரூபாய் வேண்டும் எனக் கேட்டார்கள். எங்களால் கற்பனை செய்து கூட பார்க்கமுடியாத தொகைதான் ஒரு லட்சம். எவ்வளவோ கெஞ்சி பார்த்தார்கள். ஒரு 50,000 ரூபாயோடு விட்டுவிடுங்கள் என்றார்கள். ஆனால் அதிகாரிகள் கேட்கவில்லை.

இந்தக் காட்டுமிராண்டி அதிகாரிகள் கேட்கவில்லை என்பது மட்டுமல்ல. அவர்கள் பணத்தைப் பிடுங்க மிகவும் கீழ்த்தரமான நடவடிக்கைகளில் இறங்கி னார்கள்.

ஒரு நாள் இரவுப் பொழுதில் வந்து அப்சல் குருவை அழைத்துச் சென்றார்கள் (HumHama STF Camp) ஹும்ஹாமா சிறப்புப் படை முகாமிற்கு அழைத்துச் சென்று சித்ரவதைகளைத் தொடங்கினார்கள். அந்த சித்ரவாதைகளை அப்சல் குருவால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. அந்த அதிகாரிகள் கேட்ட ஒரு லட்சம் ரூபாயை ஒத்துக் கொண்டார்.

அப்சல் குருவின் ஸ்கூட்டர், மனைவியின் ஆபரணங்கள், வீட்டில் விலை போகும் என்ற அளவில் உள்ள தட்டுமுட்டுச் சாமான்கள் அனைத்தையும் விற்றார்கள். ஒரு

லட்சம் ரூபாயைத் திரட்டி டி.எஸ்.பி. வினைய் குப்தாவின் கைகளில் தந்தார்கள். கஷ்மீரை விட்டு வெளியே வந்து ஏதேனும் பிழைப்பைத் தொடங்கலாம் என முடிவு செய்தார்கள்.

வேறு இடத்திற்கு சென்றால் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழலாம். தனது குழந்தைகளுக்கும் சிறந்த கல்வியைத் தந்து அவர்களையும் வாழ வைத்திடலாம் என டெல்லி நோக்கித் தன் குடும்பத்தோடு பயணமானார் அப்சல் குரு.

அங்கே மெத்த சிரமப்பட்டு தன் வாழ்க்கையைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தார். மனைவி தபசும் அவனுக்கு உதவி செய்து கொண்டிருந்தாள்.

## கனவு கலைந்தது

இப்படி மெத்த சிரமத்தோடு நடந்த அவர்களின் வாழ்க்கை மீண்டும் சூறாவளி ஆனது.

ஆமாம் கஷ்மீரின் சிறப்புக் காவல் படையும், டெல்லியின் சிறப்புக் காவல் படையும் (Special Police) (அதில் உதவி ஆணையராக இருந்த இராஜ்பிர் சிங் என்பவரும்) நமது அரசுக்காக பொடாவைக் கொண்டு வருவதற்காக நாடாளுமன்றத் தாக்குதலை நடத்தியிருந்தார்கள். அதற்கு சில முஸ்லிம்கள் மீது பழிபோட்டிட திட்டமிட்டிருந்தார்கள். அப்படி பழிபோட்டவர்களில் ஒருவர்தான் அப்சல் குரு!

ஆக ஒரு நாள் இரவு அப்சலும் அவன் குடும்பத்தினரும் தூங்கிக் கொண்டிருக்கும் போது கஷ்மீரின் சிறப்புக் காவல் துறையினர் அவரை அழைத்துச் சென்றார்கள். அவர்கள் ஏற்கெனவே நாடாளுமன்றத் தாக்குதலை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கஷ்மீரிலுள்ள சிறப்புக் காவலர்களும், டெல்லி ஸ்பெஷல் போலீசும் ஏற்பாடு செய்திருந்த தாக்குதலுக்குப் பொறுப்பேற்க சதி என்றொன்றை உருவாக்கி அதில் அப்பாவி அப்சல் குரு, டெல்லிப் பல்கலைக்கழக பேராசிரியர் SAR ஜீலானி முதலானவர்களை இணைத்தார்கள்.

அதன் பின் எல்.கே. அத்வானியின் நெருங்கிய நண்பர் டெல்லி காவல்துறையின் உதவி ஆணையர் இராஜ்பிர் சிங், கஷ்மீரின் சிறப்புக் காவலர்கள், இவர்கள் பல ஆதாரங்களை சாட்சியங்களை உருவாக்கினார்கள்.

சும்மா இருந்த டெல்லி பல்கலைக்கழக பேராசிரியர் SAR ஜிலானி அவர்கள்தாம் Master Mind மூல மூளை என வருணித்து கீழ் நீதிமன்றத்தில் மரண தண்டனை வழங்கப்பட்டு பின்னர் உயர்நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

பொடா என்ற காட்டுமிராண்டி சட்டத்தின் கீழ் நாடாளுமன்றத் தாக்குதலைக் கொண்டு வந்தார்கள். நாடாளுமன்றத் தாக்குதல் நடக்கும் போது டிசம்பர் 13, 2001 அன்று பொடா சட்டம் செயலில் இல்லை. நாடாளுமன்ற தாக்குதலை நடத்தி நாட்டில் பெரிய தீவிரவாதம் தலை விரித்தாடுகின்றது எனப் பூச்சாண்டி காட்டித்தான் பொடாவை 2002இல் கொண்டு வந்தார்கள். ஆனால் பொடாவின் கீழ் 2001-இல் நடந்த நாடாளுமன்றத் தாக்குதலைக் கொண்டு வந்தார்கள். இந்தப் பொடாவின் கீழ் ஒருவர் வழங்கும் வாக்குமூலம் செல்லும். சாதாரன சூழ்நிலையில் செல்லாது.

இந்த வாக்கு மூலங்களைப் பயன் படுத்தியும் நாடாளுமன்றத் தாக்குதலில் இறந்தவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் செல்போனில் SAR ஜிலானி, அப்சல் குரு ஆகியோர் பேசியதாகவும் இட்டுக்கட்டித்தான் தண்டித்தார்கள்.

இதற்காக இவர்களின் செல் போனிலுள்ள 'சிம்' கார்டுகளை குளோனிங் முறை மூலம் நகல் எடுத்து அதில் தங்களுக்குத் தேவையான உரையாடல்களை திணித்திருந்தார்கள்.

ஆனால் இவற்றில் எதுவும் நீதிமன்றங்களில் நிற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் சட்ட அமைச்சர்கள்

முன்னாள் சட்ட அமைச்சர்கள் ஷாந்தி பூஷன் அவர்களும், இராம் ஜெத்மாலினி

அவர்களும் இந்த வாக்கில் நீதிமன்றங்களில் ஆஜராகி வாதித்தார்கள். அதில் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

“இது சாட்சியங்களே இல்லாத ஒரு வழக்கு. இந்த வழக்கில் பொய்யாக சாட்சியங்களைத் தயார் செய்த டெல்லி சிறப்புக் காவலர் இராஜ்பிர் சிங்- ஐயும் அந்த பொய் சாட்சியங்களைக் கண்ணைப் பொத்திக் கொண்டு ஏற்றுக் கொண்ட சிறப்பு நீதிமன்ற நீதிபதி திங்காரவையும் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 195-199 கீழ் சிறை பிடிக்காத வரை இந்த நாட்டின் சிறுபான்மையினர் நமது நீதி பரிபாலனத்தில் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்.” (ஆதாரம் : December 13, Terror Over Democracy)

உச்சநீதிமன்றத்திலும் இந்த வழக்கு நிற்கவில்லை. அரசு தரப்பில் சமர்ப்பிக்கப் பட்ட எல்லா சாட்சியங்களும் நிராகரிக்கப் பட்டன.

சிலருடைய மன சாட்சியைத் திருப்தி படுத்திடவே அப்சல் குருவை தூக்கி லிட்டார்கள்.

இந்தத் தூக்கு பகிரங்கமான அரசியல் பயங்கரவாதம். அதனால் தான் இதுபோன்ற நாட்டை உலுக்கும் விவகாரங்களில் சாதாரணமாக மேற்கொள்ளும் பொது விசாரணை கமிஷன் அமைத்து விவாதிக்க வில்லை.

### டெல்லி சிறப்புக் காவலர்கள் ஏன் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் விஷயத்தில் அவசரம் காட்டுகின்றார்கள்.

ஆமாம் அப்சல் குருவின் கொலை, நாடாளுமன்ற தாக்குதல், இவை எங்கே விவாதமாக ஆனாலும் டெல்லிக் காவல் துறையினர், கஷ்மீரின் சிறப்புக் காவலர்கள் இவர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு அடாவடித் தனங்களை அவிழ்த்து விடுவார்கள். காரணம் ஒரு முழு அளவு விசாரணையை அவர்களால் தாக்குப் பிடித்திட இயலாது. ஏனெனில் அவர்கள் சிக்கிக் கொள்வார்கள். சிறை பிடிக்கப் படுவார்கள். நம் நாட்டு நீதிபரிபாலனம் சிறப்பாக இருந்தால், அவர்கள் நிச்சயமாகத் தண்டனையையும் பெறுவார்கள்.

ஆனால் நம் நாட்டு நீதிபரிபாலனம் அத்துணை நேர்மையானதாகவே, மார்ச்சர்யங் களுக்கு அப்பாற் பட்டவையாகவோ இல்லை.

இனி வரும் நாட்களில் இன்னும் மோசமானதாக இருக்கும் காரணம் மோடித் தனக்கு வேண்டியவர்களை நீதித்துறையில் அமர்த்தி இருக்கின்றார்.

**எம்.ஜி.எம்.**

### நீதிக்கான போராட்டம்

### நாடாளுமன்றத் தாக்குதல் : அருந்ததிராய் எழுப்பும் 13 கேள்விகள்

1. நாடாளுமன்றத் தாக்குதல் நடப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பிருந்தே காவல்துறையும் மத்தியில் ஆட்சி செய்து கொண்டிருந்த ஃபாசிஸ அரசாங்கமும் ஓர் அறிவிப்பைச் செய்துகொண்டே இருந்தன. அது, நமது நாடாளுமன்றம் தாக்கப்படலாம் என்பதே. 2001ம் ஆண்டு டிசம்பர் 12ம் நாள், பாதுகாப்பு அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனையில் (Informal Metting) நிச்சயமாக நமது நாடாளுமன்றம் தாக்கப்படும் என்று அன்றைய பிரதமர் வாஜ்பேய் திட்டவட்ட மாக ஓர் எச்சரிக்கையை விடுத்தார்.

டிசம்பர் 13ம் நாள் நாடாளுமன்றம் தாக்கப்பட்டது. இந்தப் பின்னணியில் நாடாளுமன்றத்தைப் பாதுகாக்க பாதுகாப்புப் படையினருக்குக் கடுமையான பயிற்சிகள் வழங்கப்பட்டன. நாடாளு மன்றத்தைச் சுற்றி சிறப்புக் காவல்கள் போடப்பட்டன. இந்நிலையில் வெடி குண்டுகள் நிறைந்த கார் ஒன்று எப்படி நாடாளுமன்ற வளாகத்திற்குள் நுழைந்தது?

2. நாடாளுமன்றத் தாக்குதல் நடந்தவுடன் டெல்லியில் இயங்கும் சிறப்புக் காவல்படைப் பிரிவு இந்த நாடாளுமன்றத்



தாக்குதல் லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முஹம்மத் போன்ற அமைப்புகளின் திட்டமிட்ட செயல் என்று அறிவித்தது. அத்தோடு இந்தத் தாக்குதல் முஹம்மது என்பவரால் தலைமையேற்று நடத்தப்பட்ட தாக்குதல் என்றது. இந்த முஹம்மது என்பவர்தான் 1998ல் இந்திய விமானம் ஐ.இ.814ஐ கடத்தியவர் என்றும் அறிவித்தது. வழக்கு முடிந்த போது இவை எதுவுமே எந்த நீதிமன்றத்திலும் நிரூபிக்கப்படவில்லை. இதுதான் உண்மை நிலை என்றால் இவர்களால் எப்படி நாடாளுமன்றத் தாக்குதல் நடந்தவுடன் இதுபோன்ற அறிவிப்புகளை செய்ய முடிந்தது? அப்படி அறிவிக்க இவர்களிடம் என்ன அத்தாட்சி இருந்தது?

3. நாடாளுமன்றத் தாக்குதல் நடைபெற்ற போது அதனை முழுமையாக நாடாளுமன்ற வளாகத்திலுள்ள கேமராக் களாலும் நாடாளுமன்ற அரங்கிற்குள்ளிருந்த (Close Circuit TV - CCTV) க்கேளாஸ் சர்க்யூட் டி.வி. என்ற சி.சி.டி.வி.களாலும் பதியப்பட்டு நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கபில் சிபால் இந்தத் தொலைக்காட்சிப் பதிவை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போட்டுக் காட்ட வேண்டும் என அன்று நாடாளு மன்றத்தில் குரல் கொடுத்தார். அவரை அப்போதைய மேல் சபையினர் துணைத் தலைவர் நஜ்மா ஹெப்துல்லா ஆதரித்தார். நஜ்மா ஹெப்துல்லா அவர்கள் நாடாளு மன்றத் தாக்குதல் குறித்த விளக்கங்களில் பல குழப்பங்கள் இருக்கின்றன என்றும் கூறினார். காங்கிரஸ் தலைமைக் கொறடாவான பிரியரஞ்சன் தாஸ் முன்ஷி அவர்கள், "நாடாளுமன்றத்தைத் தாக்க வந்த காரிலிருந்து 6 பேர் இறங்கிப் போவதை நான் பார்த்தேன், ஆனால், ஐந்து பேர் மட்டுமே கொல்லப் பட்டார்கள். நாடாளுமன்ற வளாகத்தின் தொலைக்காட்சிப் பதிவுகள் (CCTV) தெளிவாக 6 பேரைக் காட்டியது" என்று கூறினார். தாஸ் முன்ஷி சொல்வது சரியானதுதான் என்றால் காவல்துறையினர் ஏன் ஐந்து பேர்கள்தான் காரில் வந்தனர் என சாதிக்கின்றனர்? அந்த ஆறாவது நபர் யார்? அவர் இப்போது எங்கே இருக்கின்றார்? அந்தத் தொலைக்காட்சிப் பதிவை ஏன் காவல்துறை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க காவல்துறை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வில்லை? அதை ஏன் பொதுமக்களுக்குக் காட்டவில்லை?

4. இது போன்ற கேள்விகளை அப்போது நாடாளுமன்றத்தில் எல்லோரும் எழுப்பினார்கள். ஆனால் உடனேயே நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திப் போடப்பட்டது. அது ஏன்?

5. நாடாளுமன்றம் தாக்கப்பட்ட உடன் அப்போதைய அரசு நாடாளுமன்றத் தாக்குதலில் பாகிஸ்தானின் கை இருக்கின்றது என்பதற்கு மறுக்கவியலாத சாட்சியங்கள் இருப்பதாக அறிவித்தது. அதோடு 50 லட்சம் படை வீரர்களை இந்தியா - பாகிஸ்தான் எல்லையை நோக்கிக் கொண்டு சென்றது. இந்தியத் திருநாடு ஓர் அணு ஆயுதப் போரை சாதிக்க வேண்டிய கட்டயாத்திற்கு ஆளானது. அஃப்சல் என்பவரை சித்ரவதை செய்து வாங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றைத் தவிர இவர்களிடம் என்ன அத்தாட்சி இருந்தது. இந்த ஒப்புதல் வாக்குமூலம் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. இவர்கள் தங்களிடம் இருப்பதாகச் சொன்ன அந்த மறுக்க முடியாத அத்தாட்சி என்ன?

6. டிசம்பர் 13அன்று நாடாளுமன்றத் தாக்குதல் நடப்பதற்கு முன்பே பாகிஸ்தானின்

எல்லையை நோக்கி படைகளை நகர்த்தியதாக பல செய்திகள் கூறுகின்றன. இது உண்மையா? பொய்யா?

7. நமது படைகளை போர் பீதியுடன் ஒரு வருடத்திற்கு பாகிஸ்தானின் எல்லையில் நிறுத்தி வைத்திருந்தோம். இதற்கு நாம் செய்த வீண் செலவு எவ்வளவு? இதில் நமது இராணுவ வீரர்கள் எத்தனை பேர் மாண்டார்கள்? கன்னி வெடிகளை நாம் சரிவரக்கையாளாததால், இறந்த படை வீரர்கள் எத்தனை பேர்? இறந்த குடிமக்கள் எத்தனை பேர்? நமது இராணுவ வாகனங்கள் இடித்துத் தகர்த்ததால் உயிரிழந்த கிராம வாசிகள் எத்தனை பேர்? கழனிகளில் கன்னி வெடிகளை புதைத்ததால் உயிரிழந்த நமது விவசாயிகள் எத்தனை பேர்?

8. கிரிமினல் வழக்கு ஒன்றில் புலன் விசாரணை மேற்கொள்ளும் போது சம்பவம் நடந்த இடத்தில் கிடைக்கின்ற தகவல்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க காரணமாக அமைந்தது எப்படி என்பதை நிரூபிக்க வேண்டியது காவல் துறையின் கடமை. அவ்வாறு இருக்க காவல்துறையினர் முஹம்மது அஃப்ஸல் அவர்களைக் குற்றவாளி என எப்படிக் கண்டுபிடித்தனர்? காவல்துறையின் சிறப்புப் பிரிவு S.A.R. ஜீலானி என்பவர் மூலமாகத்தான் அஃபஸலைக் கண்டுபிடித்ததாக கூறுகின்றது. ஆனால் அஃப்சலைக் கைது செய்வதற்கான அவசர செய்திகள் ஜீலானி அவர்களைக் கைது செய்வதற்கு முன்பே அனுப்பப்பட்டு விட்டன. அவ்வாறு இருக்க எப்படி காவல்துறையினர் அஃப்சலை நாடாளுமன்றத் தாக்குதலில் சம்மந்தப்படுத்துகின்றனர்.

9. காவல் துறையும் நீதிமன்றங்களும் அஃப்ஸல் நமது பாதுகாப்பு படையினரிடம் சரண் அடைந்த ஒரு போராளி என்றும் அவர் ஜம்மு காஷ்மீரின் STF (Special Task Force) சிறப்புக் காவல்படையின் கண்காணிப்பில் இருந்தவர் என்றும் ஒத்துக் கொள்கின்றன. அப்படி இருக்க தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஒருவர் எப்படி நாடாளுமன்றத்தையே தாக்குகின்ற பெரும் சதியில் ஈடுபட முடியும். இதற்கு சிறப்புக் காவல்படையினர் தரும் விளக்கம் என்ன?

10. லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முஹம்மது போன்ற அமைப்புகள் கஷ்மூரின் சிறப்புக் காவல்படையின் கீழ் இருந்த ஒருவரை அதிலும் குறிப்பாக சிறப்புக் காவல் படையினரால் சித்ரவதைகளுக்கு ஆளாக்கப் பட்ட ஒருவரை நம்பி நாடாளுமன்றத் தாக்குதல் போன்ற பெரும் பணிகளில் இறங்குவார்களா?

11. தன்னுடைய வாக்குமூலத்தில் அஃப்ஸல் என்பவர் தனக்கு முஹம்மது என்பவரை அறிமுகப்படுத்தியவர் தாரீக் தான் என்று கூறியுள்ளார். இந்த தாரீக் என்பவர்தான் முஹம்மது என்பவரை டெல்லிக்கு அழைத்து வரும்படி கூறியதாகவும் கூறுகிறார். தாரீக் என்பவரின் பெயர் காவல் துறையினர் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையிலும் இடம் பெற்றுள்ளது. இந்தத் தாரீக் என்பவர் யார்? அவர் இப்போது எங்கே இருக்கின்றார்?

12. 2001 டிசம்பர் மாதம் 19ம் நாள், அதாவது நாடாளுமன்றத் தாக்குதல் நடந்து ஆறு நாட்களுக்குப் பிறகு, மஹாராஷ்டிராவில் உள்ள ‘தானே’ மாநகரக் காவல்துறை ஆணையர் எஸ்.எம். சங்காரி என்பவர் ஓர் அறிவிப்பைச் செய்தார். அந்த அறிவிப்பில், “நாடாளுமன்றத் தாக்குதலின் போது சுட்டுக் கொல்லப்பட்ட முஹம்மது யாசீன் ஃபதா முஹம்மத் (என்ற அபூ ஹம்ஸா) என்பவர் லஷ்கர்-இ-தொய்பாவைச் சார்ந்தவர். அவரை நான் மும்பையில் நவம்பர் 2000ல் கைது செய்தேன். கைது செய்தவுடன் அவரை ஜம்மு கஷ்மீர் காவல்துறையிடம் ஒப்படைத்தேன்” என்று கூறினார். தன்னடைய வாக்குமூலத்தை உறுதிப்படுத்தும் வகையிலான வலுவான ஆதாரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார். மஹாராஷ்டிரா காவல்துறை ஆணையர் சங்காரி என்பவர் சொல்வது உண்மையானால் ஜம்மு-காஷ்மீர் காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட முஹம்மது யாஸின் எப்படி நாடாளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்டிருக்க முடியும்?

காவல்துறை ஆணையர் சங்காரி என்னபவர் கூறுவது பொய்யாக இருந்தால் முஹம்மது யாஸின் என்பவர் எங்கே இருக்கிறார்?

நாடாளுமன்றத் தாக்குதலில் சுட்டுக் கொல்லப்பட்ட 5 பேரும் யார்? யார்? என்பதை இன்றும் நாம் கண்டுபிடிக்க வில்லையே ஏன்?

13. இந்த வினாக்களை எழுப்பும் அருந்ததிராய், "இவற்றை ஆழமாக ஆராய்கின்ற போது நாடாளுமன்றத் தாக்குதலில் பாதுகாப்புப் படையினரின் (குறிப்பாக ஜம்மு கஷ்மீர் எஸ்.டி.எஃப்ன்) கரங்கள், உதவிகள், ஈடுபாடுகள் ஆகியவை இருப்பது தெளிவாக தெரிகின்றது" என்கின்றார். அத்தோடு இந்தச் செய்திகள் நமக்குள் அதிர்ச்சியையோ, ஆச்சரியத்தையோ ஏற்படுத்த வேண்டாம். அரசாங்கங்களும், புலனாய்வுத்துறைகளும் இதுபோன்ற யுத்திகளைக் கையாண்டு தங்களுடைய இலக்குகளை அடைந்து கொள்வது வரலாற்றில் நிரம்பவே நடந்திருக்கின்றது. 1933ல் ஜெர்மனியில் (Reichstag) ரீசஸ்டாக் என்பதை கொளுத்தித்தான் நாஜிகள் ஆட்சியைப் பிடித்தார்கள். அதே போல் தான் ஐரோப்பாவின் உளவுத்துறையினர் இத்தாலி யில் ரெட் பிரிகேட் என்ற போராளிக் குழுவை மக்கள் மன்றத்தில் தீவிரவாதிகளாகக் காட்டினார்கள். பின்னர் அழித்தார்கள். மேலே உள்ள கேள்விகளை அரசாங்கத்தை நோக்கிவிடுத்து விட்டு அருந்ததிராய் கூறுகின்றார்.

"இதற்கு நாம் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் பதிலெல்லாம் வெறும் மௌனம் மட்டும் தான்". அருந்ததிராய் மேலும் கூறுகின்றார்,

அஃப்ஸலைத் தூக்கில் போட்டே ஆக வேண்டும் என்பதற்காக பா.ஜ.க. பல்வேறு கீழ்தரமான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றது. எம்.எஸ்.பிட்டா (M.S. Pitta) என்ற அகில இந்திய தீவிரவாதத்திற்கு எதிரான அமைப்பை நடத்துபவர் நாடாளுமன்றத் தாக்குதலின் போது இறந்த பாதுகாப்புப் படையினரின் குடும்பங்களை அணுகி அவர்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளை அரசாங்கத்திடம் திருப்பிக் கொடுத்துவிடும் படி மிரட்டி வருகிறார், அல்லது அஃப்ஸலை உடனேயே தூக்கில் போட வேண்டும் என அரசாங்கத்தை கட்டாயப்படுத்தி வருகின்றார். பத்திரிகைகள் பலவும் இதே மாதிரி எழுதி வருகின்றன. ஸ்வபன் தாஸ் குப்தா என்ற எழுத்தாளர் அஃப்ஸலை தூக்கில் போடவில்லை என்றால் தசரா துர்கா போன்ற பண்டிகைகளையோ, பூஜையோ நடத்துவது அர்த்தமற்றது என்று கூறுகின்றார். இவர்கள் உண்மைகளை மறைக்கின்றார்கள், பொய்யை நிலைநாட்ட எழுதுகின்றார்கள். இதன் மூலம் வகுப்புவாதத்திற்கு தூபம் போடுகின்றார்கள். இவ்வாறு அருந்ததிராய் 'டிசம்பர் 13- ஒரு மறு ஆய்வு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அவுட்லுக் என்ற ஆங்கில வார இதழில் (30 October 2006) அஃப்ஸலைத் தூக்கிலிடாதே என்ற கட்டுரையில் அருந்ததிராய் கூறுகின்றார்:

அஃப்ஸல், ஷவ்கத் ஆகிய இருவரையும் தேடச் சொல்லும் செய்தி ஸ்ரீநகர் காவல்துறையினருக்கு டிசம்பர் 15 காலை 5.45க்கு வந்ததாக நீதிமன்ற ஆவணங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் தில்லி காவல்துறை ஆவணங்களின்படி ஜீலாணி டெல்லியில் டிசம்பர் 15 காலை 10 மணிக்குத்தான் - அதாவது நான்கு மணி நேரம் கழித்தே - கைது செய்யப்பட்டார். இந்த முரண்பாட்டை அவர்களால் விளக்க முடியவில்லை. காவல்துறையின் கூற்றில் பொருள் முரண் இருப்பதாகப் பதிவு செய்யும் உயர்நீதிமன்றத் தீர்ப்பு, இது உண்மையும் அல்ல என்று பலமாகத் தெரிவிக்கிறது. எதற்காக டெல்லி காவல்துறை பொய் சொல்ல வேண்டும் என்கிற கேள்வி கேட்கப்படாமலும் பதிலற்றும் உள்ளது.

**ஆதாரம் :13, December - A Reader The Strange Case of the Attack on the Indian Parliament.**

**ஆங்கிலம் தெரிந்த வாசகர்கள் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டிய நூல்**

# கன்னையா குமார் பேசியது என்ன?

**ஜவகர்லால் நேரு பல்கலையின் மாணவர் கூட்டமைப்பின் தலைவர் கன்னையா குமார், கடந்த வியாழனன்று அப்பல்கலையில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார். அடுத்த நாள் இந்தியாவுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டதற்காக பிரிவினைக் குற்றத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டார்.**

**வியாழனன்று அவர் நிகழ்த்திய உரையின் மொழியாக்கம் இது...**

"காவிகள்தான் இந்தியாவின் தேசியக் கொடியை எரித்தவர்கள். ஆங்கிலேயரிடம் மன்னிப்புக் கேட்ட சாவர்க்கரின் சீடர்கள் அவர்கள். ஹரியானாவில் கட்டார் தலைமையிலான பாஜக அரசு பகத் சிங் பெயரைத் தாங்கியிருந்த விமான நிலையத்திற்கு ஒரு சங் பரிவாரைச் சேர்ந்த நபரின் பெயரை சூட்டியுள்ளது.

எங்களுக்குத் தேசபக்தி சான்றிதழை ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் தர வேண்டியதில்லை என்றே சொல்லுகிறேன். இவர்கள் நம்மைத் தேசியவாதிகள் என்று அங்கீகரிக்கத் தேவையில்லை. நாம் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள். இந்தத் தேசத்தை மனதார நேசிக்கிறோம். இந்த நாட்டின் எண்பது சதவிகித ஏழைகளுக்காக நாம் போராடுகிறோம். இதுவே எங்களைப் பொறுத்தவரை தேசத்தை வழிபடுவது ஆகும்.

நாங்கள் அண்ணல் அம்பேத்கர் மீது முழுப் பற்று வைத்திருக்கிறோம். எங்களுக்கு அரசமைப்புச் சட்டத்தின் மீது அளவில்லாத நம்பிக்கையுள்ளது. இதை நாங்கள் சொல்வதன் அர்த்தம் அரசமைப்பை யார் எதிர்த்தாலும், அது சங்பரிவார்களாக இருந்தாலும் நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம். எங்களுக்கு இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தில் மட்டுமே நம்பிக்கை யுள்ளது. டெல்லியில் உள்ள ஆர்.எஸ்.எஸ். தலைமையகமான ஜந்தேவாலனிலும், நாக்பூரிலும் சொல்லித்தரப்படும் மனுவின்



சட்டத்தின் மீது எங்களுக்குத் துளியும் மதிப்பில்லை. இந்த தேசத்தின் சாதியமைப்பின் மீது எங்களுக்கு எந்தப்பற்றுமில்லை.

சாதியமைப்பால் ஏற்பட்ட கடும் அநீதியை சீர்செய்வதற்கான நிவாரண நடவடிக்கைகள் குறித்து அரசமைப்பு சட்டமும், அண்ணல் அம்பேத்கரும் பேசுகிறார்கள். அதே அண்ணல் அம்பேத்கர் தூக்கு தண்டனையை நீக்க குரல் கொடுக்கிறார். அவரே கருத்துரிமை குறித்தும் பேசுகிறார். நம்முடைய அரசமைப்புச் சட்டத்தை, நம்முடைய உரிமையை உயர்த்திப்பிடிக்க நாம் விரும்புகிறோம். நமக்கு எதிராகத் தங்களின் ஊடக நண்பர்களோடு இணைந்து கொண்டு ABVP பொய் பிரச்சாரத்தை நிகழ்த்தி வருகிறது.

நாம் கல்வி உதவித் தொகைக்காகப் போராடுவோம் என்று ABVP சொல்கிறது. ஸ்ம்ருதி இரானி கல்வி உதவித் தொகையை நிறுத்துவார். இவர்கள் போராடுவதாகச் சொல் வார்கள். நல்ல வேடிக்கை. இந்த அரசு உயர்கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை 17 சதவிகிதம் குறைத்துள்ளது.

நமக்கு விடுதிகள் கடந்த நான்கு வருடங்களாகக் கட்டப்படவில்லை. WIFI இணைப்பு தரப்படவில்லை. BHEL நிறுவனம் நம்முடைய பயணத்துக்குப் பரிசளித்த பேருந்துக்குப் பெட்ரோல் போட கூடப் பல்கலை நிர்வாகத்திடம் காசில்லை. சினிமா சூப்பர் ஸ்டார் போல, 'நாங்கள் விடுதிகளைக் கட்டிக் கொடுப்போம், WIFI இணைப்புத் தருவோம், உதவித்தொகை கிடைப்பதை உறுதி செய்வோம்' என்று ABVP-யினர் வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார்கள்.

இவர்களின் உண்மையான சொரூபம், நாட்டின் அடிப்படை பிரச்னைகளைப் பற்றி விவாதிக்க அழைத்தால் அம்பலமாகிவிடும். நாம் JNU மாணவர்களாகப் பெண்கள், தலித்துகள், பழங்குடியினர், சிறுபான்மையினர் ஆகியோரின் உரிமைகள் சார்ந்த பிரச்னைகளை எழுப்புகிறோம் என்பதைப் பெருமையோடு பதிவு செய்கிறேன். ஆகவேதான் அவர்களின் சுப்ரமணிய சாமி, இங்கே ஜிஹாதிகள் வாழ்வதாக, நாம் வன்முறையைப் பரப்புவதாகச் சொல்கிறார்.

JNU வின் சார்பாக நான் ஆர்.எஸ்.எஸ்.அமைப்பைச் சேர்ந்தவர்களை நோக்கி சவால் விடுகிறேன். வன்முறையைப்பற்றி நேருக்கு நேர் விவாதம் புரிவோம். வெறிபிடித்த ABVP கோஷங்கள் குறித்துக் கேள்விகள் கேட்போம். ரத்தத்தில் திலகமிட வேண்டும் என்றும், துப்பாக்கிக் குண்டுகளில் ஆரத்தி எடுப்போம் என்றும் ஏன் கோஷம் போடுகிறார்கள் என்று அவர்கள் பதில் சொல்ல வேண்டும். யாருடைய ரத்தம் சிந்த அவர்கள் விரும்புகிறார்கள்? ஆங்கிலேய ரோடு கைகோர்த்துக் கொண்டு விடுதலைப் போராட்ட வீரர்களைச் சுட்டார்கள், ஏழைகள் பசிக்கு சோறு கேட்ட பொழுது அவர்களைத் துப்பாக்கி குண்டுகளால் மவுனமாக்கினார்கள். பசியுற்றவர்கள் உரிமைகளைக் கேட்ட பொழுது ஆயுதங்களால் அவர்களை அமைதிப் படுத்த முயன்றார்கள். முஸ்லிம்கள் மீது அவர்கள் குண்டுகள் பாய்ந்தன. பெண்கள் சமஉரிமை கேட்ட பொழுது துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாக்கினார்கள்.

ஐந்து விரல்களும் ஒன்றாக இருக்க முடியாது என்கிறார்கள். சீதையைப் பின்பற்றிப் பெண்கள் அக்னி பரீட்சை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த நாட்டின் ஜனநாயகம் எல்லாருக்கும் சம உரிமைகள் தருகிறது. மாணவன், தொழிலாளி, ஏழை, பணக்காரன், அம்பானி, அதானி எல்லாரும் சம உரிமை கொண்டவர்களே!.' பெண்களுக்குச் சமஉரிமை வேண்டும் என நாங்கள் குரல் கொடுத்தால், இந்திய கலாசாரத்தைச் சீரழிப்பதாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

நாம் சுரண்டலின் கலாசாரத்தை, சாதியின் கலாசாரத்தை, மனுநீதி, பிராமணியம் ஆகியவற்றின் கலாசாரத்தை அழித்தொழிக்க விழைகிறோம். எது கலாசாரம் என்பது இன்னமும் உறுதியாக வரையறுக்கப்படவில்லை. மக்கள் ஜனநாயகத்தைப் பற்றிப்பேசினால், அவர் களுக்குக் கோபம் வருகிறது. அண்ணல் அம்பேத்கர், காரல் மார்க்ஸ் என இருவரையும் வணங்கி, அவர்களைப் பற்றிப் பேசுவது அவர்களை உசுப் பேற்றுகிறது. மக்கள் அஸ்பஹுல்லா கான் எனும் தீரமிகுந்த விடுதலைப்போராட்ட வீரரைப் பற்றிப் பேசினால் கொதிக் கிறார்கள். இவற்றைப் பொறுக்க முடியாமல் சதி செய்கிறார்கள். அவர்கள் ஆங்கிலேயருக்குச் சேவகம் புரிந்த கீழானவர்கள். என் மீது அவதூறு வழக்கு பதியும்படி அவர்களுக்கு சவால் விடுகிறேன். நாட்டை அடிமைப்படுத்திக்

கொடுமை செய்த ஆங்கிலேயருடன் கூட்டுச் சேர்ந்த ஆர்.எஸ்.எஸ்., வரலாற்றை வசதியாக மறந்துவிட்டு, இப்பொழுது தேசபக்தி சான்றிதழ் விநியோகத்தில் ஈடுபடுகிறார்கள்.

என்னுடைய அலைபேசியை நீங்கள் பாருங்கள். என் தாய், தங்கையைப் பற்றி நாக்கூசும் வசைகளை வீசுகிறார்கள். எந்தப் பாரதத்தாயை பற்றி அவர்கள் பேசு கிறார்கள். அதில் என்னுடைய தாய்க்கு இடமில்லை என்றால் உங்களின் பாரதமாதா பற்றிய கருத்தாக்கம் எனக்கு ஏற்புடையது இல்லை.

அங்கன்வாடியில் மாதம் மூவாயிரம் சம்பளத்துக்கு வேலை பார்த்து என்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றும் என்னுடைய அம்மாவை இவர்கள் வசைபாடுகிறார்கள். ஏழைகளின் தாய்களை, தலித் விவசாயிகளைப் பாரதத் தாயின் அங்கமாகப் பார்க்காததை நினைத்து அவமானப்படுகிறேன். நான் இந்தத் தேசத்தின் தந்தைமாரை, தாய் மார்களை, சகோதரிகளை, ஏழை விவசாயிகளை, தலித்துகளை, பழங்குடி யினரை, தொழிலாளிகளைப் போற்று வேன். அவர்களுக்குத் தைரியம் இருந்தால் 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்றோ, 'பகத் சிங் ஜிந்தாபாத்', 'சுகதேவ் ஜிந்தாபாத்', 'அஸ்பஹூல்லா கான் ஜிந்தா பாத்' 'பாபாசாகேப் அம்பேத்கர் ஜிந்தாபாத்' என்றோ முழங்கமுடியுமா? என்று சவால் விடுகிறேன்.

அண்ணல் அம்பேத்கரின் 125-வது பிறந்த நாளை விமர்சையாகக் கொண்டாடும் நாடகத்தை அவர்கள் அரங்கேற்றுகிறார்கள். அவர்களுக்கு வீரம் இருந்தால், அம்பேத்கர் எழுப்பிய கேள்விகளை அவர்களும் எழுப்ப வேண்டும். இந்தியாவின் மிகப்பெரிய சிக்கல்களில் ஜாதி முக்கியமானது. ஜாதி அமைப்பைப் பற்றிப் பேசுங்கள், ஒவ்வொரு துறையிலும், தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு வேண்டும் என்று பேசுங்கள். இந்தக் கேள்விகளை நீங்கள் எழுப்பினால் உங்களுக்கு இந்தத் தேசத்தின் மீது பக்தி இருக்கிறது என நான் நம்புகிறேன். இந்தத் தேசம் அப்பொழுதும் எப்பொழுதும் உங்களுடையதாக ஆகாது. ஒரு தேசம் அதன் மக்களால் ஆனது, உங்களின் தேசத்தில் ஏழைகள், பசித்த மக்கள் ஆகியோருக்கு இடமில்லை. அப்படிப்பட்ட ஒன்று தேசமே இல்லை.

நேற்று ஒரு தொலைக்காட்சி விவாதத்தில் மிக மோசமான காலத்தில் இருக்கிறோம் என்றேன். பாசிசம் நாட்டைப்பிடித்துக் கொண்டே வருகிறது. ஊடகமும் அதிலிருந்து தப்பிக்கப் போவதில்லை. ஊடகம் எப்படிப் பேசவேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் இருந்து கதைகள் அனுப்பப்படுகின்றன. காங்கிரஸ் எமெர்ஜென்சி காலத்தில் செய்த அதேவேலையை இப்பொழுது இவர்கள் செய்கிறார்கள்.

சில ஊடக நண்பர்கள் நம்முடைய பல்கலைக் கழகம் மக்களின் வரிப்பணத்தில், மானியத்தில் இயங்குவதைச் சுட்டிக் காட்டி னார்கள். அது உண்மையே. நான் ஒரே ஒரு கேள்வியை எழுப்ப விரும்புகிறேன்: 'எதற்காகப் பல்கலைக்கழகங்கள்?' ஒரு சமூகத்தின் கூட்டு மனசாட்சியைத் தயவு தாட்சண்யமில்லாமல் பகுப்பாய்வு செய்யப் பல்கலைக்கழகங்கள் அவசியமானவை. தங்களின் கடமையிலிருந்து பல்கலைகள் தவறினால் ஒரு தேசம் உயிர்த்திருக்காது. ஒரு தேசம் ஏழைகளுக்காக இயங்க வில்லை என்றால் அது பணக்காரர் களின் சுரண்டல், கொள்ளைக்கான வேட்டைக்காடாக மாறிவிடும்.

மக்களின் கலாச்சாரம், நம்பிக்கைகள், உரிமைகள் ஆகியவற்றை உள்வாங்காமல் ஒரு தேசம் உருவாக முடியாது.நாம் பகத் சிங்கின், அண்ணல் அம்பேத்கரின் கனவுகளுக்கு ஆதரவாக, உறுதியாக நிற்கிறோம். சம உரிமைக்காக, அனை வரும் தன்மானத்தோடு வாழ்வதற்கு ஆதரவாக நாம் நிற்கிறோம். இந்த உரிமைகளின் போராட்டத்துக்காக ரோஹித் வெமுலா உயிர்விட நேர்ந்தது. சங்கபரிவாரத்தினரிடம் நேராகச் சொல்கிறோம், 'உங்கள் அரசால்

அவமானம்!'. ரோஹித் வெமுலாவுக்கு என்னென்ன அநீதிகளைச் செய்தீர்களோ அது எதையும் JNU-வில் நீங்கள் செய்ய முடியாது. ரோஹித்தின் தியாகத்தை நாங்கள் மறக்கமாட்டோம். நாங்கள் கருத்துரிமைக்குத் தோள் கொடுப்போம்.

பாகிஸ்தான், வங்கதேசத்தை விடுத்து மற்ற எல்லா நாட்டு ஏழைகள், பாட்டாளிகள் ஆகியோரின் ஒற்றுமைக்கு அறைகூவல் விடுக்கிறோம். உலகின் மனிதநேயத்தை, இந்திய மனித நேயத்தை நாங்கள் துதிக்கிறோம். நாங்கள் மனிதத்துக்கு எதிரானவர்களை அடையாளம் காட்டியுள்ளோம். இதுவே நம் முன்னால் உள்ள மிகப் பெரிய பிரச்னை. சாதியத்தின் உண்மை முகத்தை, மனுவின் முகத்தை, பிராமணியம், முதலாளித்துவம் ஆகிய வற்றுக்கு இடையே உள்ள உறவை வெளிப்படுத்தி உள்ளோம். இந்த அயோக்கியமான முகங்களைத் தோலுரிக்க வேண்டும். நாம் உண்மையான விடுதலையை அடையவேண்டும். அந்த விடுதலை அரசமைப்பு சட்டத்தின் மூலம், நாடாளுமன்றத்தின் மூலமே சாத்தியம். அதை நாம் அடைந்தே தீருவோம்.

நம்முடைய எல்லா முரண்பாடுகளைத் தாண்டி நம்முடைய கருத்துரிமையை, நம்முடைய அரசமைப்புச் சட்டத்தை, இந்தத் தேசத்தின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் காக்க வேண்டும் நண்பர்களே என வேண்டிக் கொள்கிறேன். நம்முடைய தேசத்தைப் பிளவுபடுத்தும் இந்தச் சக்திகளை, தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் தரும் இவற்றுக்கு எதிராக அணிதிரண்டு நாம் உறுதியோடு போராடவேண்டும்.

என்னுடைய உரையை முடிக்கும் முன்னால் ஒரு இறுதி வினா. யார் இந்த கசாப்? யார் இந்த அப்சல் குரு? உடம்பை குண்டுகளால் நிறைத்துக் கொண்டு கொலைத் தொழில் புரியும் இவர்கள் யார்? இந்த கேள்விகளைப் பல்கலைகளில் எழுப்பாவிட்டால் பல்கலைகளின் இருப்பில் அர்த்த மில்லை. நீதியை, வன்முறையை நாம் வரையறுக்கா விட்டால், எப்படி வன்முறையை நாம் எதிர் கொள்வது. வன்முறை என்பது ஒருவரைக் கொல்வது மட்டுமில்லை, தலித்துகளுக்கு வழங்கப் பட்ட சட்ட ரீதியான உரிமைகளை மறுக்கும் JNU நிர்வாகம் நிகழ்த்துவதும் வன்முறையேஆகும். இது நிறுவன மயமாக்கப் பட்ட வன்முறை யாகும்.

நீதியைப்பற்றி அவர்கள் பேசுகிறார்கள். எது நீதி என்பதை யார் தீர்மானிப்பது. பிராமணியம் தலித்துகளைக் கோயில்களுக்குள் விடவில்லை. அதுவே அன்றைய நீதி. அதனை நாம் கேள்வி கேட்டோம். இன்றைக்கு ABVP, ஆர்.எஸ்.எஸ். ஆகியோரின் நீதி, சுதந்திரம் நம்மை உள்ளடக்கிய நீதி இல்லை என்பதால் அதனைக் கேள்வி கேட்கிறோம். ஒவ்வொரு மனிதனுக்கும் சட்ட ரீதியான உரிமைகள் உறுதி செய்யப்படும் பொழுது நாங்கள் உங்களின் விடுதலையை ஏற்கிறோம். எல்லாருக்கும் சம உரிமை வாய்க்கும் நாளில் அவர்களின் நீதியை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

நண்பர்களே இது ஒரு மோசமான சூழல். JNU மாணவர் கூட்டமைப்பு எப்பொழுதும் வன்முறையை, எந்த ஒரு தீவிரவாதியை யும் , எந்தத் தீவிரவாத செயலையும் , எந்த இந்தியாவுக்கு எதிரான செயலையும் ஆதரித்தது இல்லை. பெயர் தெரியாதவர்களால் எழுப்பப்பட்ட 'பாகிஸ்தான் வாழ்க!' என்கிற கோஷத்தை நம்முடைய மாணவர் அமைப்புக் கடுமையாகக் கண்டிக்கிறது.

நான் உங்களிடம் ஒன்றை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் நண்பர்களே. அது JNU நிர்வாகம் மற்றும் ABVP பற்றிய தாகும். ABVP தற்போது எழுப்பிய கோஷங் களைக் கவனித்தீர்களா? அவர்கள் நம்மைக் 'கம்யூனிஸ்ட் நாய்கள்','அப்சல் குருவின் நாய்கள்', 'ஜிஹாதிகளின் பிள்ளைகள்' என்று அழைக்கிறார்கள். நமக்கு அரசமைப்புச் சட்டம், குடிமகன் என்கிற உரிமையை உறுதியளித்திருக்கும் பொழுது நம்முடைய பெற்றோரை நாய்கள் என

அழைப்பது நம்முடைய அரசமைப்பு சட்ட உரிமை மீதான தாக்குதல் இல்லையா? இதை ABVP - JNU நிர்வாகம் ஆகியோரிடம் கேட்க விரும்புகிறேன்.

JNU நிர்வாகம் யாருக்காக, யாருடன் இணைந்து கொண்டு, எதன் அடிப்படையில் இயங்குகிறது என்று அறிய விரும்புகிறோம். முதலில் கூட்டத்துக்கு அனுமதி தந்த பல்கலை நிர்வாகம், நாக்பூரில் இருந்து அழைப்பு வந்ததும் அலறிஅடித்துக் கொண்டு அனுமதியை ரத்துச் செய்கிறது. முதலில் உதவித் தொகை அறிவித்து விட்டு, பின்னர் அதனை ரத்துச் செய்வார்கள். இதுதான் ஆர்.எஸ்.எஸ்., ABVP நம் நாட்டை நடத்த விரும்பும் முறையாகும்.

ABVP ஆட்களைப் பற்றி ஒரு உண்மையைப் புரிந்துகொள்ளுங்கள். அவர்களுக்காக நான் கவலைகொள்கிறேன். FTII-ல் கஜேந்திர சவுகானை கொண்டுவந்ததைப் போல எல்லா நிறுவனங்களிலும் தங்களின் ஆட்களைக் கொண்டு நிரப்பலாம் என்று அவர்கள் குதிக்கிறார்கள். சவுகானை போன்றவர்கள் அதிகாரத்தில் இருந்தால் தங்களுக்கு எங்கும் வேலை கிடைக்கும் என்று கனவு காண்கிறார்கள். வேலை கிடைத்ததும் இந்தத் தேசபக்தி, பாரதமாதா ஆகியவற்றை அப்படியே மறந்து விடுவார்கள். அவர்கள் எப்பொழுதும் மதிக்காத மூவர்ணக் கொடியை பற்றி என்ன சொல்வது? இப்படியே போனால் தங்களுடைய காவிக் கொடியை கூட அவர்கள் மறக்க நேரிடும்.

எப்படிப்பட்ட தேசபக்தியை அவர்கள் விரும்புகிறார்கள் என அறிய விரும்புகிறேன். தன்னுடைய தொழிலாளிகளிடம் ஒழுங்காக நடந்து கொள்ளாத முதலாளி, விவசாயக் கூலிகளை மரியாதையோடு நடத்தாத நிலச்சுவான்தார், அதிகச் சம்பளம் பெறும் ஊடக தலைமை அதிகாரி, தன்னுடைய நிருபர்களுக்கு மிகக் குறைவான ஊதியத்தைத் தருவார் என்றால் இவையெல்லாம் எப்படித் தேசபக்தி ஆகும்?

அவர்களின் தேசபக்தி இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியோடு முடிவுற்று விடுகிறது. அதற்குப் பிறகு சாலையில் இறங்கி வம்பு செய்வார்கள். ஒரு டஜன் பழத்தை நாற்பது ரூபாய்க்கு விற்கும் ஏழையைக் கொள்ளையடிப்பதாகச் சொல்லி, முப்பது ரூபாய்க்கு ஒரு டஜன் பழத்தைக் கேட்பார்கள். 'நீங்கள்தான் உண்மையான கொள்ளையர்கள்' என அந்த வியாபாரி சொன்னால், உடனே அந்த ஏழையைத் தேசத் துரோகி என்று அறிவித்து விடுவார்கள். வசதிகள், பணம் ஆகியவற்றோடு தேசபக்தி துவங்கி முடிந்து விடுகிறது. உண்மையிலேயேதேசபக்திதான் இவர்களைச் செலுத்துகிறதா என்று கேட்டேன். 'என்ன செய்வது தோழா..? ஏற்கனவே இரண்டு ஆண்டு ஆட்சி முடிந்துவிட்டது. இருக்கிற மூன்று வருடத்தில் என்னென்ன செய்ய முடியுமோ அவற்றைச் செய்துமுடிக்க வேண்டும்' என்று சொல்கிறார்கள்.

நான் அவர்களைக் கேட்கிறேன். நாளைக்குத் தொடர் வண்டியில் நீங்கள் பயணிக்கிற பொழுது, ABVP ஐ சேர்ந்த நபர்கள் மாட்டுக் கறியை யாரேனும் வைத்திருக்கிறார்களா என்று சோதனை செய்கிறார்கள் என வைத்துக் கொள்வோம். அப்பொழுது நீங்கள் JNU-வை சேர்ந்தவர் எனத் தெரிந்ததும் உங்களைத் தேசத் துரோகி என்று சொல்லி வெட்டிப் போட்டால் என்னாகும்? இந்த ஆபத்தை நீங்கள் உணர்கிறீர்களா எனக் கவலையோடு கேட்கிறேன்

அந்த ஆபத்தை உணர்ந் திருப்பதால் தான் #JNUShutdown கோஷத்தை எதிர்ப்ப தாகச் சொல் கிறார்கள். தாங்கள் உருவாக்கிய பதற்றமான சூழலின் இறுதியில், தாங்கள் JNU-வில்தான் கல்வி கற்க வேண்டும் என்று உணர்கிறார்கள்.

அதனால் JNU-வின் சக தோழர்களே மார்ச்சில் தேர்தல் வருகிறது. அப்பொழுது ஓம் சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகளை ஏந்திக் கொண்டு ABVP ஆட்கள் ஓட்டுக் கேட்க

வருவார்கள். அவர்களிடம் கேளுங்கள்: 'நாங்கள் ஜிஹாதிகள், தீவிரவாதிகள், தேசத் துரோகிகள், எங்கள் ஓட்டுக்களைப் பெற்றால் நீங்களும் தேசத் துரோகிகள் ஆகிவிட மாட்டீர்களா?' எனக் கேள்வி கேளுங்கள். அப்பொழுது அவர்கள், 'உங்களில் சிலர் மட்டுமே அப்படிப் பட்டவர்கள்' என்பார்கள். பின் ஏன் இதை மீடியாவிடம் அவர்கள் சொல்லக்கூடாது என்றும், அவர்களின் துணைவேந்தர், பதிவாளரும் ஏன் அதை ஊடகங்களிடம் சொல்லவில்லை என்றும் எதிர்கேள்வி கேளுங்கள்.

அவர்களிடம் அந்தச் சில நபர்களும், தாங்கள் 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று கோஷம் போடவில்லை எனச் சொல்வதாகவும், அவர்கள் தீவிரவாதத்தை ஆதரிக்க வில்லை என்றும் தெளிவுப்படுத்துங்கள். அவர்கள், 'ஏன் முதலில் கூட்டத்துக்கு அனுமதி தரப்பட்டு, பின்னர் அது மறுக்கப்பட்டு ஜனநயாக உரிமை மீது தாக்குதல் நடத்தப்பட்டது?' என்றே கேட்கிறார்கள் எனத் தெரிவியுங்கள். ஒரு ஜனநாயக போராட்டம் நடைபெறுகிறது என்றால், அதில் உறுதியாக அந்தச் சிலபேர் நிற்பதாக அவர்களுக்குச் சொல்லுங்கள்.

அவர்களுக்கு இவை எதுவும், எப்பொழுதும் புரியப்போவதில்லை. ஆனால், குறுகிய கால அழைப்பில் இங்கே பெருமளவில் கூடிய நீங்கள் பிரச்னையைப் புரிந்து கொண்டுள்ளீர்கள் என நம்புகிறேன். நீங்கள் வளாகம் முழுக்கச் சென்று ABVP, தேசத்தையும் JNU-வையும் பிளவுபடுத்துகிறது என மாணவர்களிடம் சொல்லுங்கள். அதை நடக்க விடமாட்டோம்.

ஜெய் பீம்! செவ்வணக்கம்!

"தமிழில்: **பூ.கொ.சரவணன்**

# நான் உமர் காலித், ஆனால்..... தீவிரவாதியில்லை!

**(ஜே.என்.யு மாணவர் சங்கமான DSU தலைவரான உமர் காலித், தீவிரவாத தொடர்புடையவர் எனக் குற்றம் சாட்டப்பட்டார். தேசத்துரோக குற்றச் சாட்டுக்கும் உள்ளானவர். மகாராஷ்டிராவைச் சேர்ந்தவர். அவரது குடும்பத்திற்கு பல அச்சுறுத்தல் வந்த நிலையில், சரணடைவதற்கு முன்னால், JNUவில்,ஜே.என்.யு மாணவர்களுக்காக அவர் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.)**

கடந்த சில நாட்களாக தொடர்ந்து போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவ தோழர்களுக்கும், ஆசிரிய தோழர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த போராட்டம் ஐந்தாறு மாணவர்களுக்கான போராட்டம் கிடையாது. இந்த போராட்டம் நம் அனைவருக்குமான போராட்டமாகும். இந்த போராட்டம் இந்த ஒற்றை பல்கலைக்கழகத்தின் போராட்டம் மட்டுமல்ல, நாடெங்கிலும் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களின் போராட்டமாகும். இது சமூகத்திற்கான போராட்டம் ஆகும். வருங்காலத்தில் நாம் எப்படியான சமூகத்தை படைக்க விரும்புகிறோம் என்பதற்கான போராட்ட மாகும்.

கடந்த பத்து நாட்களாக என்னை பற்றி எனக்கே தெரியாத பல விசயங்களை என்னால் கேட்க முடிந்தது. நான் இரண்டு முறை பாகிஸ்தான் சென்று வந்ததாக கேள்விப்பட்டேன். என்னிடம் பாஸ்போர்ட் இல்லையென்றாலும், நான் பாகிஸ்தான் சென்று வந்ததாக அறிந்தேன். ஜே.என்.யூ பல்கலைக்கழக மாணவர்கள் சிறந்த அறிவாளிகள் என்றாலும், நான்தான்

மாஸ்டர் மைண்ட் என்பதையும் அறிந்து கொள்ள முடிந்தது. 18 பல்கலைக் கழகங்களில் நான் இந்த (அப்சல் குருவைத் தூக்கு தொடர்பான ஒருங்கிணைப்பு) நிகழ்ச்சியை ஒருங்கிணைக்க முயற்சி செய்தேனாம். எனக்கு இந்த அளவுக்கு ஆற்றல் உள்ளது என்று எனக்கே தெரியாது.

கடந்து இரண்டு மூன்று மாதங்களாகவே நான் இதற்கு திட்டமிட்டு வந்தேனாம் . கடந்த சில நாட்களில் மட்டும் 800 போன் கால்களை பேசியிருக்கிறேனாம். ஊடகங்களுக்கு இது குறித்து எந்த ஆதாரமும் தேவையில்லை. பொய்யென்றாலும் அதை உண்மை போல உறுதியாக சொல்கின்றன. காஷ்மீருக்கு, வளைகுடாவுக்கு என்று தொடர்ந்து சொல்கிறார்கள். ஓர் ஆதாரத்தையாவது காட்ட வேண்டாமா? அப்படி கால் (அழைப்பு) செய்திருந்தால் ஒன்றும் நிகழப் போவதில்லை என்பது வேறு விசயம், ஆனால், செய்திருந்தால் ஒற்றை ஆதாரத்தையாவது காண்பிக்க வேண்டாமா? விசாரணையில்லாமல், ஆதாரமில்லாமல் எதை வேண்டு மானாலும் இவர்கள் சொல்வார்கள். அதாவது இவர்களுக்கு வெட்கம் என்பது வருவதேயில்லை. அவர்களுக்கு வெட்கம் வர வேண்டும் என்று எதிர்பார்த்தோ மேயானால், நம்மை நாமே முட்டாள் களாக்குவதற்கு சமம்.

நம்மை தவறாக சித்தரிப்பதற் காகவே இந்த ஊடகங்கள் நடத்திய விசாரணை, அரசாங்க தரப்பிலிருந்து மொஹம்மதோடு எந்த தொடர்பும் இல்லை என்று வந்த பிறகும், மன்னிப்பு கேட்க வேண்டுமென்று இவர்களுக்கு தோன்றவே இல்லை. இப்படி மிகக்கேவலமாக சொல்லப்பட்ட இந்த பொய்களால், ஊடகங்கள் நாங்கள் அடங்கிவிடுவோம் என்று நினைத்தால், அது நடக்காது. ஆதிவாசிகள் என்றால் மாவோயிஸ்டுகள் என்பதும், இஸ்லாமியர் என்றால் தீவிரவாதிகள் என்பதும் என்ற தொடர் பரப்புரையில் அரசு இயந்திரமும், ஊடகமும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. இப்படியான குற்றச்சாட்டு



களில் அகப்படுகிற அப்பாவிகளின் குரல் பல நேரம் வெளியில் கேட்பதில்லை. ஆனால், இந்த முறை தவறான இலக்கை அவர்கள் தேர்வு செய்து விட்டார்கள். ஜேஎன்யூ மாணவர்கள் இதற்கு சரியான பாடம் கற்பிப்பார்கள். ஒவ்வொரு ஊடகமும் இதற்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும் .

நான் என்னை பற்றி கவலைப்பட்டதில்லை. நீங்கள் ஆயிரக்கணக்கில் என்னோடு இருப்பீர்கள் என்பது எனக்கு தெரியும். ஆனால், என் சகோதரி மற்றும் தந்தையின் பேட்டிகளை படித்த பிறகுதான் எனக்கு பதட்டம் தொற்றிக் கொண்டது.

எனக்கு ஏராளமான சகோதரிகள் இருக்கிறார்கள், அவர்களையெல்லாம் சமூக வலைதளங்களின் வழியாகவும் மற்ற வழிகளிலும் வன்புணர்ந்துவிடுவோம் என்றும், அமிலம் ஊற்றி விடுவோம் என்றும், கொலை செய்து விடுவோம் என்றும் கேவலமான முறையில் தொடர்ந்து மிரட்டி வந்திருக்கின்றனர். பஜ்ரங் தள் கூட்டம் கந்தமாலில் கிருஸ்துவ சகோதரியை வன்புணர்ச்சிக்குள்ளாக்கிய போது பாரத் மாதா கி ஜெய் என்றுதான் முழக்கமிட்டார்கள். தோழர் கண்ஹையாவின் அன்றைய உரையை நினைவுப்படுத்த விரும்புகிறேன். உங்கள்

பாரத மாதாவில் எங்கள் அன்னையும், சகோதரியும் இல்லையென்றால், அதை எங்கள் பாரத மாதாவாக ஏற்றுக் கொள்ள முடியாது. இப்படி சொல்வதில் எங்களுக்கு எந்த வெட்கமும் இல்லை.

என் தந்தையிடம் விசாரணை என்ற பெயரில் அவரது பழைய செயல்பாடுகளை எடுத்து, அதை வைத்து என் மீது முத்திரை குத்த முயற்சி செய்கிறார்கள். அதாவது, எப்படியாவது குற்றம் சுமத்திவிட வேண்டும் என்ற முனைப்பு. சிலர் ஜீ நியூசில் இருக்கிறார்கள், டைம்ஸ் நவ்வில் ஒரு அண்ணன் இருக்கிறார், அவரின் பெயரை நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை மேலும் சில ரிப்போர்ட்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஜேஎன்யூ மாணவர்கள் மீது இவ்வளவு வெறுப்பும், கோபமும் எங்கிருந்து வந்தது என்பது புரியவில்லை. இவ்வளவு வெறுப்பு எப்படி வந்தது?

என் மேல் நடந்த மீடியா விசாரணையை பற்றி ஒரு சிறிய விசயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஆறு ஆண்டுகளாக இந்த வளாகத்தில் அரசியல் செய்து வருகிறேன். ஒரு கணம் கூட என்னை இஸ்லாமியனாக உணர்ந்தது கிடையாது. என்னை முஸ்லிமாக வெளிப்படுத்தியதும் கிடையாது. நான் புரிந்து கொண்டவரையில் சமூக ஒடுக்குமுறை என்பது இஸ்லாமியர்கள் மீதும் மட்டும் இல்லை, தலித்துகளின் மீதும், பழங்குடிகளின் மீதும் இருக்கிறது. ஒடுக்கப்பட்ட சமூகங்களில் இருந்து வரும் எங்களை போன்றவர்கள், உடனடி அடையாளத்திலிருந்து வெளிவந்து, அனைத்து பிரச்சினைகளையும் முழுமையாக பார்த்து புரிந்து கொள்ள வேண்டிய தேவையிருக்கிறது. கடந்த ஏழு ஆண்டுகளாக இஸ்லாமியனாக எண்ணாத எனக்கு கடந்த பத்து நாளில்தான் நான் இஸ்லாமியன் என்று தோன்றியது. ரோஹித்தின் சொல்லில் கூற வேண்டுமானால், நான் என் உடனடி அடையாளத்தில் சுருக்கப்பட்டு இருக்கிறேன். என்னை பாகிஸ்தானின் ஏஜெண்ட் என்று சொல்கிறார்கள். நான் பாகிஸ்தான் கவிஞர் ஒருவரின் ஓரிரு வரிகளை இங்கே கூற ஆசைப்படுகிறேன்.

"இந்துஸ்தானும் எங்களது,

பாகிஸ்தானும் எங்களது,

இரு நாட்டின் மீது அமெரிக்காவின் கரம் இறுகியுள்ளது,

நீங்களோ அந்த கரம் பற்றிக் கொண்டு அலையும்

அமெரிக்காவின் தரகர்கள் ஆவீர்கள்"

தரகர் வேலையைத் தவிர ஒன்றுமே அறியாத இவர்கள், அரசாங்கம் என்ற பெயரில் அமர்ந்து கொண்டு, அமெரிக்காவின் காலை நக்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இந்தியாவின் கனிம வளங்களை, இயற்கை வளங்களை, மனித வளங்களை பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்று வருகிறது. கல்வியை விற்கிறது. உலக வர்த்தக ஒப்பந்த மாநாட்டில் மண்டியிட்டு நிற்கிறது. இவர்கள்தான் தேசபக்தி என்றால் என்ன என்று எங்களுக்கு பாடம் எடுக்கிறார்கள். அவர்கள் நம்மை தேசவிரோதிகள் என்கிறார்கள். உலக தேசவிரோதிகளே ஒன்று சேருங்கள். மக்களின் மீதான பிரியத்தில் ஊன்றி நின்று, மக்களின் உரிமைகளுக்காக போராடுங்கள். நமக்கு எல்லைகள் கிடையாது, கட்டுகள் கிடையாது. உலகெங்கிலும் இருக்கிற அரச ஆளும் வர்க்கத்திற்கு எதிராக திரள்வோம். இதுபோன்ற இழிவான உத்திகளால், அவர்கள் எம்மை அச்சுறுத்த முடியாது. எங்களை மௌனமாக்க முடியாது.

**தோழர்களே, உங்களுக்கு நான் ஆலோசனை கூற வேண்டிய தேவையில்லை. நாம் அஞ்ச வேண்டிய, பதட்டப்பட வேண்டிய தேவையில்லை. அவர்களிடம் பெரும்பான்மை இருக்கலாம், நாடாளுமன்றத்தில் நிறைய சீட்டுகள் இருக்கலாம், அரசு இயந்திரம் காவல்துறை, இராணுவம் இருக்கலாம், இருந்தும், அவர்கள் கோழைகள். அவர்கள் நம்மை கண்டு**

**அஞ்சுகிறார்கள். அவர்கள் நமது போராட்டங்களை கண்டு அஞ்சுகிறார்கள். நாம் சிந்திக்கிறோம் என்பதே அவர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது.**

எனது தோழன் நிர்பான் பிப்ரவரி 10-ஆம் தேதி ஊடகங்களில் கூறினார் “ தேசவிரோதியாவது அனைத்திலும் எளியது. நீங்கள் சிந்திக்க தொடங்கிவிட்டாலே உங்களுக்கு தேசவிரோதி முத்திரை விழுந்துவிடும்.” ஒருவேளை இப்படியான வழிமுறைகளின் வழியாக எங்களை அச்சுறுத்திவிடலாம் என்று நினைத்தார்கள் என்றால், அவர்கள் பெரிய மாயை ஒன்றில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் பொருள்.

நான் ஏற்கனவே கூறியதை போல, தவறான பல்கலைக்கழகத்தில் கை வைத்துவிட்டீர்கள். ஏற்கனவே, பல்வேறு பல்கலைக்கழகங்களை அச்சுறுத்த முயன்று வருகிறீர்கள். திரைப்பட கல்லூரியாகட்டும், ஐதராபாத் மத்திய பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்ததாக இருக்கட்டும், ரோஹித் வெமுலா மற்றும் அவரது தோழர்களுக்கு நிகழ்ந்த அடக்குமுறைகளாகட்டும், ரோஹித் வெமுலா கொலை செய்யப்பட்டதாக இருக்கட்டும், பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் சந்தீப் பாண்டேக்கு நேர்ந்ததாக இருக் கட்டும்...அனைத்து போராட்டங்களிலும் நாங்கள் தோளோடு தோள் நின்று போராடியிருக்கிறோம்.

ஒவ்வொரு போராட்டத்தையும் தெருவுக்கு, மக்களிடம் எடுத்து சென்றிருக்கிறோம். எங்களுக்கு எங்கள் கடமை என்ன என்பது புரிந்துதான் இருக்கிறது. ஜேஎன்யூ போராட்டங்களில் முன்னணியில் நிற்கிறது என்பதற்காக ஜேஎன்யூவை ஒழித்து கட்டுவோம் என்று முடிவு செய்திருந்தீர்கள் என்றால், உங்களை போல பலர் வந்து சென்றார்கள், அவர்களே முடிந்து போனார்கள் என்பதை உங்களுக்கு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருவேளை, நீங்கள் இந்திரா காந்தியை மறந்திருக்கக் கூடும். எமெர்ஜென்சிக்கு பிறகு இந்த பல்கலைக்கழகத்திற்கு வந்த போது, அவர் உள்ளே நுழைய அனுமதிக்கப்படவில்லை. நீங்கள் மன்மோகன்சிங்கை மறந்து போயிருக்கக் கூடும். அவர் நேருவின் சிலையை திறந்து வைக்க வந்திருந்தார். அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து இதே பல்கலைக்கழகம் போராடியது. ப.சிதம்பரம் இந்த பல்கலைகத்திற்கு வந்த போது, மாணவர்கள் அவரை வரவேற்பார்கள் என்று கருதினார். ஆனால், மாணவர்கள் யார் பக்கம் என்பதையும், அவருடைய இடம் எது என்பதையும் மாணவர்கள் அவருக்கு புரிய வைத்தார்கள். ஜேஎன்யூ என்றுமே விளிம்பு நிலையில் இருக்கும் மக்களின் பக்கம்தான் நிற்கும். உங்களின் கீழ்த்தரமான உத்திகளால் நாங்கள் அஞ்சிவிடப்போவதில்லை.

தோழர்களே, இவை அனைத்தும் நம்மை உளவியல் ரீதியாக சீண்டி பார்க்கும் திட்டம் கொண்டது. அவர்கள் நாம் பயந்து விடுவோமோ என்று சோதித்துப் பார்க்கிறார்கள். அவர்களின் சவாலை நாம் ஏற்றுக் கொண்டு, நாம் அஞ்சமாட்டோம், மாறாக, எதிர்த்து போராடுவோம் என்பதை அவர்களுக்கு உறுதியாக தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம். நாங்கள் அனைத்து முனைகளிலிருந்து உங்களை எதிர்ப்போம்.

எந்தவித அச்சமும் இல்லாமல், அனைத்து பிரச்சினையிலும், எந்த வித கருத்தையும் தெரிவிக்க வேண்டும். தோழர்களே, இவர்கள் பெரும் கோழைகள். அவர்களின் மாணவர் அமைப்பு அகில பாரதிய வித்யா பரிஷத், இந்த வளாகத்தின் குரங்கு படை. அவர்களுக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. உங்களது செயல் திட்டம் முன்னுக்கு வரவில்லையா? குழப்பம் விளைவியுங்கள் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழக துணை வேந்தர், ரிஜிஸ்டிரார், காவல்துறை, எம்.பி என அனைவரும் உங்கள் பக்கம் நிற்பதை நாங்கள் உறுதி செய்வோம் என்று அவர்களுக்கு உறுதி வழங்கப்பட்டிருக்கிறது.

அப்பாராவுக்கு பதிலாக ஜக்தீஷ் குமாரை நியமித்ததாகட்டும், தத்தாத்ரேயாவுக்கு பதிலாக மகேஷ் கிரியை நியமித்ததாகட்டும் அவர்களுடைய செயல்வடிவம் ஒன்றே ஒன்றுதான்.

இனிமேலும், ரோஹித்துக்கு நடந்தது எங்கும் நடக்காது. நாங்கள் எங்கள் உடனடி அடையாளத்தோடு சுருங்கமாட்டோம். நாங்கள் இதற்கு தொடக்கமாக இருப்போம், சிறகு விரித்து பறப்போம், எதிர்கொள்வோம். நாங்கள் எதனால் உருவாக்கப்பட்டோம் என்பது எங்களுக்கு தெரியும். இந்த பல்கலைக் கழகத்தை நாங்கள் நேசிக்கிறோம். இந்த சுதந்திர வெளி நாங்கள் உருவாக்கியது. அதில் ஒரு இன்ச் இடத்தைக் கூட உங்களுக்கு தர மாட்டோம். நீங்கள் இந்த வெளியை அழிப்பதை அனுமதிக்க மாட்டோம்.

ஏபிவிபி-க்கு ஒரு விஷயம் நன்றாக தெரியும், அவர்களால் மக்களிடம் சென்று, மக்களை அணி திரட்ட முடியாது. கடந்த பத்து நாட்களாக ஊடகங்களின் வழியாக, இத்தனை ஊடக விசாரணைக்கு பிறகும், பிரச்சாரங்களுக்கு பிறகும், பத்து நாட்களுக்கு முன் உறங்கி கிடந்ததை போல தேசபக்தியை எழுப்ப எடுக்கப்பட்ட முயற்சிக்கு பிறகும், அவர்களுக்கு ஆதரவாக நடந்த போராட்டம் மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. ஆனால், நமக்கு ஆதரவான போராட்டங்களில் ஆயிரக்கணக்கில் மக்கள் பங்கெடுக்கிறார்கள். இங்கே பதினைந்தாயிரம் பேர் திரண்டார்கள். ராகுல் காந்தி இந்த வளாகத்திற்கு வந்திருந்த போது ச்சீ(ஜீ) நியூஸ் தொலைக்காட்சி, மாணவர்களிடையே பிளவு ஏற்பட்டுவிட்டது என்று சொன்னதை கவனித்தேன். ஆனால், இந்தப்பக்கம் 3000 பேரும், அங்கே பத்து பன்னிரெண்டு பேரும்தான் இருந்தார்கள் என்று அதற்கு பிறகுதான் தெரியவந்தது.

செய்திகளை திரிப்பதற்கு கொஞ்சம் கூட வெட்கமின்றி எப்படி பொய் சொல்ல வேண்டும் என்ற திறன் இவர்களுக்கு நன்றாகவே வாய்த்திருக்கிறது. தோழர்களே, இந்த பல்கலைக்கழகம்தான் நமக்கு கற்பித்திருக்கிறது. இங்கிருந்துதான் மாணவர் போராட்டங்களை நடத்தினோம். நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும், எந்த பல்கலைக்கழகம் மாற்று கருத்துக்கு இடமளிக்க மறுக்கிறதோ, அது பல்கலைக்கழகம் அல்ல, அது சிறை. நம் பல்கலைக்கழகங்களை சிறைக்கூடங்களாக மாற்றும் இவர்களின் செயல்திட்டங்களை நாம் ஒருங்கிணைந்து ஒற்றுமையாக நின்று கண்டிப்பாக தோற்கடிப்போம்.

நாம் நம்மிடையே உள்ள அமைப்புகளுக்குள் இருக்கும் மாற்றுக் கருத்துகளை எப்படி எதிர்கொள்வது, எப்படி விவாதித்து முடிவை எட்டுவது என்பது நமக்கு தெரியும். தோழர் அசுதோஷ், தோழர் அனந்த்தின் அமைப்பு ஏதாவதொரு நிகழ்ச்சி நடத்தும் போதோ, அல்லது நாம் ஏதாவதொரு நிகழ்ச்சி நடத்தும் போதோ, நமக்குள்ளேயே எதிரெதிராக நிகழ்ச்சிகளை நடத்தினாலும், எந்த நிகழ்ச்சியிலும் புகுந்து குழப்பம் விளைவிக்க வேண்டிய தேவை நமக்கு இல்லை. ஏனென்றால், மக்களை சந்திப்பது எப்படி என்பது நமக்கு தெரியும். இவர்களின் உத்திகளுக்கு நாம் கண்டிப்பாக அடிபணிய மாட்டோம்.

இந்த தாக்குதல் பல்கலைக்கழத்திற்கு எதிரானது மட்டும்தான் என்று புரிந்து கொள்ள வேண்டாம். என் உரையை முடிக்கும் முன்னர் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாடு முழுக்க பல்வேறு தாக்குதல்கள் நடந்து கொண்டிருக்கிறது. ஹோண்டா தொழிலாளர்கள் மீதும், சோனி சோரியின் மீதும், ஜக்தல்பூர் சட்ட உதவிக் குழுவின் மீதும் நடத்திய தாக்குதல்களை எதிர்க்கும் அனைத்து போராட்டங்களையும் ஒருங்கிணைத்து நாம் ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களின் பக்கம் நிற்க வேண்டும். ஜேஎன்யூவின் இந்த கலாச்சாரத்தை உயர்த்தி பிடிக்க வேண்டும்.

**நன்றி!: சரவணன் வீரய்யா**

# ஷெஹ்லா ராஷித் - ஜே.என்.யுவின் பெண் போராளி!



கன்னையா குமார், உமர் காலித் ஆகிய பெயர்களுடன் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் அன்றாடம் ஒலிக்கும் பெயர் ஷெஹ்லா ராஷித். கடந்த பல நாட்களாக ஜே.என்.யூவில் நடைபெற்று வரும் போராட்டத்திற்கு தலைமையேற்பவர் கஷ்மீரைச் சார்ந்த ஷெஹ்லா ராஷித் ஆவார். தேசத் துரோக குற்றம் சுமத்தி யூனியன் தலைவர் கன்னையா குமாரை கைதுச் செய்து சிறையில் அடைக்கப்பட்டபோதும், உமர் காலித் ஜே.என்.யூ வளாகத்திற்கு திரும்ப வந்தபோதும் நடந்த போராட்டங்களுக்கு தலைமையேற்று தீப்பொறி பறக்கும் உரைகள் மூலம் மாணவர்களை உத்வேகப்படுத்தினார் ஷெஹ்லா. ஜே.என்.யூவில் பெரும்பாலான மாணவர்களை ஒன்றுதிரட்டியதில் ஷெஹ்லாவுக்கு முக்கிய பங்குண்டு. தேசிய ஊடகங்களில் ஷெஹ்லாவின் பெயர் புகழ் பெற துவங்கியுள்ளது.

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர்கள் குறித்து கேவலமாக விமர்சித்த ராஜஸ்தான் மாநில எம்.பி கியான் தேவ் அஹுஜாவிற்கு, ஷெஹ்லா சரியான பதிலடியை கொடுத்திருந்தார். கியான் தேவிற்கு, ஷெஹ்லா அளித்த பதில் சமூக வலை தளங்களில் அதிகமாக பகிரப்படுகிறது. ‘விபச்சாரிகள் என்று அழைக்கப்படுவதை விட சங்கிகள் (சங்பரிவார்கள்) என்று அழைக்கும்போதுதான் அவமானம் ஏற்படுகிறது’ என்று ஷெஹ்லா, கியான் தேவிற்கு பதிலடி கொடுத்திருந்தார். பிப்ரவரி 14-ஆம் தேதி ஜே.என்.யுவில் ஷெஹ்லா ஆற்றிய உரையின் வீடியோ வைரலாக பரவியுள்ளது.

‘உங்களில் எதிலிருந்து சுதந்திரம் வேண்டும்?எவ்வகையான சுதந்திரம் வேண்டும்? நமக்கு சுதந்திரம் என்பது உலக வர்த்தக மையத்தில் இருந்து சுதந்திரம் வேண்டும்! சாதிக் கட்டமைப்பில் இருந்து சுதந்திரம் வேண்டும்! பாகுபாடான சட்டங்களில் இருந்து சுதந்திரம் வேண்டும்!.....’ தொடர்கிறது ஷெஹ்லாவின் உரை.

ஸ்ரீநகரின் என்.ஐ.டியில் இருந்து பொறியியல் பட்டம் பெற்ற ஷெஹ்லா, பெங்களூர் ஐ.ஐ.எம்மில் இருந்து பொலிடிகல் சயின்ஸில் முதுகலை பட்டம் பெற்றவர். ஜே.என்.யுவில் லா அண்ட் கவர்னஸில் எம்.பில் படித்து வருகிறார்.ஆல் இந்தியா ஸ்டுடன்ஸ் அசோசியேஷன்(அய்ஸா) சார்பாக மாணவர் யூனியன் தேர்தலில் போட்டியிட்டு துணை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

போலீஸின் தேசத்துரோக வழக்கிற்கு எதிராக இன்று டெல்லியில் நடைபெறும் 15 ஆயிரம் பேர் பங்கேற்கும் போராட்டம் நடைபெறுகிறது.’வாருங்கள் அனைவரையும் தேசத்துரோக குற்றம் சாட்டி கைதுச் செய்யுங்கள்’ என்று ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் ஷெஹ்லா கூறியுள்ளார்.

# ஜீ டி.வி. அநியாயத்திற்கு எதிராக விஷ்வா தீபக் ராஜினாமா!

**ஜே.என்.யு மாணவர்கள் நடத்திய அப்சல் குரு நினைவு கூட்டத்தில் பாகிஸ்தான் ஜிந்தாபாத் கோஷமிட்டதாக ஜீ டிவி வீடியோ வெளியிட்டு மாணவர்களை தேச துரோகிகளாக சித்தரித்து வருகிறது. கூடவே அருகிலேயே ராணுவ வீரர்களின் படங்களையும் வெளியிட்டு மாணவர்களுக்கு எதிராக தேசிய வெறியை பரப்பு வருகின்றன. ஆனால் இந்த வீடியோக்கள் தங்களால் சோடிக்கப்பட்ட ஒன்று என்றும் அந்த குற்ற உணர்ச்சியின் உந்துதலில் தான் ராஜினாமா செய்வதாகவும் அறிவித்திருக்கிறார் ஜீ டிவி பத்திரிகையாளர் விஷ்வா தீபக்.**

**மோடி ஆட்சி பொறுப்பேற்ற பின் ஊடகங்களின் திரைமறைவில் நடந்துவரும் நிகழ்ச்சிகளையும் தன் ராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அதன் தமிழாக்கம் இது. மோடி அரசை சார்ந்து பிழைக்கும் நவநாகரீக நெறியாளர்கள், சானல்கள், தினசரிகள், நடுப்பக்க ஆசிரியர்களைக் கொண்ட தமிழ் கூறும் ஊடக தீயுலகில் இத்தகைய குற்ற உணர்ச்சி கொண்டவர்கள் அரிது என்பதாலும் தீபக்கின் இந்த கடிதம் முக்கியமானது.**

**ஒரு வருடம், நான்கு மாதங்கள், நான்கு நாட்கள் கடந்த நிலையில் உங்களை விட்டு விலகும் நேரம் எனக்கு வந்திருக்கிறது. நான் முன்பே செய்திருக்க வேண்டிய ஒன்று இது. என்றாலும் இப்போது செய்யவில்லை எனில், என்னை என்னால் மன்னிக்கவே முடியாமல் போகும். - விஷ்வா தீபக்**

கோபம், எரிச்சல் மற்றும் உணர்ச்சி வேகத்தில் எடுக்கப்பட்ட ஒரு முடிவு அல்ல இது. நன்கு சீராய்ந்து எடுத்த முடிவை பற்றியே சொல்ல வருகிறேன். ஊடகவியலாளனாகவும், குடிமகனாகவும் இருந்த என்னை பயன்படுத்திக் கொண்டு கண்மூடித்தனமான தேசியவெறி நஞ்சு பரப்பப்பட்டது. அதன் மூலம் ஒரு உள்நாட்டுப் போருக்குள் இந்த நாடு தள்ளப்பட்டிருக்கிறது. இந்தியக் குடிமகன் என்ற பொறுப்புணர்வாலும், என்னுடைய பணி சார்ந்த கடமையாலும் இந்த நஞ்சு பரவுவதை தடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

பெருங்கடலை ஓர் ஓடத்தில் கடப்பதற்கு ஒப்பானது இது என்று எனக்கு நன்கு தெரியும். எனினும், நான் எனது பயணத்தை தொடங்க வேண்டும். அதன் பொருட்டு ஜெ.என்.யூ மாணவர் சங்கத் தலைவர் கண்ணையா குமாரை ஒரு சாக்காக வைத்து பரப்பப்படும் கண்மூடித்தனமான தேசியவாத உணர்ச்சியை ஆதரித்தது மற்றும் தூண்டி விடுதல் ஆகியவற்றில் நாம் ஆற்றிய பங்கை எதிர்த்து விலகுகிறேன். இந்த விலகல் கடிதத்தை தனிப்பட்ட முரண்பாடு காரணமாக எடுக்கப்பட்டதென கருத வேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எந்த வகையிலும் இந்த முடிவு தனிப்பட்ட ரீதியிலானது அல்ல. இதுவொரு பணிசார்ந்த கடமை, சமூக உணர்வு மற்றும் இறுதியாக ஒரு வகையான தேசப்பற்று. கடந்த ஓராண்டில் மட்டும் மூன்று நிலைகளில் பல முறை தோல்வியடைந்ததை வருத்தத்துடன் தெரிவிக்கிறேன்.

2014 மே மாதத்துக்கு பிறகு, நரேந்திர மோடி பிரதமராக

பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து ஏறக்குறைய அனைத்து செய்தி அரங்குகளிலும் மதவாதம் புகுந்து விட்டது என்றாலும் நமது நிறுவனத்தில் அது மோசமாகி விட்டது. நான் சற்று கடுமையான சொற்களை பயன்படுத்தியதற்காக மன்னிப்பு கோருகிறேன். அதே நேரத்தில், அதை சொல்ல உள்ளபடியே என்னிடம் வார்த்தைகள் வேறில்லை. எதற்காக செய்திகள் அனைத்தும் மோடியின் கோணத்தில் எழுதப்படுகின்றன? மோடி அரசின் நிகழ்ச்சிநிரலை முன்மொழிவது தான் செய்திகள் எழுதப்படுவதன் நோக்கம் என்றாகியுள்ளது.




நாமெல்லாம் ஊடகவியலாளர்களா? என்று மிகத் தீவிரமாக சந்தேகம் கொள்ள ஆரம்பித்து விட்டேன். அரசின் ஊதுகுழல் மற்றும் ஒப்பந்த கொலையாளிகளாக நாம் மாறிவிட்டதை போன்று உணர்கிறேன். மோடி இந்த நாட்டின் பிரதமர். அவர் என்னுடைய பிரதமரும் கூட. ஆனால், ஒரு ஊடகவியலாளனாக மோடி வழிபாட்டை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. என்னுடைய மனசாட்சி எனக்கெதிராக பிரளயம் செய்ய ஆரம்பித்து விட்டது. எனக்கு உடல்நிலை சரியில்லாதது போன்றிருக்கிறது.

ஒவ்வொரு செய்திக்கு பின்னாலும் ஒரு திட்டம் மறைந்து இருக்கிறது. ஒவ்வொரு செய்தியின் நோக்கத்திலும் மோடி அரசு எவ்வளவு பெரிது என்று காட்டும் நோக்கம் இருக்கிறது. ஒவ்வொரு விவாதமும் மோடியின் எதிரிகளை சுட்டு வீழ்த்தும் முயற்சியாக இருக்கிறது. 'தாக்குதல்', 'போர்' ஆகியவற்றுக்கு குறைந்த வார்த்தைகள் ஏற்கவியலாததாக மாற்றப்பட்டு உள்ளது. என்ன இதெல்லாம்? கொஞ்சம் நின்று யோசித்த போது, நான் பைத்தியக்காரனாகி விட்டதை போன்று உணர்ந்தேன்.

அறமற்றவர்களாக, நியாய உணர்வற்றவர்களாக, வெறுக்கத்தக்கவர்களாக நாங்கள் ஏன் மாற்றப்பட்டோம்? இந்த நாட்டின் தலைசிறந்த ஊடக நிறுவனத்தில் பயின்று, பெருமைமிகு நிறுவனங்களான பி.பி.சி, ஆஜ்தக் மற்றும் ஜெர்மனியின் டியூச் வெல் போன்றவற்றில் பணிபுரிந்து விட்டு இன்று மக்கள் என்னை, 'சீ இவன் ஒரு செய்தி ஆசிரியன்' என்று கூறுமளவு மாறி விட்டிருக்கிறேன். எங்கள் நேர்மை உடைந்து நொறுங்கி கிடக்கிறது. இதற்கு பொறுப்பேற்றுக் கொள்பவர் யார்?

நான் எவ்வளவு சொல்ல வேண்டும்? ஓர் எதிர் பிரச்சாரம் டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு எதிராக தொடர்ந்து நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. எதற்காக இது? நீர் மற்றும் மின்விநியோகம், ஒற்றை - இரட்டை வண்டிகளை இயக்குவது போன்ற மக்களுக்கு பயன்படும் அடிப்படை திட்டங்கள் கூட இழிவுபடுத்தப்பட்டது. கேஜ்ரிவாலுடன் முரண்படுவது மற்றும் விமர்சிப்பது ஒருவரின் முழு உரிமை தான். ஆனால், கேஜ்ரிவாலை ஆளுமைக் கொலை செய்வது ஒரு ஊடகவியலாளரின் வேலையல்ல. கேஜ்ரிவாலுக்கு எதிராக வெளியிட்ட எதிர்மறை செய்திகளை அடுக்க ஆரம்பித்தால் அவை பல பக்கங்களுக்கு நீளும். ஊடகத்துறையின் அடிப்படை விழுமியங்களான 'நடுநிலை' மற்றும் நேயர்களுக்கு நேர்மையாக இருத்தல் ஆகியவற்றுக்கு எந்த மதிப்பும் இல்லையா?

தலித் மாணவர் ரோகித் வெமுலாவின் தற்கொலை பிரச்சினையிலும் இது தான் நடந்தது. முதலில் அவரை 'தலித் கல்விமான்' என்றழைத்தோம். பின்னர் 'தலித் மாணவர்'

என்றோம். ரோகித்தை தற்கொலைக்கு துரத்தியதில் ஏ.பி.வி.பி.யின் தலைவர் மற்றும் பா.ஜ.க.வின் பங்காரு தத்தாத்ரேயாவின் தொடர்பு பற்றிய சந்தேகம் தீரவில்லை. (அனைத்தும் இப்போது தெளிவாகி விட்டது.) ஆனால், ஒரு ஊடக நிறுவனமாக எங்கள் பணி பிரச்சினையை நீர்த்துப் போக செய்வதிலும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதுகாவலர்களாக செயல்படுவதிலும் இருந்தது.

உதயப் பிரகாஷ் மற்றும் இதர முக்கிய எழுத்தாளர்கள் தங்கள் விருதுகளை திரும்ப அளித்ததற்கு காரணமான சகிப்பின்மை தொடர்பான விவாதத்தில், பிரச்சினையை விட்டுவிட்டு எழுத்தாளர்களை கேள்வி கேட்கலானோம். லட்சக்கணக்கான மக்கள் வாசிக்கும் உதயப் பிரகாஷை எடுத்துக் கொள்வோம். நம் வாழ்கைத் தேவைக்காக பேசுகின்ற மொழியின் பெருமை அவர். அவரது நூல்கள் நமது வாழ்க்கையை, நமது கனவுகளை, நமது தத்தளிப்புகளை உரைப்பவை. எனினும், நாம் இவை அனைத்தையும் ஒரு சதியின் அங்கமாக நிரூபிக்க முயன்று கொண்டிருக்கிறோம். நான் அப்போது புண்பட்டேன். எனினும், சமாதானப்படுத்திக் கொண்டேன்.

ஆனால், எவ்வளவு காலத்துக்கு நான் சகித்துக் கொள்ள வேண்டும்? எதற்காக சகித்துக்கொள்ள வேண்டும்?

என்னால் சரியாக தூங்க இயலவில்லை. குற்ற உணர்ச்சியாக இருக்கலாம். ராஜதுரோகம் புரிந்த துரோகி என்பது மிகப்பெரிய குற்றச்சாட்டு. ஊடகவியலாளர்களாக நமக்கு ஒருவரை துரோகி என்றழைத்து சான்றிதழ்கள் மற்றும் பட்டங்கள் வழங்கும் உரிமை இருக்கிறதா? அது நீதிமன்றங்களின் வரம்புக்கு உட்பட்டதல்லவா?

கண்ணையாவுடன் சேர்த்து நிறைய மாணவர்களை நாம் துரோகிகளாகவும், தேசவிரோதிகளாகவும் மக்களின் முன் நிறுத்தியுள்ளோம். அவர்களில் ஒருவர் நாளை கொல்லப்பட்டால், யார் எதற்கு பொறுப்பேற்றுக் கொள்வார்? நாம் வெறுமனே ஒருவரின் கொலை அல்லது சில குடும்பங்களின் அழிவுக்கான சூழ்நிலையை மட்டும் உருவாக்கவில்லை. ஒரு முழு கலவரத்துக்கு உகந்த சூழலையும், தேசத்தை உள்நாட்டுப் போருக்கு தள்ளும் நிலைமையும் உருவாக்கி உள்ளோம். என்ன மாதிரியான தேசப்பற்று இது? என்ன மாதிரியான ஊடக அறம் இது?

பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ் என்ன சொன்னாலும், அதை செய்யும் ஊதுகுழல்களா நாம்? அந்த வீடியோவில் ‘பாகிஸ்தான் ஜிந்தாபாத்’ முழக்கங்கள் எதுவுமில்லை. எனினும், மடத்தனமும், வன்முறையும் பரவுவதற்கு அதனை திரும்ப, திரும்ப ஒளிபரப்பினோம். இருட்டிலிருந்து ஒலிக்கும் சில குரல்கள் கண்ணையா குமார் மற்றும் அவருடைய தோழர்களுடையது என்று எதை வைத்து நம்பினோம்? நமது பாரபட்சம் காரணமாக ‘இந்திய நீதிமன்றங்கள் வாழ்க’ முழக்கம் ‘பாகிஸ்தான் வாழ்க’ என்பதாக கேட்டுள்ளது. அரசாங்கத்தின் வழியில் நாம் சிந்திக்கத் தொடங்கியதால் மாணவர்களின் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், வேலைவாய்ப்புகள் மற்றும் சில குடும்பங்களை அழிவின் விளிம்பில் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. புலனாய்வு அமைப்புகள் வேலையை செய்ய அனுமதித்து விட்டு அவற்றின் முடிவுக்கு காத்திருப்பது தான் சிறந்ததாக இருக்க வேண்டும் அல்லவா?

உமர் காலித்தின் சகோதரியை தேசத்துரோகியின் சகோதரி என்றும், வன்புணர்வு செய்வோம் என்றும், முகத்தில் ஆசிட் வீசுவோம் என்றும் அச்சுறுத்துகிறார்கள். அது போன்ற ஒரு சம்பவம் நடந்தால், நாம் அதற்கு காரணமாக இருக்க மாட்டோமா? கொஞ்சம் யோசியுங்கள். கண்ணையா குமார் ஒரு முறையல்ல; ஆயிரம் முறை சொல்லி விட்டார் - தேசவிரோத முழக்கங்களை ஆதரிக்கவில்லை என்று. அரசின் அடியொற்றி சிந்திப்பதால், அவர்

விளக்கங்கள் யாருக்கும் சென்று சேரவில்லை. கண்ணையாவின் வீட்டை ஒருமுறையாவது உன்னிப்பாக கவனித்திருப்போமா? அவர் வீடு ஒரு 'வீடே' அல்ல. இந்த நாட்டின் விவசாயிகள் மற்றும் சாதாரண மக்களின் கையறு நிலையை எடுத்துக் கூறும் ஒரு குறியீடு. அவர்களின் நம்பிக்கைகள் ஒவ்வொரு விநாடியும் புதைக்கப்படும் கல்லறைகள் அவை. ஆனால், நாம் குருடர்களாகிப் போனோம்.

இதை சொல்ல நான் வருத்தப்படுகிறேன். ஆனால், என்னை போன்ற பலருடைய வீட்டு நிலைமைகள் இது தான். இந்தியாவின் கிராம வாழ்க்கை அழகற்றது. அதன் சிதிலமடைந்த சுவர்களிலும், பலகீனமான பழைய வாழ்க்கையிலும் தேசியவாத நஞ்சு அதன் விளைவுகளை பற்றி கவலை கொள்ளாது ஏற்றப்பட்டுள்ளது. முடமாகிப் போயிருக்கும் கண்ணையாவின் தந்தை அதிர்ச்சியில் மரணித்தால், அதற்கு நாம் பொறுப்பில்லையா? இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு மட்டும் கண்ணையாவின் குடும்பம் பற்றிய செய்தியை வழங்கவில்லை என்றால், அவர் எந்த உத்வேகத்திலிருந்து ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக பேசுகிறார் என்ற விபரம் அறியப்படாமலே போயிருக்கும்.

ராமநாமா மற்றும் பலரது நிலைமையும் இது தான். மிகவும் சாதாரணப் பின்னணியிலிருந்து வறுமைக்கெதிராகப் போராடி, இந்த இளைஞர்கள் ஜெ.என்.யூ.வில் அரசின் உதவித் தொகையை பெற்று கல்வியை பெறுகிறார்கள். தங்களின் முன்னேற்றத்தில் இருக்கும் உறுதிப்பாட்டை நீங்கள் அவர்களிடம் காணலாம். டி.ஆர்.பி.க்கு தங்களை விற்பனை செய்யும் நபர்கள் அவர்கள் வாழ்க்கையை ஏறக்குறைய சிதைத்து விட்டார்கள்.

நாம் அவர்கள் அரசியலையும், கருத்துக்களையும் தீவிரமானவை என்று கூறி நிராகரிக்கலாம். ஆனால், அவர்கள் எப்படி தேசதுரோகிகள் ஆனார்கள்? நீதிமன்றங்கள் வழங்கும் நீதியை இந்த பிரச்சினையில் நாம் எப்படிப் பெறப் போகிறோம்? டில்லி காவல்துறையின் முதல் தகவல் அறிக்கையில் ஜீ செய்திகள் தொலைக்காட்சியின் பெயர் இருப்பது வெறும் தற்செயலா? அல்லது, டில்லி போலீசுக்கும், நமக்கும் இருக்கும் நெருங்கிய பிணைப்பின் வெளிப்பாடா? மக்களுக்கு என்ன பதிலை வழங்கப் போகிறோம்?

எல்லாவற்றுக்கும் மேலாக ஜெ.என்.யூ அல்லது ஜெ.என்.யூ மாணவர்களுக்கு எதிராக செயல்பட நமக்கு என்ன உரிமை இருக்கிறது? ஜனநாயகம், பன்முகத்தன்மை, நவீன சிந்தனைகள் மற்றும் முரண்பட்ட கருத்துக்களின் சகவாழ்வு ஆகியவற்றால் ஜெ.என்.யூவை இந்தியாவின் ஏதேன் தோட்டம் போன்று உணர்கிறேன். ஆனால், இப்போது அதை நாம் சட்ட விரோதிகள் மற்றும் தேசவிரோதிகளின் குகை என்றழைக்கிறோம்.

சட்டத்துக்கு புறம்பாக செயல்பட்டிருப்பது ஜெ,என்.யூ.வா அல்லது இடதுசாரி தலைவர் ஒருவரை கோர்ட்டில் வைத்து தாக்கிய பா.ஜ.க தலைவர்களா? என்றறிய விரும்புகிறேன். பா.ஜ.க எம்.எல்.ஏ மற்றும் அவரது ஆதரவாளர்கள் ஓர் இந்திய கம்யூனிஸ்ட் தலைவரை தெருவில் வைத்து அடித்து துவைக்கிறார். போலீஸ் அதனை வேடிக்கை பார்க்கிறது. தாக்குதலை திரையில் நாம் பார்த்து விட்டு 'ஓ.பி.ஷர்மாவுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறை' குறித்து புகார் வாசிக்கிறோம். ஏன் இதனை 'புகார்கள்' என்று எழுத வேண்டும் என்று கேட்டேன். மேலிருந்து அறிவுறுத்தப்பட்டது என்று சொல்லப்பட்டது. எப்படி நமக்கு மேலிருப்பவர் மிகவும் தாழ்ந்து போனார்? மோடிக்கு எதிராக சொல்லப்படுவதாக இருந்தால்' எப்படி சொல்லப்படும் என்று இப்போது உங்களுக்கு புரிந்திருக்கும். ஆனால், நிலைமை எந்தளவுக்கு முற்றியிருக்கிறது என்றால், ஓ.பி.ஷர்மா

மற்றும் ஏ.பி.வி.பி ஊழியர்களை காப்பாற்றுகின்ற வேலையை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

என்னுடைய இருப்பை, ஊடகப் பணியை மற்றும் கையறு நிலையை நிந்திக்க ஆரம்பித்து விட்டேன். இதற்காகவா பல்வேறு வேலைகளை விட்டுவிட்டு ஊடகவியலாளன் ஆனேன். இல்லை தான்.

இப்போது என் முன்னால் இரண்டு வழிமுறைகளே உள்ளன. ஒன்று, என் ஊடகப் பணியை விட்டு விடுவது. இரண்டாவது, இந்த சூழலிலிருந்து என்னை விடுவித்துக் கொள்வது. நான் இரண்டாவதை தேர்ந்தெடுக்கிறேன். நான் எந்த முடிவையும் எடுத்து விடவில்லை. என்னுடைய பணி மற்றும் அடையாளத்துக்காக சில கேள்விகளை மட்டும் கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு சின்ன விசயம். ஆனால், அதன் பொறுப்பு மிகவும் முக்கியமானது. இது மற்றவர்களுக்கு குறைவானதாகவும் எனக்கு பெரிதாகவும் இருக்கிறது. எனக்கு வேறெங்கும் வேலை கிடைக்காது என்பது மட்டும் உறுதியாக தெரிகிறது. நான் சொன்னவற்றை எனக்குள்ளே பூட்டி வைத்திருந்தால் ஒரு லட்சம் வரையிலும் மாத மாத ஊதியம் பெற்றிருப்பேன். என்னுடைய சம்பளம் மிக நன்று. ஆனால், அது பல்வேறு சமரசங்களுடன் கைக்கு வந்து சேர்கிறது. என்னால், அதை பெற முடியவில்லை. நான் ஒரு சாதாரண நடுத்தர வர்க்கக் குடும்பத்திலிருந்து வந்தவன். சம்பளமின்மையின் இடர்பாடுகளை நன்கு அறிந்து வைத்திருப்பவன். எனினும் எனது உணர்வை இழக்க விரும்பவில்லை.

நான் மறுபடியும் சொல்கிறேன். எனக்கு தனிப்பட்ட புகார்கள் எதுவுமில்லை. நிறுவனம் சார்ந்த மற்றும் ஆசிரியர் குழுவின் கொள்கைகள் சார்ந்த பிரச்சினைகள் இருக்கின்றன. இது அந்த கண்ணோட்டத்திலேயே புரிந்து கொள்ளப்படும் என்று நம்புகிறேன். ஒரு செய்தி நிறுவனம் தனது வலதுசாரி கண்ணோட்டத்தை புகுத்த விரும்பினால், தனிநபர்களும் அவர்களின் தனிப்பட்ட அரசியல் நிலைகளை சுதந்திரமாக பேசுவது முக்கியமானது என்று கருதுகிறேன். ஓர் ஊடகவியலாளனாக என்னுடைய பணி என்பது நடுநிலையாக நடந்து கொள்வது. ஆனால், ஒரு தனிநபராகவும் ஒரு விழிப்புணர்வடைந்த குடிமகனாகவும் எனது பாதை இடதுசாரி தன்மை கொண்டது. அது கட்சி அலுவலகங்களில் காண்பது அல்ல. என் அன்றாட வாழ்க்கையில் காண்கிறேன். இதுவே எனது அடையாளம்.

**- விஷ்வா தீபக்**


# அடிமைத்தனத்தை இஸ்லாம் அங்கீகரித்தா?

**மூலம் : முஹம்மது குதுப் மிஸ்ரி**
**(முன்னாள் பேராசிரியர் உம்முல்குறா பல்கலைக்கழகம், சவூதி அரேபியா)**
**தமிழில் : மு. குலாம் முஹம்மது**

பக்கங்கள் - 64

விலை ரூ. 50 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**

அல்லாஹு அக்பர்! முஸ்லிம் லீக்! ஜிந்தாபாத்!!

## முஸ்லிம்களின் தனித்தன்மைகளை பாதுகாக்க

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அழைக்கிறது!

அன்புடையீர்,

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

இஸ்லாமிய மார்க்கத்தை பின்பற்றக்கூடிய முஸ்லிம் சமுதாயம் மஸ்ஜிதை மையமாகக் கொண்ட சமூக அமைப்பில் வாழ வேண்டும் என்பது **நபிகள் நாயகம் (ஸல்)** அவர்கள் 1437 ஆண்டுகளுக்கு முன்பே காட்டித் தந்த வழிமுறை.

மஸ்ஜிதை மையமாகக் கொண்ட மஹல்லா ஜமாஅத் வலிமை மிக்கதாகத் திகழ வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயம். மஹல்லா ஜமாஅத் கட்டுப்பாட்டை காப்பாற்ற வேண்டியதும், சமுதாயத்தை மார்க்கரீதியில் வழிநடத்தும் சங்கைக்குரிய உலமா பெருமக்கள் கண்ணியத்தை பேண வேண்டியதும் முஸ்லிம்களின் கடமை.

இயக்கங்களின் பெயரால் தனிபள்ளி, போட்டி ஜமாஅத், தனி தஃப்தர், பள்ளிகளை தவிர்த்து மண்டபங்களில் தராவீஹ், இஷ்டப்பட்ட நாட்களில் பெருநாள் என்பதெல்லாம் சமுதாய கட்டமைப்பை சீர்குலைக்கும் விபரீதங்கள் என்பதை உணர்த்த வேண்டிய தருணம் இது. எனவே நம் தாய்ச்சபை

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

# மஹல்லா ஜமாஅத் ஒருங்கிணைப்பு மாநில மாநாடு

**2016 மார்ச் 10 வியாழன், விழுப்புரம் ரயில் நிலையம் அருகிலுள்ள நவாப் தோப்பு மைதானத்தில் நடத்தவுள்ளது.**

**பிற்பகல் 3.00 மணிக்கு தொடங்கும் இம்மாநாட்டில்**

பள்ளிவாசல் – கபரஸ்தான் – திருமணம் மற்றும் பிறப்பு இறப்பு பதிவேடு ஆகியவற்றின் சிறந்த பராமரிப்பு, மத்ரஸா கல்வி நிலையங்கள் – மருத்துவ மையம் – பைத்துல்மால் – ஷரீஅத் பஞ்சாயத்து நடத்துதல், ஏழைகுமர் திருமண உதவி, மாணவர்களுக்கு கல்வி உதவி, பெண்களுக்கு உதவும் சங்கம், மீலாது விழா – சமய நல்லிணக்க நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்றவற்றில் முன்மாதிரியாகத் திகழும் மஹல்லா ஜமாஅத்துகள் தேர்வு செய்யப்பட்டு, **'முன்மாதிரி மஹல்லா ஜமாஅத்'** விருது வழங்கி சிறப்பிக்கப்படும்.

**மாலை 6.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை**

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அரசியல் மாநாடு

இந்திய முஸ்லிம்கள் தனித்த அடையாளங்களுடன் வாழ அரசியல் சாசன உரிமை பாதுகாப்பை பெற்றுத் தந்தது – பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் முஸ்லிம்களை இடம் பெறச் செய்து தனி இடஒதுக்கீடு பெற்றுத் தந்தது – கல்விக்கு முன்னுரிமை அளித்து கல்வி நிலையங்களை திறக்கச் செய்தது – சிறுபான்மையின மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை கிடைக்கச் செய்தது – உருது மொழிக்கு தேசிய அந்தஸ்தும், தேசிய மொழி பட்டியலில் இடமும் கிடைக்கச் செய்தது – உலமாக்களுக்கு ஓய்வூதியம் – உலமா பணியாளர் நலவாரியம் அமைக்கச் செய்தது – ஷரீஅத் சட்டத்தை நீக்கி பொதுசிவில் சட்டம் கொண்டு வர முயற்சித்த போதெல்லாம் தடுத்தது....

**இப்படி எண்ணற்ற சாதனைகளுக்குக் காரணமான இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் இந்த மாநாட்டில்**

**தாய்ச்சபையின் தேசிய தலைவர்கள், கேரள அமைச்சர்கள், தோழமை கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றுகின்றனர்.**

**சமுதாய கோரிக்கைகளை பிரகடனப்படுத்த...   சட்டப் பேரவை தேர்தலில் ஓரணியில் அணி வகுக்க...**

## சமுதாயத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அழைக்கிறார்!

**அலை கடலென அணி திரண்டு வாரீர்!!**

அன்புடன் அழைக்கும்...

**இந்திய யூனியன் முஸ்லிம் லீக்**

காயிதே மில்லத் மன்ஸில், 36, மரைக்காயர் லெப்பைத் தெரு, மண்ணடி, சென்னை – 1

போன் : 044 – 2521 8786 / தொலைநகல் : 044 – 2521 7786

Website : www.muslimleaguetn.com E-mail : info@muslimleaguetn.com

மாநாட்டு அலுவலகம் :

ராயல் கெஸ்ட் ஹவுஸ்

432, திருச்சி மெயின் ரோடு, விழுப்புரம் – 605 602.

தொடர்பு எண் : 99769 94454 / 94437 23790 / 98941 07022

# இனப் படுகொலை புகழ்
# மோடி அரசில் காஸ்சிலின்டர்கள் ஏமாற்றப்படும் ஏழைகள் !

எல்லா வீடுகளுக்கும் எரிவாயு என்ற GAS -காஸ் இணைப்பபைத் தந்திருக்க வேண்டும் நமது மத்திய அரசு! இலவசங்களுக்கு குடிமக்களாகிய நாம் ஆசைப்படக்கூடாது. ஆனால் இதுபோன்ற அடிப்படை வசதிகளை தாராளமாகவும் மலிவான விலையிலும் எல்லோருக்கும் தந்திட வேண்டியது அரசின் அடிப்படைக் கடமை. **உலகின் பல நாடுகளில் பைப்கள் வழி நம் நாட்டில் தண்ணீர் வழங்கப் படுவதைப் போல் வழங்கப்படுகின்றன.**

ஆனால் மோடி அரசு (500) பெரு முதலாளிகளின் அரசு. மோடி இந்தியாவில் ஆட்சிக் கட்டிலில் அமரும் போது இந்த 500 பெரும் முதலாளிகளும் அங்கே அந்த





மைதானத்தில் சிறப்புவிருந்தினராக வீற்றிருந் தார்கள். அதானி என்ற கோடீஸ்வரர்தான் மோடியில் தேர்தல் பிரச்சாரத்தின் போது விமானங்களை ஏற்பாடு செய்து தந்தார். இப்போதும் மோடியின் போக வாழ்வுக்கு அள்ளிக் கொட்டிக் கொண்டிருக்கிறார். அதனால் நிலக்கரி சுரங்கங்கள், டெலிகாம் என்ற தகவல் தொடர்பு நிருவாகத்தின் பெரும் பகுதி. (இனி மேல் நமது இந்திய ரெயில்வே) இப்படி எல்லாம் நாட்டின் தொழில்கள், எல்லாம் தாரை வார்த்துத் தரப்படுகின்றன அதானி களுக்கு.

இப்படி பண முதலைகளைத் தன் பரிவாரமாக ஆக்கிக் கொண்ட மோடிக்கு

ஏழைகளைப் பற்றியோ அவர்களின் வீடுகளில் அடுப்பெரிவதைப் பற்றியோ கவலை இருக்க வாய்ப்பில்லை.

“நான் டீ விற்றவன்” எனச் சொல்லிக் கொண்டு இரண்டு நாள் நிகழ்ச்சிக்காக 15 லட்சம் ரூபாயில் கோட்டும், சூட்டும் போட்டுக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எடுபிடி பேரக்ஸ் ஒபாமாவுடன் போட்டோவுக்குப் போஸ் கொடுத்தார். அதனால் ஏழைப் பாளைகளின் வாழ்வைப் பற்றி அவர் கவலைப்படுவார் என எதிர்பார்ப்பதற்கில்லை, கவலைப்படவில்லை என்பது மட்டுமல்ல, அவர்களின் வயிற்றில் தொடர்ந்து அடித்து வருகின்றார்.

தான் ஆட்சிக்கு வந்தவுடன் வாழ்வின் அடிப்படை தேவையாம். கேஸ் சிலிண்டர் எரிவாயுவில் கை வைத்தார்கள்.

எரிவாயு மானியத்தை நாங்கள் வங்கியில் தாம் செலுத்துவோம் எனப் பிடிவாதம் பிடித்தார்கள். அதை ஆதார்கார்டோடு இணைத்தார். இது முந்தைய காங்கிரஸ் அரசு முயற்சி செய்து பார்த்து மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டத் திட்டம்.

ஏழை எளிய மக்கள் தங்கள் பிழைப்புகளை விட்டுவிட்டு எரிவாயு விநியோகிப்பவர்களின் கடைகளில் விண்ணப்பிப்பதற்கும் ஆதார் அட்டை வழங்கிடும் இடங்களிலும் காத்து கிடந்தார்கள். பின்னர் வங்கிகளில் கணக்கு திறக்க காத்துகிடந்தார்கள். 500 ரூபாயுடன் பின்னர் மீண்டும் காஸ் சிலிண்டர் விநியோகிப்பவர்களிடம் சென்று வரிசையில் நின்றனர்.

பெண்களெல்லாம் கதறினார்கள். நீங்கள் வங்கிக் கணக்கில்தான் மானிய தொகையைச் சேர்ப்பீர்கள் என்றால், நாங்கள் பெரும் நஷ்டங்களுக்கு ஆளாவோம். நாங்கள் தொழிலை விட்டு விட்டு வங்கிகளில் காத்துக்கிடக்க வேண்டியவர்களாவோம். எல்லோரும் முற்றுகை இட்டால் வங்கிகள் என்னவாகும்.

வீட்டுக்கு காஸ் சிலிண்டர் வருகிறதென்றால் ஒரு பெரும் தொகைக்கு ஏற்பாடு செய்திட வேண்டும். (அன்றாடம் காய்ச்சிகளுக்கு ரூ 680தே பெருந்தொகைதான்) அதன் பின் அதில் ஒரு சிறு தொகை திரும்பப் பெறுவதற்கு வங்கிகளில் காத்துக் கிடக்க வேண்டும் என்றால் இது என்ன நியாயம் எனக் கேட்டார்கள். மக்களின் அவலங்களைப் பற்றி கவலைப்படவில்லை மோடி அரசு.

இனி எங்கள் வீட்டு ஆண்கள் வங்கிக்கு வரும் அந்த பணத்தை எடுத்து சாராயக்கடைகளில் செலவு செய்து விடுவார்கள். ஏனெனில் வங்கிகளிலிருந்து பணத்தை எடுக்கும் போது, அவர்கள் ஏதோ அரசாங்கம் ‘சும்மா’ தந்த பணம் என எண்ணுகின்றார்கள். அதை அனுபவிப்போம் என எண்ணி குடித்து மடிகின்றார்கள்.

இந்த நடைமுறை கஷ்டங்களை யெல்லாம் அப்போது அதாவது மோடி ஆட்சிக்கு வந்தவுடன் எல்லா பத்திரிகைகளும் வெளியிட்டன. பெண்களில் உள்ளக் குமுறல்களைப் பேட்டிகளாகவே வெளியிட்டார்கள்.

ஆனாலும் மோடி அசைந்து கொடுக்க வில்லை பெண்களின் அவலங்களை அகற்றுவதற்குப் பதிலாக அடுத்தக் கட்ட கெடுபிடிகளைக் கட்டவிழ்த்து விட்டார்.

## மானியத்தை கைவிடுங்கள்

இவ்வளவு அவலங்களுக்கும் பிறகு மானியத்தைக் கைவிடுங்கள் என்றார். எரிவாயுக்கு மானியம் வேண்டாம் என்பவர்கள், கேஸ் சிலிண்டருக்குப் பதிவு செய்யும் போது பூஜ்யத்தை அழுத்தவும் என்றார். பூஜியத்தில் தெரியாமல் கைவைத்த பலர் ஏமாந்தார்கள். மானியம் பறி போனது.

பலர் சிலிண்டர் வீட்டுக்கு வர வேண்டும் என்றால் ‘0’ பூஜியத்தை அழுத்தவேண்டும் போல் தெரிகின்றது என பூஜியத்தை அழுத்தினார்கள். அப்போது மானியம் பறிபோனது. எப்ப ஏமாற்று. இதில் மக்களின் உள்ளக்குமுறலை ஊடகங்கள் வெளியிடவே செய்தன.

இந்நிலையில் எரிவாயு நிறுவனங்களின் வாசற்படியில் காத்துக் கிடந்தது,

வங்கிகளின் வாசற்படியில் காத்து நின்று பணம் கட்டியது,

ஆதார் - ஆதார் என அலைந்து எல்லாமே பாழ். நொந்து போனார்கள் மக்கள்.

## வருவாய் கணக்கு

இப்போது உள்ளதும் போச்சு நொள்ளக் கண்ணா என வந்த மானியமும் நின்று போனது. வருவாய் கணக்கெடுக்கப் போகின்றார்களாம். அதன் பின் யாருக்கு

மானியம் என முடிவு செய்ய போகின்றார்களாம்.

இப்போது ரூபாய் 500ஐ வங்கிகளில் கட்டித்தான் வங்கிக் கணக்குகளை ஏழைகள் தொடங்கினார்கள். இந்த 500 ரூபாயும் வங்கிகளுக்குத்தான். அவை ஒரு குடும்பத்திற்கு 500 ரூபாய் என பல கோடி குடும்பங்களிட மிருந்து பணத்தைப் பெற்றிருக்கின்றன. இந்தப் பணத்தை அவர்கள் நிரந்தரமாக முதலீடு செய்வார்கள். இலாபமும் - வட்டியும் சம்பாதிப்பார்கள். இந்த அப்பாவிகள் - ஏழைகள் மானியம் வந்தாலும் வரா விட்டாலும் வங்கிக் கணக்கை Close ரத்து செய்யமாட்டார்கள். காரணம், இருக்கட்டும் எதற்காவது உதவும் என விட்டு விடுவார்கள். ஆனால் ஏழைகளின் இந்த ஏக்கம் நிறைந்த பணம் பண முதலைகளுக்கு முதலீடாகக் கோடிக் கணக்கில் கொட்டித் தரப்படுகின்றது.

## மோடியின் அடுத்த தகிடுதத்தம்

சாதாரணமாக வங்கிகளில் சேமிப்புக் கணக்கில் அதிகமாகப் பணம் வைத்திருப்பவர் களுக்கு ஒரு (SMS) செல்போன் தகவல், உங்கள் வங்கிக் கணக்கில் உள்ள பணம் நிரந்தர வைப்புத்தொகையாக மாற்றப்பட்டுள்ளது என்பதே அந்தத் தகவல்.

செய்தியைப் பார்த்து வங்கிக்கு சென்றால் மன்னிக் வேண்டும் உங்கள் சேமிப்புக் கணக்கிலிருந்த பணம் உங்கள் நன்மையைக் கருதி நிரந்தர வைப்புத் தொகையாக மாற்றப்பட்டுளளது எனக் கூறி விடுகின்றார்கள்.

அப்படி என்ன எங்களுக்கு நன்மை எனக் கேட்டால் சேமிப்புக் கணக்கில் வட்டி வீதம் குறைவு நிரந்தர வைப்புத் தொகையில் வட்டி வீதம் அதிகம் எனக் கூறிவிடுகின்றார்கள்.

இப்படி ஓரிரு செய்திகள் முதலில் கும்பகோணம் SBயிலிருந்து வந்தது. தொலைக்காட்சிகளின் வழி வெளிவந்தன. உடனேயே அமுக்கப்பட்டுவிட்டன. ஆனால் நாடெங்கும் இந்தத் தகிடுதத்தம் நடந்து கொண்டிருக்கின்றது என்பதே உண்மை.

இந்த நிரந்தர வைப்புத் தொகைகளை சாதாரணமாக வங்கிகள் முதலீடு செய்பவர் களுக்கு வட்டிக்கு விடுவது வழக்கம். ஆக பொதுமக்களிடமிருந்து பணங்கள் நேரடி யாகவும் மறைமுகமாகவும் பிடுங்கப்பட்டு சில முதலாளிகளிடம் ஒப்படைக்கப்படுகின்றது. இதுவரை இந்த முதலாளிகள் மக்களுக்குப் போட்டது பட்டை நாமம்தான்.

## தொழில்கள் வளர்ந்த செய்கின்றன

ஆமாம் நாட்டில் தொழில்கள் வளர்ந்தால் நல்லது தானே அதுதானே வளர்ச்சி என சிலர் பேசலாம்.

ஆனால் இந்தியப் பொருளாதாரம் வளருவதற்கு மிகப் பெரிய தடைகள் இருக்கின்றன. அவற்றுள் மிகப் பெரிய தடை இந்தியாவில் இப்போது தழைத்து வளர்ந்து தலைவிரித்து தாண்டவமாடும் பாசிசம்தான்.

இதனால் முதலீட்டாளர்கள் முதலீடு களைச் செய்திட அச்சப்படுகின்றார்கள். தொழில்கள் தொடங்குவதில் தயக்கம். ஏனெனில் உற்பத்தித்துறையிலும் பாசிசம் தன் பொல்லா சிறகை விரித்துள்ளது. குறிப்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்தியாவில் முதலீடு செய்திட விரும்ப வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அனால் இந்தியாவின் பணம் பாதுகாப்பான வெளிநாடுகளில் முதலீடு செய்யப்படுகின்றது. அதில் நாம் மேலே குறிப்பிட்ட பணமும் உண்டு. இதனை Moody's Analytical Research - மூடிஸ் என்ற பொருளாதார ஆய்வு மையம் தெளிவுபடுத்தியது. எல்லா ஊடகங்களும் அதை வெளியிட்டது.

மூடீ என்ற நிறுவனம் சொன்னதை நமது மத்திய வங்கியாகிய ரிசர்வ் வங்கியின் தலைவரும் உறுதி செய்தார். பின்னர் செய்திகள் ஒடுக்கப்பட்டுவிட்டன.

இவையெல்லாம் - ஆராய்ச்சி மாணவன் ரோகித் வெமுலா கொலை செய்யப்படுவதற்கு முன்பு நடந்தவை.

அதன் பின்னர் அடுக்கடுக்காய் பல நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. இப்போது டெல்லிப் பல்கலைக்கழக நிகழ்வுகள், உலக நாடுகள் கைகொட்டி சிரிக்கும் அளவுக்குப் போய்விட்டது.

ஆகவே, இது எங்கே தலையெடுக்கப் போகின்றது என இந்தியாவின் சிற்பிகள் கண்டு கொள்ளாமல் விட்டு விட்ட பாசிசம் பாதாளம் வரை பாய்ந்து விட்டது. பாரதத்தைப் பாழாக்கி விட்டது.

மக்களே எழுங்கள். பாசிசத்தை மாய்ப்போம் - பாரதத்தை காப்போம்.

**எம்.ஜி.எம்**

தொடர் -2

# கற்காலம் – ஒரு வரலாற்றுப் பொய்

மூலம் : ஹாருன் யஹ்யா தமிழில் : அபூஹாசின்



தொல்லியல் துறை கண்டு பிடிப்புகளை பரினாம வியலாளர்களால் விளக்கிட முடியாது:

நாகரீக முதிர்ச்சி யற்ற பழங்கால மனிதன் எவ்வாறு தனது அன்றாட வாழ்க்கையை கழித்தான் என்பதை விளக்கிடும் விபரங்களை நாம் பரிணாம வியலாளர்கள் கூறிடும் மனித இன வரலாற்றை ஆராயும் போது காணலாம். இது குறித்து அதிகம் அறிந்திராதவர்கள் இவர் களின் உறுதியான நம்பத்தகுந்த எழுத்து நடையை பார்த்து, கலைத்திறமையின் மூலம் உருவாக்கப்பட்ட புனரமைப்புகளை அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என எண்ணி விடு கின்றனர். பரினாமவியலாளர்கள் ஏதோ அவர்கள் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து அதை கண்காணித்தது போன்று விளக்க உரைகளை கொடுக்கின்றனர்.

நம்முடைய மூதாதையர்கள் இரண்டு கால்களை கொண்டு நிற்பதற்கு கற்றிருந்த நேரத்தில் தங்களுடைய கைகளை கொண்டு எதுவும் செய்திடவில்லை. பின்னர் கற் கருவிகளை உருவாக்கினர். கல் மற்றும் மரத்தினாலான கருவிகளையே நீண்ட காலம் பயன்படுத்தி வந்தனர். வேறு கருவிகளை அவர்கள் பயன்படுத்தவேயில்லை. அதன் பின்னர் இரும்பு, காப்பர் (செம்பு) மற்றும் பித்தளைகளை (ப்ராஸ்) பயன்படுத்த தொடங்கினர். இவ்வகையான விளக்கங்கள் அனைத்தும் கண்டுபிடிப்புகளை பற்றி பரிணாமவியலாளர்கள் கொடுத்த தவறான எண்ணங்களின் அடிப்படையிலானவை. அறிவியல் ஆதாரங்களின் ஒளியில் கண்டு பிடிப்புகள் விளக்கிடப்படவில்லை.

தொல்லியல் துறை நிபுணர் பால் பான் தன்னுடைய “A very short Introduction” புத்தகத் தில் இவ்வாறு கூறுகிறார். மனித இன பரிணாமத்தை விளக்கும் நிகழ்வுகள் வெறும் கட்டு கதைகளே. இதில் அறிவியல் ஆதாரங்களே மையப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு கதைகள் என்ற வார்த்தையே ஒரு நல்ல கண்ணோட்டத்துடன் கூறுவதாகவே அவர் வலியுறுத்துகின்றார். அதன் பின் அவர் தன் வாசகர்களை மனித பரிணாமத்தின் பாரம்பரிய செயல்பாடுகளான சமையல் மற்றும் அதற்கான நெருப்பு மூட்டுதல், குகை வாழ்க்கை, சடங்குகள், கருவிகளை உருவாக்குதல், வயதடைதல், முயற்சி செய்தல் மற்றும் மரணம் ஆகியவற்றை கருத்தில் எடுத்துக் கொள்ள சொல்கிறார். இவற்றில் எத்தனை யூகங்கள் உண்மையான படிமங்கள். எலும்புகளின் அடிப்படையில் எழுப்பப் பட்டவை மற்றும் எத்தனை யூகங்கள்

இலக்கியத்தை மையமாக வைத்து எழுப்பப்பட்டவை? என அவர் வியக்கிறார்.

அவர் எழுப்பிய இக்கேள்விகளுக்கு அவரே வெளிப்படையான பதில்களை தர மறுக்கிறார்.

உண்மையைக் கூறின், அதிக அளவிலான பதிலளிக்கப்படாத கேள்வி களும், தர்க்க முரண்பாடுகளும் இவற்றில் உள்ளன. பரிணாம தத்துவத்தை அடிப் படையாக வைத்து சிந்தனை செய்பவர்கள் இதனை கண்டுபிடிக்க தவறிவிடுகின்றனர். உதாரணமாக பரிணாமவியலாளர்கள் கற்காலத்தை குறிப்பிடுகின்றனர். ஆனால் கற்காலத்தில், கருவிகள் மற்றும் பொருட்கள் எவ்வாறு செதுக்கி வடிவமைக்கப்பட்டன என்று விளக்க முடியாமல் திணறுகின்றனர்.

இதைப் போலவே, இறக்கை உடைய உயிரிகள் முதலில் எவ்வாறு பறந்தன என்பதையும் விளக்க முடியவில்லை.

இதற்கு அவர்கள் டைனோசர்கள் இறக்கையை கொண்டிருந்தன. அவை ஒன்று மற்றொன்றை பிடிப்பதற்கு முயற்சி செய்து பறக்க ஆரம்பித்தன என்று மழுப்புகிறார்கள். அவர்கள் ஒட்டுமொத்த கேள்வியை மறந்துவிட முனைகின்றனர். மற்றவர்களும் அதைப் போன்று மறந்து விட வேண்டும் என எண்ணுகின்றனர்.

கற்களை செதுக்குதல், வடிவமைத்தல் மிக எளிதான காரியம் அல்ல. ஒரு கல்லை கொண்டு மற்றொரு கல்லை தேய்ப்பதன் மூலம் ஒரே மாதிரியான ஒழுங்கமைப்புள்ள மற்றும் முனை கூர் ஆயுதங்களை உருவாக்குவது என்பது சாத்தியமே இல்லை.

கிரானைட் (கருங்கல்), பசால்ட் (எரிமலைப் பாறை) மற்றும் டோலரைட் (சரளை கற்களாக பயன்படும் எரிபாறை) போன்ற கடினமான கற்களை அவற்றை துண்டு துண்டாக ஆக்காமல் வடிவத்தை கொடுப்பது என்பது எஃகு தேய்ப்பான், கடைசல் இயந்திரம் (Lathes) மற்றும் சமதளமாக்கி இவற்றின் மூலமே முடியும். அதைப் போன்றே கை மற்றும் காதணிகள், மாலைகள் போன்றவற்றை பத்தாயிரம் வருடங்களுக்கு முன்பு கற்களை கொண்டு உருவாக்க முடியாது என்பது தெளிவாகவே நமக்கு புரியும். இவ்வணிகலங்களில் உள்ள சிறிய துளைகளை கற்களை கொண்டு உருவாக்கவே முடியாது. அதில் உள்ள அலங்கார வேலைப்பாடுகளை வெறும் தேய்ப்பதன் மூலம் பெற முடியாது. இப்பொருட்களில் காணப்படும் ஒழுங் கமைப்புகள் ஒன்றை நமக்கு புரிய வைக்கின்றன. அது கடின உலோகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதே.

பரிணாமவியலாளர்கள் முன்வைக்கும் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு ஆதிகால வேலைப்பாடுகளை உருவாக்க முடியுமா என்று தொல்லியல் நிபுணர்களும் அறிவியலாளர்களும் சோதனைகளை நடத்தியுள்ளனர்.

உதாரணமாக சுமார் 11,000 வருடங்களுக்கு முந்தைய துருக்கியில் கண்டெடுக்கப்பட்ட கற்களில் காணப்படும் வரைபடங்களை போன்று உருவாக்கும் முயற்சியில் ஆசிரியர் கிளஸ் ஸ்கிமித் (Klaus Schmidt) ஈடுபட்டார். பரிணாமவியலாளர் களால் கூறப்படும் கற்கருவிகளை ஒரு கல் வேலைப்பாடுகளை செய்யும் ஒருவரிடம் கொடுத்து மேலே குறிப்பிட்ட வரை படங்களை அதைப் போன்ற பாறைகளில் செதுக்குமாறு கேட்டுக் கொண்டார். இரண்டு மணி நேரம் இடைவிடாமல் முயற்சி செய்தார் அவர்.

அவரால் அதில் வெற்றி பெற முடிந்ததா?

இன்ஷா அல்லா அடுத்த இதழில் பார்ப்போம்.

**- தொடரும்**

# மோடியை இயக்கும் சக்திகள்!



அஜித் டோவில், நிரிபேந்த்ர மிஸ்ரா மற்றும் பி.கே. மிஸ்ரா இவர்களின் பெயர்களை நாம் அடிக்கடி செய்திதாள்களில் வருவதை பார்த்திருப்போம். இவர்கள் மூவர்களிடம் ஓர் ஒற்றுமை உள்ளது. இம் மூவருமே நரேந்திரமோடியால் அவருடைய அணியை வழிநடத்த தேர்வு செய்யப் பட்டவர்கள். இவர்களிடம் இன்னொரு ஒற்றுமையும் உள்ளது. டெல்லியை மைய மாகக் கொண்டு இயங்கும் விவேகானந்தா இன்டர்நேஷனல் பவுன் டேஷன் (VIF) இல் களப்பணியாற்றியவர்கள் இவர்கள்.

அஜித் டோவல், மோடியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப் படுவதற்கு முன் ஐபி என்கிற மத்திய உளவுத்துறையின் இயக்குநராக பணிபுரிந்தவர். விவேகானந்தா இன்டர்ஷேனல் பவுன்டேஷன் ஸ்தாபகர் மற்றும் இயக்குனர். மோடியில் அரவை நிறுவப்படுவதற்கு முன்பே அவருக்கு ஆலோசனைகளை வழங்கி வந்தவர். மோடியின் பதவி ஏற்பு விழாவில் தெற்கு ஆசிய தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப் படவேண்டும் என்ற ஐடியாவை வழங்கியது டோவல் தான்.

நிரிபேந்தர மிஸ்ரா - இந்திய தகவல் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தின் (TRAI) தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின் விவேகானந்தா இன்டர்நேஷனல் பவுன்டேஷன் செயற்குழு அவையின் உறுப்பினராக இணைந்தார். இவர் தற்போது மோடியின் தலைமை செயலாளர் (Principal Secretary) - TRAI இன் முன்னாள் தலைவராக பணிபுரிந்தவர்கள் அதன் பின் அரசாங்க வேலைகளில் நியமணம் செய்வதில் சட்டச்சிக்கல் இருந்தது. எனினும் மோடியின் விருப்பத்தால் சட்ட திருத்தம் கொண்டு வரப்பட்டு சிக்கல் தீர்க்கப்பட்டது.

பி.கே. மிஸ்ரா - ஒன்றிய வேளாண்மை துறையின் முன்னாள் செயலாளர் (Union Agri-culture Secretary) விவேகானந்தா இன்டர் நேஷனல் பவுன்டேஷனின் மூத்த உறுப்பினர். இவர் தற்போது கூடுதல் தலைமை செயலாளர்.

அரசாங்கத்தின் முக்கியமான பதவி களில் இன்னும் அதிகமான விவேகானந்தா இன்டர்ஷேனல் பவுன்டேஷனின் உறுப்பினர் கள் சேர உள்ளதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

பிபக் டேப்ராய் - மோடி அமைச்சரவையில் பொறுப்பேற்ற பின் வெளியிட்ட முதல் புத்தகம் GETTING INDIA BACK ON TRACK. இதனுடைய ஆசிரியர் பிபக் டேப்ராய். இவர் விவேகானந்தா இன்டர் நேஷனல் பவுன்டேஷனின் பொருளதார கல்விப் பிரிவின் ஆசிரியர்.

விவேகானந்தா இன்டர்நேஷனல் பவுன்டேஷனின் பணி என்ன? அவர்கள்

இதுவரை செய்த பணிகள் என்னென்ன என்பதை நாம் இங்கே பார்த்திடுவோம்.

அஜித் டோவலின் மூளையில் உதித்தது தான் விவேகானந்த இன்டர்நேஷனல் பவுன்டேஷன். ஐபி என்கிற மத்திய உளவுத்துறையில் இருந்து 2005 ஆம் ஆண்டு இவர் ஓய்வுப் பெற்றார். பின்னர் தன்னுடைய உழைப்பை ஒரு Think-Tank ஐஉருவாக்கிடும் முயற்சியில் செலுத்தினார். 10 டிசம்பர் 2009 அன்று இவருடைய நிறுவனத்தை மாதா அமிர்தானந்தமயி மற்றும் நீதிபதி எம்.என். வெங்கடாச்சலையா இருவரும் திறந்து வைத்தனர்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான எக்னத் ரணடே (EKNATH RANADE) - ஆல் 1970 ஆம் ஆண்டு கன்னியாகுமரியில் நிறுவப்பட்ட விவே கானந்தா கேந்திராவின் ஒரு பிரிவாக இணைந்து (Affiliate) செயலாற்றுகிறது VIF. 1993 ஆம் ஆண்டு விவேகானந்தா கேந்திராவுக்கான இடத்தை சானக்யப்புரியில் நரசிம்மராவ் அரசாங்கம் ஒதுக்கியது. இதே இடத்திலேயே VIF நிறுவப்பட்டுள்ளது.

தேசப் பாதுகாப்பு மற்றும் போர் திறன் கல்வி, சர்வதேச உறவுகள், மற்றும் அரசியல் செயலாண்மை திறம், அண்டை நாடுகள் குறித்த கல்வி, ஆளுகை மற்றும் அரசியல் கல்வி, பொருளாதாரக் கல்வி, வரலாறு மற்றும் நாகரீகங்கள் குறித்த கல்வி,தொழில் நுட்பம் மற்றும் அறிவியல் கல்வி, ஊடகக் கல்வி என எட்டு விதமான துறைகளில் கவனம் செலுத்தி பணியாற்றுகிறது VIF.

தங்களுக்கென ஒரு விதியை அமைத்து செயல்படுகிறது VIF. எனவே அவர்களின் கலந்துரையாடல்களில் பல வெளியே வருவதில்லை. மோடி குஜராத்தின் முதலமைச்சராக இருக்கும் பொழுது பொருளாதார மற்றும் பாதுகாப்பு குறித்த பிரச்னைகளில் VIF ஆலோசனைகளை வழங்கியுள்ளது என சில தகவல்கள் தெரிவிக்கின்றன. மோடியின் தேர்தல் பிரச்சாரங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய திட்டங்களையும் VIF வழங்கியுள்ளன.

மோடி பிரதமராக நிச்சயம் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதில் நாங்கள் நம்பிக்கையோடு இருந்தோம் என்கிறார் VIF இன் உறுப்பினர்களில் ஒருவர். மோடிக்கும் VIF க்கும் இடையேயுள்ள தொடர்புகள் 2014 இல் தெளிவாக வெளிப்படத் தொடங்கியது.

இஸ்ரத் ஜஹான் போலி என்கவுண்டர் வழக்கில் மோடியை காங்கிரஸ் தலைவர்கள் குற்றம் சட்டியபொழுது அஜித் டோவல் மோடிக்கு சாதகமாக இந்த களத்தில் குதித்தார். பாகிஸ்தானை மையமாக கொண்டு இயங்கும் லஸ்கரே தொய்பாவின் ஓர் உறுப்பினர் தான் இஸ்ரத் ஜஹான் என்றும் காங்கிரஸ் அரசு மொத்த விவகாரத்தையும் அரசியலாக்க முனைகிறது என்றும் அவர் வாதாடினார்.

மோடியின் கண்காணிப்பில் பெரு முதலாளிகள் (Industrialists) அதிக லாபம் ஈட்டுகின்றனர். உண்மையில் குஜராத்தில் எந்தவித வளர்ச்சியும் நடைபெறவில்லை என பொது தேர்தலுக்கு முன்பு ஆம் ஆத்மியின் தலைவர் கெஜ்ரிவால் கூறினார்.

இந்த குற்றச்சாட்டிற்கு பின்னர், Concerned Citizen என்ற குழு முன்வந்தது. ஆம் ஆத்மி முற்றிலும் ஆதாரமில்லாத குற்றச் சாட்டை முன் வைக்கிறது. இதன் மூலம் பொதுதேர்தலில் காங்கிரசுக்கு அது உதவி செய்கிறது என்று வாதித்தது அந்தக் குழு.

அஜித் டோவல், ஆசிரியர் எம்.வி. கமத், பத்திக்கையாளர் எம்.ஜெ. அக்பர், ஜம்மு காஷ்மீரின் முன்னாள் ஆளுநர் எஸ்.கே. சின்ஹா, முன்னாள் அரசு அதிகாரி எம்.என். புச் மற்றும் பொருளாதார நிபுணர் பிபக் டேப்ராய் ஆகியோரே இக்குழுவின் உறுப்பினர்கள். இது முழுக்க முழுக்க VIF-இன் வியூகமே.

VIF செய்த மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாக காங்கிரஸிற்கு எதிரான ஒரு சூழ்நிலையை உருவாக்கியதை குறிப்பிடலாம்.

ஊழலுக்கு எதிரான இயக்கத்தை 2011 ஆம் ஆண்டு நாடு முழுவதும் கொண்டு சென்றதில் VIFஇன் பங்கு இன்றியமையாதது என அந்த அமைப்போடு நெருங்கிய தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

ஏப்பிரல் 2011ஆம் ஆண்டு ஊழலுக்கு எதிரான இயக்கத்தை பாப ராம்தேவ் தலைமையில் உருவாக்க வேண்டும் என்ற முடிவு இங்கு எடுக்கப்பட்டதே என VIFஇன் உறுப்பினர் ஒருவர் தன்னுடைய பெயரை வெளியிட வேண்டாம் என்ற நிபந்தனையின் பேரில் இதை தெரிவித்தார். கிட்டத்தட்ட ஒரு வருடமாக இதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. 1 ஏப்பிரல் 2011 அன்று கே.என்.கோவிந்தச்சர்யா (ராஸ்டிரிய சுவபிமன் அந்தோலன்) உடன் இணைந்து இந்த பவுண்டேசன் (VIF) கருப்பு பணம் மற்றும் ஊழல் குறித்த இரண்டு நாள் கருத்தரங்கை நடத்தியது. இதில் பாபா ராம் தேவ், அர்விந்த் கெஜ்ரிவால், மற்றும் கிரண்பேடி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தக் கருத்தரங்கின் முடிவில் பாபா ராம்தேவை பொறுப்பாளராக வும், கோவிந்தச்சார்யாவை ஒருங்கிணைப் பாளராகவும் கொண்ட ஊழல் எதிர்ப்பு இயக்கம் உருவாக்கப்பட்டது. அஜித் டோவல் பிஸ்ம அக்னிகோத்ரி (தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் இருக்கும் பொழுது USஇற்கு அரசு தூதுவராக பணியாற்றியவர்) IIM பெங்களூரில் பணிபுரியும் பேராசிரியர் வைத்யாநாதன், வேத் பிரதாப் வைதிக், மற்றம் குருமூர்த்தி ஆகியோர் இதில் உறுப்பினராக இணைந்தனர்.

இதற்கிடையில் பாபா ராம்தேவையும் அண்ணா ஹசாரேவையும் இணைத்து ஒரு சந்திப்பை ஏற்படுத்தினார் கோவிந்தச்சர்யா. ஊழல் எதிர்ப்பு இயக்கத்தை இவர்கள் மூவரும் முன்னெடுத்து செல்ல வேண்டும் என்ற வியூகத்தை விவேகானந்தா இன்டர் நேஷனல் பவுன்டேஷன் உறுப்பினர்களே வகுத்து தந்தனர். இந்த கருத்தரங்கு நடந்து முடிந்து மூன்று நாட்கள் கழித்து அண்ணா ஹசாரே உண்ணாவிரத்தை ஜந்தர் மந்தரில் தொடங்கினார். ஏப்பிரல் மாதத்தின் இறுதியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு எதிராக ஜூன் 4ம் தேதி அன்று புது டெல்லியில் உள்ள ராம்லீலா மைதானத்தில் வைத்து போராட்டம் நடத்தப் போவதாக பாபா ராம்தேவ் அறிவித்தார்.

சங்பரிவாரின் தலைவர்கள் அடிக்கடி VIF இற்கு விஜயம் செய்கின்றனா. VIFஇல் நடைபெற்ற ஓ.பி. குப்தாவின் Defining Hindutva என்ற புத்தக வெளியீட்டு விழாவில் மோகன் பகவத் கலந்து கொண்டார். ஆர்.எஸ்.எஸ். வேறு VIF வேறு என்று நாம் நினைப்பது தவறு. ஏனெனில் விவேகானந்தா கேந்திரத்தின் வழி உருவானதே VIF என்கின்றனர் விமர்சனங் களை முன்வைப்போர். வலது சாரி சிந்தனை கொண்டவர்களை வைத்தே VIF பணியாற்று கிறது. இவர்கள் இந்த சிந்தனையின் அடிப்படையிலேயே தான் செயல்படுவார்கள் என்பதற்கு சில உதாரணங்களும் முன் வைக்கப்படுகின்றன.

(Wendy Doniger) வெண்டி தோனிகரின் The HIndu - An Alternative History என்ற புத்தகம் குறித்த எதிர் கருத்துக்கள் கிளம்பிய பொழுது, VIFஇன் மூத்த உறுப்பினரான மக்கன் லால் இவ்வாறு எழுதினார். பேச்சு, சுதந்திரம் என்ற பெயரில் இந்துக்களை கடுமையாக விமர்சனம் செய்வதற்கு இப்புத்தகம் போலி மதச் சார்பின்மைவாதிகளுக்கும் இந்துக் களுக்கு எதிரான மனநிலை கொண்டவர்களுக்கும் வழிவகை செய்கிறது என்றார்.

இந்துக்களை பலகாலமாக சுரண்டி வந்ததன் (EXPLOIT) விளைவே இந்த லோக் சபா தேர்தலின் முடிவுகள் என அதன் இணை இயக்குனர் பிரபத் சுக்லா எழுதினார். இவ்வகையான கருத்துக்கள் வலது சாரி சிந்தனை கொண்ட கருத்துக்கள் அல்லாமல் பின் எதை உணர்த்துகிறது?

VIFஇன் உறுப்பினர்களில் சிலர் இதை மறுக்கின்றனர். அரசியல் ஆதாயங்களுக்காக நாங்கள் வேலை செய்வது இல்லை. எங்கள் பவுன்டேசனின் தலையாய நோக்கமே நாடு

எதிர்நோக்கி கொண்டிருக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு சொல்வதுதான். காங்கிரஸ் பார்க்கும் கண்ணோட்டத்தை போன்று நாங்கள் ஆர்.எஸ்.எஸ்.ஐ பார்க்கவில்லை. ஆர்.எஸ்.எஸ். செய்வதில் என்ற தவறு இருக்கிறது? ஹிந்து சமுதாயத்தின் மதிப்பை மீண்டும் நிலைபெற முயற்சி செய்கிறது. பண்டையக்கால சன்ஸ்கிருதி (Sanskritik) கொள்கைகளை நிறுவ ஆர்.எஸ்.எஸ். முயற்சி செய்கிறது. சிறப்பான வேலையை தான் ஆர்.எஸ்.எஸ். செய்கிறது என்றார் வெர்மா.

இந்தியாவின் கலாச்சார, பாரம்பரிய மற்றும் ஆன்மிக பண்புகளை சரியான முறையில் எடுத்துரைப்பதே நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் முக்கியமான விவகாரங்களில் ஒன்று. பிரிட்டிஷ்ஷாரும், தாமஸ் மெக்காலேவும் தந்த புத்தகங்களையே நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். நம்மிடம் தாழ்வு மனப்பான்மையை உருவாக்குவதற்கும், இந்தியாவின் அடிப்படை மதிப்புகளை தகர்த்திடுவதுமே அவர்களின் நோக்கமாகும். நம்முடைய உண்மையான வரலாற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காக பவுண்டேஷன் உழைத்துக் கொண்டிருக்கிறது. 10-11 தொகுப்புகளை கொண்ட இந்தியாவின் வரலாறு என்ற புத்தகம் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கான வேலை பாதியளவு முற்றுப்பெற்றுள்ளது என்கிறார் வெர்மா.

நரேந்திர மோடி சர்காரில் VIFஇன் உறுப்பினர்கள் தொடர்ந்து இணைந்து கொண்டிருப்பதால் இந்தியாவின் வெளிநாட்டு, பொருளாதார மற்றும் பாதுகாப்பு கொள்கைகளை வகுப்பதில் இந்த Think - Tank முக்கிய பங்கு வகிக்கும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

**ஆதாரம் : தெஹல்கா, ஆகஸ்ட் 2014**


# இப்போது பரபரப்பான விற்பனையில் படித்து விட்டீர்களா!




**விலை : ரூ. 20.00**

**அ. மார்க்ஸ் அவர்களின்**

**டி.எம். உமர் பாரூக்**

**ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும்**

வெளியீடு :

**வேர்கள் பதிப்பகம்,**
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்புக்கு : 8148129887

# நெல்சன் மண்டேலாவின் பேரன் இஸ்லாத்தை ஏற்றார்

சிறையிலும் வாடாத கறுப்பு ரோஜா என்பார்கள் நெல்சன் மண்டேலா அவர்களை.

காரணம் தென் ஆப்பிரிக்காவில் நிறத்தால் கறுப்பாய் ஆனவர்கள் மீது நிறத்தால் வெள்ளையானவர்கள் அவிழ்த்து விட்ட கொடுமைகளிலிருந்து காப்பாற்றிட நீண்ட நெடிய காலம் போராடி வந்தார்.

வெள்ளையர்களின் நிறவெறி Appartheid அவரை சிறைபிடித்தது. 28 ஆண்டுகள் தொடர்ந்து சிறையிலேயே வைத்திருந்தார்கள்.

ஆனாலும் வெள்ளை நிறவெறியர்களுக்கு அடிப்பணிந்திட மாட்டேன். அவர்களை வெள்ளையர்களின் பிடியிலிருந்து மீட்டே தீருவேன் என தன் போரை சிறையிலிருந்து கொண்டே நடத்தினார். வென்றார்.

வெள்ளையர்களின் ஆதிக்கத்திலிருந்து தென் ஆப்பிரிக்க விடுபட்டது. கறுப்பர்கள், அனைத்து அதிகாரத்தையும் பெற்றார்கள்.

இந்த மாபெரும் வீரரின் பேரன் தான் Mandla Mandela மாண்லா மண்டேலா. இவர் ஒரு வருடத்திற்குமுன் இஸ்லாத்தை ஏற்ற அந்த நாளிலிருந்தே அவருக்கு எதிர்ப்புகள் கிளம்பத் தொடங்கிவிட்டன.

இவர் நெல்சன் மண்டேலாவின் பேரன் என்ற அளவில் நெல்சன் மண்டேலாவின் கீர்த்தியும், கித்தாப்பும் இவருக்கே சொந்தமாகிப் போனது. நெல்சன் மண்டேலாவின் குடும்பத்தவர்களும் தென் ஆப்பிரிக்காவில் வாழும் எஸ்சோ XHOSA என்ற இன மக்களும் இவரை நெல்சன் மண்டேலாவின் இடத்தில் வைத்தே பார்க்கின்றார்கள். மதிக்கின்றார்கள்.

இந்த எஸ்சோ என்பது தென் ஆப்பிரிக்காவில் வாழும் (குறிப்பாக கிழக்குத் தென் ஆப்பிரிக்காவில் வாழும்) ஓர் கறுப்பின மக்கள். இவர்கள் பேசும் மொழி ‘எஸ்கோ’ அதை வைத்தே இவர்களை இப்படி அழைக்கின்றார்கள்.



இந்த ‘எஸ்கோ’ இன கறுப்பர்கள் தென்னாப்பிரிக்காவில் 63 இலட்சம் பேர் வாழுகின்றார்கள்.

28 ஆண்டுகள் தொடர்ந்து வெள்ளையர்களால் சிறை வைக்கப்பட்ட நெல்சன் மண்டேலா இந்த இனத்தைச் சார்ந்தவர்தான். அவருக்கு பின் இவரைத்தான் அந்த மக்கள் தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆக தென் ஆப்பிரிக்காவின் விடுதலை வீரரின் பேரன் வழி இனி இஸ்லாம் அங்கே கோலோச்சலாம்.

இந்த அச்சம் தென் ஆப்பிரிக்காவில் வாழும் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு மிகவும் அதிகமாகவே வந்து விட்டது. எதிர்ப்பு முதன் முதலில் அவருடைய குடும்ப உறுப்பினர்களிடையே எழுந்திருக்கின்றது.

அவர்கள் மண்டேலாவின் பேரன் மாண்லா மண்டேலா இஸ்லாத்தை ஏற்றது செல்லாது எனக் கூறி வருகின்றார்கள்.

அத்தோடு சக குடும்ப உறுப்பினர்களுக்கு ஓர் அபாய எச்சரிக்கையையும் விடுத்துள்ளார்கள். அது, இவர் அதாவது இஸ்லாத்திற்கு மாறியுள்ள மாண்லா மண்டேலா இனி வவருடைய மதக் கொள்கைகளை நம்மிடையே பரப்புவார் என்பதே!

இதனிடையே கடந்த பெப்ருவரி திங்கள் 6 ஆம் நாள் அவர் ரூபியா கிளார்க் என்ற முஸ்லிம் பெண்ணை திருமணம் செய்திருக்கின்றார். இந்தத் திருமணத்தை ஷேஹ் இப்றாஹிம் கேபரியேல் என்ற இமாம் நடத்தி வைத்தார்கள்.

திருமணத்தை நடத்தி வைத்த இமாம் தென் ஆப்பிரிக்காவிலுள்ள Muslim Judicial Council முஸ்லிம் நீதி நிர்வாக அவையின் தலைவராக இருந்தவர். தென் ஆப்பிரிக்காவில் மிகவும் மதிக்கப்படுகின்ற ஒரு மார்க்க அறிஞர்.

திருமணத்தை நடத்தி வைத்த அவர், “நான் இந்த திருமணத்தை நடத்தி வைப்பதில் பெருமைப்படுகின்றேன். உண்மையில் இது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பு. ஏனெனில் உலகின் மிகப்பெரிய தலைவர்கள் ஒருவரின் பேரனின் திருமணத்தை நான் நடத்தி வைக்கின்றேன்” என்றார்.

எதிராளியின் வெறும் வாய்க்கு, அவல் கிடைத்ததை போல், இந்தத் திருமணம் அமைந்தது.

அவர்கள், இனி மாண்லா மண்டேலா, அதாவது நெல்சன் மண்டலோவின் பேரன் இனி Congress of Traditional Leaders, பாரம்பரிய தலைவர்களின் கூட்டமைப்பு என்ற அமைப்பிற்குத் தலைமை தாங்கிட இயலாது எனக் கூப்பாடு போடுகின்றார்கள்.

இந்த பாரம்பரிய தலைவர்களின் கூட்டமைப்புதான் தென் ஆப்பிரிக்காவின் நிறவெறி கொள்கைளுக்கெதிராக எழுந்து நின்ற முதல் அமைப்பு. இந்த அமைப்பு அன்று வரை Appartheid என்ற நிற வெறிக் கொள்கைளுக்கு எதிராக போராடி UDF: என்ற United Democratic Front ஐக்கிய ஜனநாயக முன்னணி, நெல்சன் மண்டேலா வின் (ANC) African National Congress ஆப்ரிக்காவின் தேசிய காங்கிரஸ் ஆகியவை இணைந்து உருவாக்கிய அமைப்பு. உண்மையைச் சொன்னால் மக்கள் இயக்கம்.

இதனால் இந்த அமைப்பு அதாவது Congress of Traditional Leaders - பாரம்பரிய தலைவர்களின் கூட்டமைப்பு, தென் ஆப்பிரிக்க மக்களிடம் நிறைவான செல்வாக்கை பெற்ற அமைப்பு. இதன் தலைவராகவும் மாண்லா மண்டேலாதான் இருக்கின்றார்.

இந்தக் கூட்டமைப்பின் தலைவராக இனி மாண்லா மண்டேலா இருக்க முடியாது. காரணம் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என எதிரிகள் கூறி வருகின்றார்கள்.

ஆனால் இந்த அமைப்பின் தலைமை செயலாளர் எஸ்சோடைல் நெவ்வு XOTITLE NDERU, இந்தத் திருமணத்தை நாங்கள் வரவேற்காமலில்லை (அதாவது வரவேற்கின்றோம்) என்றே கூறியுள்ளார்.

இதர உறுப்பினர்கள் மாண்லா மண்டேலா தான் ஏற்றுக் கொண்டுள்ள இஸ்லாத்தின் கொள்கைகளை இந்த அமைப்பில் திணித்தால் எல்லாம் கெட்டு விடும் என்கின்றார்கள்.

அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னரே சிலர் அவரை விமர்சித்து வருகின்றார்கள். இவர்கள் அனைவருமே அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். காரணம் இவர்கள் நெல்சன் மண்டேலாவின் பாரம்பரியத்தை தங்களாக்கிக் கொள்ள முயற்சிகளைச் செய்து வருகின்றார்கள்.

நெல்சன் மண்டேலாவின் பாரம்பரியத்தைத் தங்களதாக ஆக்கிக் கொண்டால் அரசிடம் சிறப்பான சலுகைகளைப் பெறலாம். வியாபார ஒப்பந்தங்களைப் பெறலாம் என எண்ணுகின்றார்கள். இப்போது தங்கள் வெறுப்பை பகையாக்கிட அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதைப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

அவருடைய முஸ்லிம் பெண் திருமணம் செல்லாது என்றே கூறுகின்றார்கள். மாண்லா மண்டேலா ஏற்கனவே இரண்டு பெண்களைத் திருமணம் முடித்திருந்தார். முதல் மனைவியை விவாகரத்து செய்த பின்னரே இரண்டாவது மனைவியைத் திருமணம் செய்தார். அவரையும் விவாகரத்து செய்துவிட்டார். அதற்கு வெகு நாட்களுக்குப் பின்னரே இஸ்லாத்தை ஏற்றார். இஸ்லாத்தை ஏற்று ஓராண்டுக்குப் பின்னரே முஸ்லிம் பெண்ணை திருமணம் செய்தார் என்பது கவனிக்கத் தக்கது.

**Radiance, Views Weekly/ ABC News**

**MGM**

# மௌனத்தின் சாட்சியம் விவாதம் – தொடர்ச்சி. . .

மௌனத்தின் சாட்சியங்கள் என்றொரு புதினம். 1998 கோவை குண்டு வெடிப்புகளை மையப்படுத்தி எழுதியவர் அன்பு கெழுமிய நண்பர் ஷம்ஸ் ஹீரா. இந்த நூல் வெளியீட்டு நிகழ்ச்சிக்கு என்னையும் அழைத்திருந்தார்.

நிகழ்ச்சியில் நான் சில மாற்றுக் கருத்துக்களைப் பதிவு செய்திருந்தேன். பின்னர் நிகழ்வுகளை ‘வைகறை வெளிச்சம்’ நவம்பர் 2015 இதழில் வெளியிட்டிருந்தோம். அதிலும் அந்த மாற்றுக் கருத்துக்களைப் பதிவு செய்திருந்தேன்.

அந்தக் கருத்துக்களை மறுத்து நண்பர் ‘ஷம்ஸ் ஹீரா’ ஒரு கட்டுரையை வைகறை வெளிச்சம் இதழுக்கு அனுப்பி இருந்தார். அதில் பல அடிப்படைய கேள்விகளை எழுப்பியிருந்தார். அவற்றில் ஒரு பகுதிக்கு ‘வைகறை வெளிச்சம்’ பெப்ருவரி இதழில் விளக்கம் தந்திருந்தேன். எஞ்சிய பகுதிகளுக் குரிய எனது விளக்கத்தை இங்கே இடம் பெறச் செய்கின்றேன்.

நண்பர், இஸ்லாமிய ஆட்சியில், எந்த வகை உற்பத்தி நிலவியது? அரசுக்கும் உற்பத்திக்குமான உறவு எப்படி இருந்தது? உற்பத்திக்கும் மக்களுக்குமான உறவு எப்படி இருந்தது? என கேள்வி கணைகளைத் தொடுத்திருந்தார் மௌனத்தின் சாட்சியம் ஆசிரியர்.

1738இலிருந்து தொடங்கிய விஞ்ஞான புரட்சி அதனை அடுத்து வந்த தொழில் புரட்சி முதலாளிகளின் தோற்றம், இவற்றிற்கு பின்னால்தான் நண்பர் சம்சு ஹீரா தூக்கிப் பிடிக்கும் கம்யூனிசம் தோன்றியது. (1917 அக்டோபர் புரட்சியில் ஆட்சியைப் பிடித்தது) அதனால் கம்யூனிசம் என்ற பொதுவுடைமையை கொள்கையாக கொண்டவர்கள் பெரும உற்பத்திக்கு வழி வகுத்த தொழிற் புரட்சிக்கு (1700-1900 வரை) முன்னால் உள்ள காலக்கட்டத்தைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். இஸ்லாம் அதற்கு முன் 1200 ஆண்டுகளுக்கு முன்னரே அருளப்பட்ட மார்க்கம். அது மனிதன் எதிர்நோக்கும் எல்லாப் பிரச்னைகளுக்கும் தீர்வாக அருளப்பட்ட மார்க்கம். அது எப்படி உற்பத்தி முறைக்கும், அதன் தாக்கங்களுக்கும் பதில் காணாமல் இருக்க முடியும்?

அது முதலாளிகளின் உரிமைகளையும் தொழிலாளர்களின் உரிமைகளையும் அன்றே வரையறுத்து தந்தது. மட்டுமல்லாமல் முதலாளிகளும் தொழிலாளர்களும் இணைந்து பங்குதாரர்களாக தொழில் செய்யும் ‘முதரிபா’ முறையை அதாவது இலாபம் அல்லது நஷ்டத்தில் பங்கு என்ற முறையை அன்ற அறிமுகப்படுத்தியது.

அவர்களை இரு வர்க்கங்களாக ஆக்கி மோதவிட்டுக் கொண்டிருக்கவில்லை.

இந்த முதரிபா முறையில் ‘முதல்’ வைத்திருப்பவர்கள் முதலைப் போட வேண்டும். அது அவருடைய முதலீடு. தொழிலாளி தன் உழைப்பை போட வேண்டும். அது தொழிலாளியின் முதலீடு. இலாபத்தை அல்லது நஷ்டத்தை இருவரும் தங்கள் முன்னரே ஒத்துக் கொண்ட ஒரு விகிதத்தில் பிரித்துக் கொள்ள வேண்டும். இந்த முதரிபா முறையின் கீழ் செய்யப்பட்ட சில ஒப்பந்தங்கள் தொழிலாளிக்கு இலாபத்தில் 50 சதவீகிதம் வரை கிடைக்கச் செய்யும் ஒப்பந்தங்களும் உண்டு. அதாவது சரிபாதி இலாபம் அல்லது நஷ்டம். (இமாம் மாலிக் அவர்களுடைய காலம்)

சேர்ந்து செய்யும் தொழில் நஷ்டம் ஏற்பட்டால் முதலை முதலீடு செய்தவருக்கு அதாவது முதலாளிக்கு முதல் நஷ்டம் உடன் பங்கு இருந்த தொழிலாளிக்கு உழைப்பு நஷ்டம்.

இதில் யாராவது எல்லாம் இழந்த கையறு நிலையை அடைந்தால் அவர் தாராளமாக இஸ்லாமிய ஆட்சியில் நிரந்தர ஏற்பாடாய் இடம் பெற்ற பொதுநிதி கருவூலத்திலிருந்து தனது உரிமையை அதாவது, தன் வாழ்வுக்குத் தேவையான வாழ்வாதாரத்தைப் பெறலாம்.

இஸ்லாமிய மரபில் பொதுநிதி கருவூலத்திலிருந்து வாழ்வாதாரத்தைப் பெறுவது யாசிப்பதல்ல மாறாக குடிமக்களில் ஒருவன் தன் உரிமையைப் பெறுவது என்று பெயர். ஜகாத் என்ற நிறுவனம் நிரந்தரமாக அங்கே நின்று கொண்டிருந்து ஒடிந்து வருபவர்களின் வாழ்க்கையை யாசகர்களின் வாழ்க்கையாக ஆக்கிவிடாமல் பாதுகாத்தது.

ஆக பொதுவுடமையை பேசுவோர், தொழிலாளர்களை ஓர் வர்க்கம் என்று தான் பிரித்து வைத்திருந்தார்கள். ஆனால் இஸ்லாம் அவர்களை முதலாளிகளாக ஆக்கிடும் ஓர் சமுதாய முறையையே அறிமுகப்படுத்தி நிலை நாட்டிற்று. அங்கே சகோதரத்துவம் நிலைத்து நின்று அந்த தொழில் முறையில் உற்பத்தி முறையில், வட்டி எங்கேயும் தலைகாட்டிட வில்லை.

இத்தோடு நில்லாமல் இறைவனின் தூதர் பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் இரண்டு பெரிய அங்காடிகள். உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வியாபார கூட்டங்கள் வந்து குழுமும் சர்வதேச சந்தை அவை. ஒன்று மதீனாவில், இன்னொன்று மக்கமா நகரில் இருந்தது. இந்த இரண்டு அங்காடிகளிலும் நடப்பனவற்றை கண்காணிப்பாளராகப் பெருமானார் (ஸல்) அவர்களே இருந்தார்கள்.

நிறுவையில், அளவில் மோசடி நடந்து விடாமல் பார்ப்பது, பதுக்கலில் ஈடுபடாமல் கண்காணிப்பது என பலப் பணிகளைச் செய்தார்கள். அங்காடிக்குள் சென்று விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த தானிய மூட்டைகளுக்குள், கைவிட்டுப் பார்ப்பார்கள். மேலே உலர்ந்த தானியங்களை (கோதுமை முதலானவை) வைத்துவிட்டு உலர்ந்த தானியங்களுக்குக் கீழ் ஈரமான தானியத்தை வைத்து நிறுவையில் மோசம் செய்யாமல் கண்காணித்தார்கள்.

இது போன்ற நடவடிக்கைகளுக்கு அதாவது நிறுப்பதில், அளப்பதில் மோசடி செய்பவர்களுக்கும், பதுக்கல் போன்ற மனிதாபிமான மற்ற செயல்களில் ஈடுபடுபவர் களுக்கும், சாட்டை அடிகள், கசையடிகள், தண்டனைகள்.

இது போன்ற தண்டனைகள் வழங்கப்பட வேண்டிய நிலை வந்தால் அவை இதர வியாபாரிகள், தொழிலதிபர்கள், நுகருபவர்கள் இவர்களின் மத்தியில் வைத்தே வழங்கப்படும். இப்படித் தான் தண்டிக்கப் படுவதைப் பார்ப்பவர்கள் அதுபோன்ற அநீதிகளில் ஈடுபடுவதைப் பற்றி எண்ணி கூட பார்க்க மாட்டார்கள்.

பிற்றை நாள்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஆற்றிட வேண்டிய பணிகள் பல்கிப் பெருகின. இதனால் பெருமானார் (ஸல்) அவர்கள், இந்த பணியை அதாவது அங்காடிகளைக் கண்காணிக்கும் பணிகளை தனது தோழர்களிடம் ஒப்படைத்தார்கள். இஸ்லாம் பரவிய இடங்களிலும் இம் முறை பின்பற்றபட்டன. அதன் பின் இன்றளவும் இஸ்லாமிய நிருவாகமிருக்கும் இடங்களி லெல்லாம் இந்த முறை ஓர் நிறுவனமாகவே செயல்பட்டு வருகின்றது.

இஸ்லாம் ஸ்பெயினில் ஐரோப்பாவின் நுழைவாயிலில் அடியெடுத்து வைத்த நாள்களில் ஐரோப்பாவும் இதே முறையை கடைபிடித்து பற்பல அங்காடி விதிகள் ஐரோப்பாவின் பல பாகங்களிலும் இயற்றப்பட்டன. பின்னர் ஐரோப்பாவின் அடிமைத் தளைகளிலிருந்து விடுபட்ட பல நாடுகளும் இந்த அங்காடி விதிகளைத்

தத்தெடுத்துக் கொண்டன. பிற்றை நாள்களில் அவையே நுகர்வோர் உரிமை எனப் பரிணமித்தது. விதிகள் வகுக்கப்பட்டன. நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.

'மௌனத்தின் சாட்சியம்' ஆசிரியர் இன்றும் பல அடிப்படை கேள்விகளை எழுப்பியுள்ளார். இன்ஷா அல்லாஹ் அவற்றிற்கான விளக்கத்தை அடுத்த இதழில் இடம் பெறச் செய்வோம்.

**விளக்கம் தொடரும். . .**

**இவண் : திருப்பூர் காதர்**

இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவன் ஒருவனே என்ற செய்தியைத் தான் பரப்பிட வந்தார்கள். அவர்கள் அங்காடிகளையுமா கண்காணித் தார்கள் சிலர் எண்ணலாம். ஆமாம் அவர்கள் இறைவன் ஒருவனே அவனே அல்லாஹ் என்ற செய்தியைச் சொல்ல வந்தவர்கள்தாம். அந்த ஏகத்துவத்தில் மக்கள் அந்த அல்லாஹ்வுக்காக எல்லா நிலையிலும் நீதியும் நேர்மையும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பது அடிப்படை நிபந்தனை. (அல்குர்ஆன் 5:8).

இந்த நிலையை அடையாதவரை ஏகத்துவம் நிறைவுபெறாது. ஏகத்துவம் நிறைவு பெற இஸ்லாமிய ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும்.

# சிக்கா வைரஸ் (ZIKA VIRUS)

சிக்கா வைரஸ் நோய் (ZIKA VIRUS) டெங்கு காய்ச்சல், சிக்குன் குனியா நோய்களை பரப்பும் அதே வகை ஏய்டிஸ் ஈஜிப்டீ (Aedes Egypte) வகை கொசுக்களால் பரவுகிறது. எல்லோ காய்ச்சல் (Yellow Fever) இவ்வகை கொசுக்களால் தான் பரவுகிறது.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள், சிறிய தலையுடன் அளவில் சிறிய வளர்ச்சியடைாத மூளையுடனும் பிறக்கின்றன.

மனிதர்களிடையே மேற்படி கொசுக்களின் கடியினால் பரவுகிறது. கொசு கடித்து, 2 முதல் 7 நாட்களில் நோயின் அறிகுறிகள் உடம்பில் தென்படும். காய்ச்சல், தலைவலி, Rash, கைகால் மூட்டு வலி, கண் நோய் (Conjunctivitis) போன்ற அறிகுறிகள் தோன்றும். இந் நோயினால் மரணம் ஏற்படுவது மிகவும் அரிது. வலி நிவாரணி மாத்திரைகள் தவிர்க்கப்பட வேண்டும். இந்த நோய்க்கு இதுவரை தடுப்பூசியோ, மருந்து மாத்திரைகளோ கண்டு பிடிக்கப்படவில்லை. (WHO) உலக சுகாதார நிறுவனம் இதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது.

இந்த வைரஸ் முதன் முதலில் 1947ல் சீக்கா காடுகளிலுள்ள குரங்குகளில் கண்டு பிடிக்கப்பட்டது. பின்னர் லத்தீன் அமெரிக்க நாடுகளில் பரவியது. தற்சமயம் இந்த நோய் 39 நாடுகளுக்கு பரவியுள்ளது. இதில் 37 அமெரிக்க நாடுகளாகும். பிரேசில் 3900, கொலம்பியா 11,500 பேர், எல் சால்வடோர் 5400 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இந்த நோய் இந்தியாவில் தற்சமயம் இல்லை. என்றாலும் ஏய்டிஸ் இஜிப்டி கொசு இந்தியாவின் பல பகுதிகளில் பெருமளவு காணப்படுவதால் இந்நோய் பரவ வாய்ப்புள்ளது. இந்த நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவர்களை அணுக வேண்டும்.

**தகவல் : டாக்டர் அப்சல், எம்.பி.பி.எஸ்.**

# பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி

**ஆங்கிலம் : கரன் ஆம்ஸ்டிராங்** **தமிழில் : மு. குலாம் முஹம்மத்**



**நவீனங்கள் நிறைந்த இன்றைய உலகைப் பற்றி யார் கொள்ளும் பார்வையும் முழுமையானதாக அமைந்திடாது. அவர் இஸ்லாத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றால்.**

**இஸ்லாத்தைப் புரிந்திட வேண்டும் என்றால், இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் புரிந்திட வேண்டும்.**

**முஹம்மத் (ஸல்) அவர்களை ஓர் இறைத்தூதர் என்ற அளவிலும், ஒரு மனிதர் என்ற அளவிலும் ஒரு தனி மனிதர் என்ற அளவிலும் புரிந்திட வேண்டும்.**

**இந்த உலகிற்கு மதங்களைக் கொண்டு வந்தவர்களில் மிகவும் அதிகமாக அறியப்படுபவர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.**

**அவர்களைப் பற்றி வெளிவந்துள்ள இலக்கியங்கள் பலப்பல. இந்த இலக்கியங்களில் பல அவரது வாழ்க்கையை சரியான கோணத்தில் நம் முன் சமர்ப்பிக்கின்றன. இன்னும் பல, வேண்டுமென்றே அவருடைய வாழ்க்கையைத் திரித்தும் புரட்டியும் தவறான எண்ணங்களையும் அவற்றின் வழி தவறான சிந்தனைகளையும் விதைக்கின்றன, வளர்க்கின்றன.**

**ஆனால் கரன் ஆம்ஸ்ட்ராங் -இன் இந்த நூல் அந்த கண்ணியமிக்க மனிதரின் வாழ்க்கையை நடுநிலையோடு நம்முன் சமர்ப்பிக்கின்றது.**

SUNDAY TIMES **லண்டலிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ்**

# பூம்பொழில்

முஹம்மத் (ஸல்) அவர்களின் மழலைப் பருவம், அநாதைகளின் அனுபவத்தைத் பெற்று தந்தது என்றால், அவர்களின் வாலிபப் பருவம், தான் மனந்திட விரும்பிய பெண்ணை தன்னிடம் பொருள் வளம் இல்லாத காரணத்தினால் மணமுடிக்க முடியாமல் போனது அவர்களுக்கு பொருள் சாாந்த அனுபவத்தை பெற்றுத் தந்தது.

ஆனால் எதையும் பொருட் படுத்தாமல் நேர்மையும், நெஞ்சுரமும் குன்றாமல், குறையாமல் தன்னிடம் தன் பெரிய தந்தை ஒப்படைத்த வியாபார பொறுப்புகளை நிறைவேற்றினார்கள் முஹம்மத் அவர்கள்.

அப்பொழுதுதான் அந்த திருப்பம் நிகழ்ந்தது.

அந்தத் திருப்பத்திற்கு முதலீடாக அமைந்தது முஹம்மத் அவர்களின் நேர்மை, நாணயம், நம்பகத்தன்மை, ஆகியவைத்தான்.

இந்த நேர்மையும், அவர்கள் இயல் பாகவே பெற்றிருந்த அறிவு சாதுரியமும் இவை அந்த மக்கத்து மக்களிடையே சிறந்ததொரு பெயரைப் பெற்றுத் தந்திருந்தன.

மக்கத்து மக்களின் வாய் வழி செய்திகள் வழி முஹம்மத் (ஸல்) அவர்களின் நம்பகத் தன்மையும், நேர்மையும் மக்கள் மன்றத்தில் வெகுவாகவே பரவி இருந்தது.

இதை அறிந்த 'அசத்' குடும்பத்தைச் சார்ந்த கதீஜா பிந்த் அல் குவாலித் என்ற பெண்மணி முஹம்மத் - ஐ தன்னுடைய வியாபாரத்தை கவனிப்பவராக ஆக்கிட வேண்டும் என அவாவுற்றார்.

இவர் முஹம்மத்துக்கு தூரத்து உறவு.

கதீஜா பிந்த் அல் குவாலித் அவர்கள் மக்கா நகரின் மக்கள் நன்றாக அறிந்த பெண்மணி. அவருடைய ஒழுக்கமே அவரை அனைவரும் அறிந்திருக்கவும் அவரை புகழ்ந்துரைக்கவும் செய்தது.

மக்கமா நகரிலே பிறந்து வளர்ந்து நல்ல அறிவும், பண்பும் நிறைந்த குடும்பத்தைச் சார்ந்த விபரமான பெண்மணி கதீஜா பிந்த் அல் குவாலித்

அவருடைய கணவர் இறந்து விட்ட தால் கணவருடைய வியாபாரத்தை அவரே செய்து கொண்டிருந்தார். சிறந்ததொரு வியாபாரியாகவுமிருந்தார்.

அன்றைய மக்கத்துச் சூழலில் பெண்கள் - குறிப்பாக வசதியான குடும்பத்தி லுள்ள பெண்கள், வியாபாரம் செய்திடவும் அதில் வியாபித்திடவும் வாய்ப்புகள் நிறையவே கிடைத்தன. செல்வாக்குள்ள குடும்பத்தில் பிறந்த பெண்களுக்கு இஃது கைவரப்பெற்றது.

ஆனால் பொருள் வளமில்லாத, வசதி குறைந்த பெண்களுக்கு இந்த வாய்ப்புகள் வசப்படவில்லை.

செல்வப்பெருக்கும், செல்வாக்கும், கண்ணியமும் பெற்றிருந்த கதீஜா பிந்த் அல் குவாலித் அவர்கள் நேர்மையும், நம்பகத் தன்மை நிறைந்த முஹம்மத் தனக்காக வியாபாரம் செய்ய வேண்டும் என விரும்பினார்.

எதிர்வரும் நாட்களில் சிரியா செல்லும் தனது வியாபார பரிவாரத்திற்கு முஹம்மத் -ஐ பொறுப்பாக நியமிக்க வேண்டும் என முடிவு செய்தார். முஹம்மத்-ஐ அழைத்துப் பேசினார்.

அடுத்து சிரியா செல்லும் தன்னுடைய வியாபாரக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிச் சென்றிட வேண்டும் எனக் கோரினார். அவ்வாறே நியமித்தார்.

அந்த வியாபாரத்தை முஹம்மத் மிகவும் திறம்பட செய்தார். ஆமாம்! ஹதீஜா பின்த் அதில் குவாலித் வியந்து மகிழ்ந்தார். அந்த வியாபாரம் பெற்றுத் தந்த இலாபத்தைக் கண்டு! வியாபாரத்தில் அவர் காட்டிய நேர்மை கழிவிரக்கம் இவையெல்லாம் முஹம்மத்துடன் சென்ற கதீஜா பிந்த் அல் குவாலித்தின் பணியாள் வியந்து விரித்துரைத் தார்.

முஹம்மத் - ஐ திருமணம் செய்து கொள்ள தூது அனுப்பினார். முஹம்மத் அதை ஏற்றுக் கொண்டார். திருமணம் முடிந்தது. நமது குடும்ப உறவுகள் உங்களுக்கு மக்களிடையே இருக்கும் செல்வாக்கு, நம்பகத்தன்மை, நேர்மை, பரிவான குணம் இவற்றால்தான் உங்களை நான் விரும்பினேன் என கதீஜா பின்னர் கூறினார். அதாவது தான் முஹம்மத்! அவர்களை மணந்து கொண்டதற்கான காரணத்தை கூறினார். பிற்றை நாள்களில், முஹம்மத் (ஸல்) அவர்களை விமர்சித்தவர்கள் பணம் படைத்த விதவையை திருமணம் செய்ததை சற்றே இடித்துக் காட்டினார்கள். ஆனால் இஃதொன்றும் பணத்திற்காக நடந்த திருமணமல்ல. முஹம்மத் அவர்களின் அடுத்து வந்த வரலாறுகள் இந்த உண்மையைத் தெள்ளிதின் விளக்கின. அந்தப் பணத்தையும் செல்வத்தையும் தன் சொந்த சுகங்களுக்கு முஹம்மத் பயன்படுத்திடவே இல்லை. மாறாக தன் மனைவி கதீஜாவை அனைத்திற்கும் அப்பால் நின்று நேசித்தார்கள் அன்பு செலுத்தினார்கள்.

பலதார மணம், அதாவது ஒன்றுக் மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொள்வது என்பது அரபுப் பெரு நிலத்தில் சர்வ சாதாரணமான நிகழ்வு. ஆனால் முஹம்மத் அவர்கள் இளம் வயது பெண்ணொருத்தியை இரண்டாவதாக மணம்

முடித்திருக்கலாம். ஆனால் கதீஜா பிந்த் அல் குவாலித் தன்னோடு வாழ்ந்த காலம் வரை அவர் இன்னொரு திருமணத்தைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை.

கதீஜா பிந்த் அல் குவாலித் சில சீர்மிகு பண்புகளைத் தன்னகத்தே கொண்டவர்கள். தன்னைத் தனியாகக் காட்டிடும் பல பொன்னிகர் பண்புகளைக் கொண்டவர். நெஞ்சுரம், நேர்மை, இவற்றோடு கண்ணியத்தின் உறைவிடமாக இருந்தார்கள். அதே நேரத்தில் கூர்மையான புத்திசாலித் தனத்தை தன் இயல்பிலேயே பெற்றவர்.

இத்தனை பண்புகளைக் கொண்டவர்கள் கதீஜா அல் குவாலித் அவர்கள் என்பதை முஹம்மத் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முதல் முதலாக வரலாறாக வடித்துத் தந்த இப்னு இஷ்காக் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

கதீஜா பிந்த் அல் குவாலித் அவர்கள் தாம் முஹம்மத்-இன் ஆற்றல்களையும், அறிவுக் கூர்மையையும் முதன் முதலில் அங்கீகரித்தவர்கள். அதனால் அவர்களிடம் அபரிதமாக அன்பு செலுத்தினார். கனிவைக் கொண்டே அவரை அரவணைத்தார்கள்.

இளம் வயதிலேயே தன் தாயாரை இழந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் தன் வாழ்வில் சந்தித்த அடுத்தப் பெண்மணி இந்த மனித புனிதர். அதனால் அவரும் அன்பை அள்ளிச் சொரிந்தார்.

இவை போன்ற மாண்புகளால் அவர்கள் இருவரும் உள்ளத்தாலும், உணர்வாலும் இறுகப் பிணைந்த தம்பதியானார்கள். அனைத்து விவகாரங்களிலும் ஒருவர் மற்றவரின் ஆலோசனையையும் நடைமுறை ஆதரவையும் பெற்றார்கள்.

கதீஜா பிந்த் அல் குவாலித் அவர்களின் மரணத்திற்குப் பின் அவருடைய மாட்சிமைகளை முஹம்மத் அவர்கள் வாயார சொல்லிக் கொண்டே இருந்தார்கள். இதனால் சில பல நேரங்களில் அவர்களுடைய பிற்றை நாள் மனைவியர் ஆத்திரம் கொள்ளும் அளவுக்கு கதீஜாவின் அன்பையும் ஆதரவையும் சொல்லிக்காட்டிக் கொண்டே இருந்தார்கள்.

தன்னுடைய நாற்பதாவது வயதில்தான் கதீஜா, முஹம்மத் அவர்களை மணந்தார்கள். ஆறு குழந்தைகளை முஹம்மத் அவர்களுக்குப் பெற்றுத்தந்தார்கள். அவர்களுடைய ஆண் குழந்தைகள் அல்காசிம், அப்துல்லாஹ் ஆகியோர் தங்கள் மழலைப் பருவத்திலேயே இறந்துவிட்டார்கள்.

தன்னுடைய மகள்களான ஜைனப், ருக்கைய்யா, உம்மு குல்தும் ஆகியோரிடம் முஹம்மத் அவர்கள் உள்ளார்ந்த உணர்வு பூர்வமான பாசத்தோடும், பரிவோடும் இருந்தார்கள். மகள்கள் வாழ்ந்த காலங்கள் மிகக் குறைவு.

வாழும் காலமெல்லாம் இல்லாதார்க்கு வழங்கி வாழுங்கள் என்பதே முஹம்மத் அவர்களின் அறிவுரையாக இருந்தது. இந்த முஹம்மத் அவர்களைத்தான் நாம் மனிதம் அற்றவர் எனப் பிதற்றுகின்றோம்.

கதீஜாவுடன் அவர் நடத்திய குடும்பம் ஒரு பூம்பொழில். அந்தப் பொழிலில் இரண்டு இல்லாதவர்களும் இளைப் பாறினார்கள்.

அதனை அடுத்த இதழில் காண்போம்.

இன்ஷா அல்லாஹ்

**தொடரும். . .**

# நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்!

# தீன் சுடர் டி.எம். உமர் பாரூக்

**ஆகிய தொடர்கள் அடுத்த இதழில் இடம்பெறும்**

**இன்ஷா அல்லாஹ்**




# இது எந்த வகை இறை மறுப்பு?

பேரறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் தனது அல் மதாரிஜ் எனும் நூலில் கூறுகிறார்.

குஃப்ர் எனும் இறை மறுப்பு இரு வகை. பெரிய மறுப்பு, சிறிய மறுப்பு.

எந்த நிராகரிப்பு ஒருவனை நிரந்தர நரகத்தில் தள்ளுமோ அதுவே பெரிய நிராகரிப்பு.

எந்த நிராகரிப்பு ஒரு குறிப்பிட்ட காலம் ஒருவனை நரகவாசியாக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளதோ அது சிறிய நிராகரிப்பு.

சிறிய நிராகரிப்புக்கு பின் வரும் நபி மொழிகளை உதாரணமாகக் கூறலாம்.

நபி(ஸல்) கூறினார்கள் : வம்சா வழிகளைக் காட்டி குறை கூறுவது மரணித்தவர்களுக்காக ஓலமிட்டு அழுவது இவ்விரண்டும் என் சமுதாயத்தில் உள்ள நிராகரிப்பு (குஃப்ர்) (அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரழி) நூல்: முஸ்லிம், அஹ்மது)

மேலும் கூறினார்கள் "மனைவியிடம் ஆசன வாயில் புணர்பவன் இந்த முஹம்மது (ஸல்) மீது இறக்கியருளப்பட்டதை நிராகரித்துவிட்டான்" (நூல்: அபூதாவூத் திர்மிதி, இப்னு மாஜா)

இன்னும் கூறினார்கள் : "குறிகாரனிடமோ, ஜோதிடனிடமோ வந்து அவன் கூறுவதை உண்மை என்று நம்பக்கூடியவன் இந்த முஹம்மது (ஸல்) மீது அல்லாஹ் இறக்கியருளியதை நிராகரித்து விட்டான்" (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) (நூல்: ஹாகிம், அஹ்மது)

மேலும் கூறினார்கள் "எனக்குப் பின்னர் நீங்கள் ஒருவரையொருவர் வெட்டிக் கொல்லும் நிராகரிப்பவர்களாக ஆகி விடாதீர்கள்" (அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரழி) நூல் : புஹாரீ, முஸ்லீம்)

"அல்லாஹ் இறக்கியருளியதைக் கொண்டு தீர்ப்பளிக்காதவர்கள் தாம் நிராகரிப்பவர்கள்" (5:44) என்று திருக்குர்ஆனின் வசனத்துக்கு இப்னு அப்பாஸ் (ரழி) முதலிய நபித் தோழர்கள் தந்துள்ள விளக்கமும் இதோ!

இப்னு அப்பாஸ் (ரழி) கூறினார்கள் : அல்லாஹ் இறக்கியருளியதைக் கொண்டு

தீர்ப்பு வழங்காதவர்கள் அல்லாஹ்வையும், மறுமைநாளையும் நிராகரித்தவர்கள் போல முழு இஸ்லாத்தை விட்டே வெளியேறி விட்டார்கள் என்பதல்ல. மாறாக அப்படி ஒருவர் நடந்து கொண்டால் அவர் அதை (மட்டும்) நிராகரித்துவிட்டார் என்று பொருள்.

இதையே அறிஞர் தாவூஸ் (ரஹ்) கூறியுள்ளார்.

அறிஞர் அதாவு (ரஹ்) கூறுகிறார் : இவ்வாறான செயல் குஃப்ர் எனும் நிராகரிப்பை விட தாழ்ந்தது. ஷிர்க் - இணைவைப்பு எனும் பெரிய அநியாயத்தை விட தாழ்ந்தது. பெரும் பாவத்தை விட தாழ்ந்தது.

அந்த வசனத்துக்கு விளக்கம் தந்த அறிஞர் இக்ரிமா (ரஹ்) "அல்லாஹ் வழங்கிய வேதத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்காதவன் காஃபிர்தான். இது எப்போது என்றால் அல்லாஹ்வின் வேதத்தை ஏற்க மறுத்து தீர்ப்பு வழங்கினால்தான்" என்கிறார்.

இது உயீசதிமான விளக்கம் அல்ல. ஏனென்றால் ஒருவன் அல்லாஹ்வின் வேதத்தை ஏற்க மறுத்தாலேயே காஃபிர் ஆகி விடுவான். பிறகு அதைக் கொண்டு தீர்ப்பு அளித்தாலென்ன அளிக்காமல் போனா லென்ன?

அறிஞர் அப்துல் அஜீஸ் கன்னானீ (ரஹ்) உள்ளிட்டவர்கள் மேற்கண்ட வசனத்துக்கு "ஏகத்துவம், இஸ்லாத்தின் கடமைகள் ஆகிய அனைத்தையும் தன் தீர்ப்பின் வழியாகப் பிரதிபலிக்காதவர் காஃபிராகிவிட்டார்" என்று விளக்கம் கூறுகின்றனர்.

இது பொருத்தமான விளக்கம் அல்ல. ஏனென்றால் வேதத்தைக் கொண்டு தீர்ப்ப ளிக்காதவர்களை அவ்வசனம் எச்சரிக்கிறது. அது முழுவேதத்தைப் புறக்கணித்தவர் களையும் ஒரு பகுதியை மட்டும் புறக் கணித்தவர்களையும் உள்ளடக்கியதுதான். எனவே முழு வேதத்தையும் புறக்கணித்தவர் களை மட்டுமே இது குறிக்கிறது என்று விளங்கிட வழி இல்லை.

சிலர் இப்படி விளக்கம் தருகின்றனர், "இந்த வசனத்துக்கு இதுதான் பொருள். அதன் விளக்கம் இதுதான் என்று நன்றாகத் தெரிந்து கொண்டே அதற்கு மாறான தீர்ப்பை வழங்குபவர் காஃபிராகிவிட்டார்" என் கின்றனர்.

அறிஞர்கள் இக்கருத்தைக் கூறி யுள்ளதாக இமாம் பகவீ (ரஹ்) எடுத்துரைக்கிறார்.

சிலர், இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள கண்டனம் வேதக்காரர்களையே குறிக்கும் என்கின்றனர். இது அவ்வசனத்தின் நேரடி வாக்கியத்துக்கு எதிரானது, பொருத்தமற்றது. எனவே அதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

சிலர் "அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு தீர்ப்பளிக்காதவர்கள் முஸ்லிமே அல்ல" என்று விளக்கம் கூறுகின்றனர்.

சரியான கருத்து எதுவென்றால், அல்லலாஹ் இறக்கியருளிய வேதத்தின்படி ஒரு நீதிபதி தீர்ப்பு வழங்கவில்லை என்றால் அவருடைய நிலைப்பாட்டைப் பொறுத்து (சிறிய குஃபர், பெரிய குஃப்ர் ஆகிய) இரு நிராகரிப்பின் ஒன்றின் கீழ் வருவார்.

அதாவது, இந்த வழக்கில் அல்லாஹ்வின் வேதப்படியே தீர்ப்பு வழங்க வேண்டும். அப்படி வழங்காவிட்டால் அது பாவம். தண்டனைக்குரிய குற்றம் என்று தெரிந்தே வேதத்துக்கு மாறாக தீர்ப்பளிப்பது சிறிய குஃப்ர்.

இது அல்லாஹ்வின் தீர்ப்புதான். ஆனால் இதன் படி தீர்ப்பு வழங்குவது கட்டாயமல்ல. அது ஒரு விருப்ப உரிமை மட்டுமே என்று கூறுவது பெரியகுஃப்ர்.

இந்த வழக்கில் அல்லாஹ் கூறும் தீர்ப்பு எது என்று தெரியாமல் அதற்கு மாறாகத்

தீர்ப்பளித்தாலோ அல்லது அல்லாஹ்வின் தீர்ப்பை தவறாகப் புரிந்து கொண்டு தீர்ப்பளித்தாலோ அவர் தவறிழைத்தவராகி விட்டார். தவறிழைத்தவர்களின் சட்டமே இவருக்குப் பொருந்தும். அதாவது இவரைக் காஃபிர் என்று கூற முடியாது.

சுருங்கக் கூறின் பாவங்கள் அனைத்தும் சிறிய குஃப்ர் எனும் வகையைச் சார்ந்தது.

இங்கே குஃப்ர் என்பதன் பொருள் நன்றிகெட்டத்தனம் என்பதாகும்.

ஒரு பிரச்சனைக்குத் தீர்வாக ஒரு சட்டத்தை வழங்கியிருக்கும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தவேண்டும்.

அந்தச் சட்டத்தைச் செயல்படுத்தி அதன்படி வாழ்வதே அதற்குரிய நன்றி.

அதற்கு மாறானதை தீர்ப்பாக வழங்குவதும் அதைச் செயல்படுத்தி வாழ்வதும் நன்றி கெட்டத்தனம் (குஃப்ர்) தான்.

ஒரு அடியானின் செயல்கள் நன்றிக்குரியதாக இருக்கம் அல்லது நன்றி கெட்டத்தனமாக இருக்கும். இதிலும் சேராத அதிலும் சேராத மூன்றாவது வகையாகவும் இருப்பதுண்டு.

அல்லாஹ்வே எல்லாம் அறிந்தவன்.

இவ்வாறு பேரறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறியுள்ளார். (நூல் : மதாரிஜுஸ் ஸாலிகீன் பாகம் : 1, பக்கங்கள் : 335,336,337)

**தொடரும்**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**


**முஸ்லிம் அல்லாதவர்கள் திருகுர்ஆனை இலவசமாக பெற வேண்டுமா? கீழே உள்ள தொலைபேசியை தொடர்பு கொள்ளவும்**

**8148129887**




விலை ரூ. 60 மட்டுமே

**தீவிரவாதிகள் என்று சித்தரிக்கப்படும் தாலிபான்கள் யார்? என்பதை தெரிந்து கொள்ள இந்த நூல்களை படியுங்கள்!**




விலை ரூ. 90 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887**

**தொடர். . .**

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



# கிரேக்கர்கள் அரசியலில் தோற்றார்கள்! ரோமர்கள் அறிவுத் துறையில் தோற்றார்கள்!

**- அபுல் ஹசன் அலீ நத்வீ**

**மொழிபெயர்ப்பு: அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

ஐரோப்பியர்களின் சுபாவங்களிலிருந்து பிரிக்க முடியாத ஓர் அங்கமாக விளங்கியது அவர்களின் தேசப்பற்று.

ஆசியாக் கண்டத்தில் வாழ்வோரை விடவும் ஐரோப்பாவில் வாழ்பவர்களிடம் தேசப்பற்று வலிமைமிக்கதாகவும் வெளிப்படையாகவும் இருக்கும். ஐரோப்பாவின் பூகோள அமைப்பும் இதற்கு ஒரு காரணம்.

ஆசியாக் கண்டம் நீண்ட, பரந்த நிலங்களைக் கொண்டது. பல்வேறு இனமக்களும் வாழும் பூமி. வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் இங்கே தாராளமாகக் கிடைக்கும்.

எனவே தான் ஆசியாவில் அமையும் அரசுகளெல்லாம் விரிந்து பரந்த விசாலமான அரசாகத் திகழ்ந்துள்ளன. வரலாறு கண்ட மிகப்பெரிய அரசுகளெல்லாம் ஆசியாக் கண்டத்திலுள்ள நாடுகளில்தான் நிலைத்துக் கோலோச்சியுள்ளன.

ஐரோப்பா அப்படியல்ல. அங்குள்ள மலைகளும், நதிகளும் நிலப்பரப்பை வரையறுத்து வைத்திருந்தன. சிறு சிறு பிரதேசங்களாக ஐரோப்பா இருப்பதற்கு காரணம் மலைகளும் நதிகளும்தான்.

ஆசியாவைப் போல பெரிய அரசுகள் எதுவும் அங்கில்லை. குறுகிய இடத்தில் ஏராளமான மக்கள் வாழவேண்டிய நிலை இருந்ததால் அங்கு தங்குவதே பெரும் போராட்டமாக இருந்தது. அங்கு வாழ்வது சங்கடமாகவே இருந்தது. வாழ்ந்திடத் தேவையான சாதனங்கள் அங்கு தாராளமாகக் கிடைக்கவும் இல்லை.

இப்படி குறுகிய நிலத்தில் சிறிய அரசுகளின் கீழ் வாழ்ந்து பழகிவிட்டதால் ஐரோப்பியர்களின் சுபாவத்திலேயே தேசப்பற்று கலந்திருந்தது.

குறிப்பாக மத்திய மேற்கு ஐரோப்பியர்களிடமும் தென் ஐரோப்பியர்களிடம் தேசப்பற்று மிகைத்திருந்தது.

மிகப்பெரிய ஓர் அரசின் கீழ் வாழ்வது இவர்களுக்குப் பிடிக்காது. சின்னஞ்சிறிய அரசுகளே தம்மை ஆள வேண்டும் என்று விரும்புவார்கள் ஐரோப்பியர்கள்.

பண்டைய காலத்து ஐரோப்பாவின் அரசியல் காட்சிகளைப் பாருங்கள். ஒரு சில மைல் நிலங்களைக் கொண்டதாக ஓர் அரசு சுயமாக இயங்கி வந்திருப்பதைக் காண முடியும்.

இதற்கொரு சிறந்த உதாரணமாக கிரேக்க நாட்டைப் பார்க்கலாம். இது வரலாற்றின் உதயப் பொழுதிலிருந்தே பத்து சின்னஞ்சிறிய நகரங்களைக் கொண்ட அரசாகவே காணப்படுகிறது.

எனவே, கிரேக்கர்கள் தேசப்பற்றை வெறித்தனமாகவும் தம்முடைய மதமாகவும் கடைப்பிடித்து வந்ததில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

தேசப்பற்று எனும் கோட்பாடுதான் கிரேக்கர்களின் தலையாயக் கோட்பாடாக இருந்தது என்பதை அறிஞர் லேகி (LECKY) யும் ஒத்துக் கொள்கிறார்.

ஐரோப்பியர்களிடத்தில் தேசப்பற்று எனும் குறுகிய கண்ணோட்டம் எந்த அளவுக்கு ஆழப் பதித்திருந்தது என்றால் சாக்ரடீஸ், இங்சர்கவ்ஸ் போன்ற தத்துவமேதைகள் எல்லா நாடுகளிடமும் சமஅபிமானம் காட்ட வேண்டும் என்ற சர்வ தேசியவாதக் கோட்பாட்டை முன்வைத்த போது அதற்கு அங்கே ஆதரவே கிடைக்கவில்லை. கிரேக்கர்கள் அதைப் புறந்தள்ளிவிட்டார்கள்.

கிரேக்கரல்லாத ஒருவன் எவ்வளவு தான் நற்பண்புமிக்கவனாக இருந்தாலும், அவன் கிரேக்கன் அல்ல என்பதால் அவன் உயர்ந்தவன் அல்ல என்று அவர்கள் கருதும் அளவுக்கு நாட்டுப்பற்றை அவர்கள் ஓர் அளவு கோலாகவே வைத்திருந்தனர்.

அரிஸ்டாட்டில் வடிவமைத்த இந்த ஒழுங்கமைவை கிரேக்கத் தத்துவவாதிகள் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். தேசப்பற்றை ஒரு வெறியாக ஊட்டியதோடு அரிஸ்டாட்டில் நின்று விடவில்லை. கிரேக்க ரல்லாத மக்களை மிருகங்கள் போலவே கிரேக்கர்கள் நடத்திட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்தக் குறுகிய தேசப்பற்றுக் கோட்பாடு மத்தியக் கிரேக்கப் பகுதிகளில் மிகைத்திருந்தது. ஓரப் பகுதிகளில் ஓங்கி யிருந்தது.

“என் அன்பும் அரவணைப்பும் என்னுடைய நாட்டின் எல்லைக்குள் வசிக்கும் கிரேக்கர்களுக்கு மட்டும் உரித்தானதல்ல. (கிரேக்கத்துக்கு வெளியே வாழும்) எல்லாக் கிரேக்கர்களும்உரித்தானது” என்று ஒரு தத்துவ ஞானி கூறிய போது அவரை அங்குள்ளவர்கள் அதிசியமாகவும் இழிவாக வும் பார்த்தார்கள்.

கிரேக்கர்களின் குறுகிய தேசப்பற்று எவ்வளவு கோரமாக இருந்திருக்கிறது என்று இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## ரோம நாகரிகத்தின் தனித் தன்மைகள்

கிரேக்கர்களுக்குப் பின்னர் வந்த ரோமர்கள் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்து வதில் அரசமைப்பை சீரமைப்பதில் ராணுவ வலிமையை அதிகப்படுத்துவதில் கிரேக்கர் களை விஞ்சி நின்றார்கள்.

ஆனால் அறிவில், ஆற்றலில், இலக்கியத்தில், கவிதையில், தத்துவத்தில், நாகரிகத்தில், சாதுரியத்தில் இவர்களால் கிரேக்கர்களைப் பிடிக்க முடியவில்லை. சமகாலத்தில் வாழ்ந்த எல்லா சமுதாயங் களையும் ரோமர்களையும் கூட விஞ்சி நின்றனர், கிரேக்கர்கள் இவற்றில்.

ராணுவ வலிமைமிக்கவர்களாக ரோமர்கள் இருந்த போதிலும் அறிவுத் துறையில் கிரேக்கர்களுக்குக் கீழேதான் ரோமர்கள் இருந்தனர். கிரேக்கர்களின் அறிவு, சிந்தனை, தத்துவம் ஆகியவற்றிலிருந்து பலன் பெற்றனர் ரோமர்கள்.

மேற்கண்ட அறிவுசார் துறைகளில் ரோமர்கள் சுயமாக எதையும் சாதிக்கவில்லை. கிரேக்கர்களின் உணவுத் தட்டில் கூட அமர்ந்து சாப்பிடும் குழந்தைகள் போல ரோமர்கள் இருந்தனர்.

அறிஞர் LECKY கூறுகிறார்: பெரும் அறிவுச் செல்வத்தை உருவாக்கிய கிரேக்கர்கள் கால ஓட்டத்துக்கு ஏற்ப அதைப் பெருக்கிக் கொண்டே போனார்கள்.

ரோமர்களோ தம் இராணுவ வலிமையை வளர்த்துக் கொண்டே போனார்கள். இலக்கித்தில் நிகழ்த்தப்பட்ட சாதனைகளில் ஒன்று கூட ரோமர்களுக் குரியதாக இருக்கவில்லை.

அது மாத்திரமன்று ரோமர்களின் மொழியும் உயர்ந்த கருத்தாழமிக்க சிந்தனைகளை வார்த்தைகளாக்கித் தந்திட ஏற்றதாக இருக்கவில்லை. இந்தக் குறையும் பின்னடைவும் ரோமர்கள் அறிவுத்துறையில் தோல்வியடையக் காரணங்களாகி விட்டன. எனவே கிரேக்க நாகரிகத்திடம் ரோமர்கள் அடிபணிந்தனர்.

ஆக, கிரேக்கர்கள் அரசியலமைப்புத் துறையில் தோற்றனர். ரோமர்கள் அறிவுத்துறையில் தோற்றனர்.

அறிவுத்துறையின் எல்லாப் பகுதிகளிலும் ரோமர்களை கிரேக்கர்கள் வசீகரித்தனர். இதனால் ரோம நாட்டின் பண்டைய வரலாற்று ஆசிரியர்கள் தமது நூல்களை கிரேக்க மொழியிலேயே எழுதினர். இதனால் கிரேக்க மொழி இலக்கியங்களின் மொழியாகவும் அறிவின் மொழியாகவும் ஆனது.

பின்னர் ரோம் நாட்டுக் கவிஞர்கள் தமது கவிதைகளை தம்முடைய பூர்வீக மொழியான இலத்தின் மொழியில் எழுதத் தொடங்கிய பின்னரும் கூட கிரேக்க மொழியே அறிவின் மொழியாக கோலோச்சியது.

(source : Lecky, op.cit.p-243)

இலக்கியத்துறையிலும் நூல்களைப் படைப்பதிலும் மட்டும்தான் ரோமர்கள் கிரேக்கர்களிடம் தோற்றார்கள் என்றில்லை.

குணங்களில், சுபாவங்களில், குடும்ப வாழ்வு முறையில் சமுதாய வாழ்வில், உணர்வில், இனஉணர்வில் என வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் ரோம நாகரிகத்தை கிரேக்க நாகரிகம் தோற்கடித்து விட்டது.

கிரேக்கத்தை ரோமர்கள் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றினார்கள். அதைக் கொண்டே பெருமையடைந்தார்கள். உயர்வடைந்தார்கள்.

இப்படித்தான் கிரேக்கத் தத்துவமும், கிரேக்கக் கலாச்சாரமும் கிரேக்கத்தின் ஆன்மாவும் ரோமை வந்தடைந்தது. அது ரோமர்களின் உயிரோடும் உதிரத்தோடும் கலந்தது.

ஐரோப்பிய சுபாவத்தைக் கொண்ட ரோமர்கள் கிரேக்கர்களுக்கேயுரிய சுபாவங் களுடன் பெரிய அளவில் வேறுபடவில்லை. அதாவது அவ்விரு சமுதாயங்கள் மத்தியில் பெரும் ஒற்றுமைகள் இருந்தன.

ஐம்புலன்களில் ஒன்றால் அறிய முடிபவற்றை மட்டுமே நம்பினார்கள். இவ்வுலக வாழ்க்கைக்கு மிகையானதொரு மதிப்பைத் தந்தார்கள். இறைமார்க்கத்தை சந்தேகக் கண் கொண்டு பார்த்தார்கள். நம்ப வேண்டியவற்றை உறுதியாக நம்பவில்லை. கடவுள் கோட்பாடு பற்றித் தெளிவற்று இருந்தார்கள். மத அமைப்பையும் அதன் வழிபாட்டு முறைகளையும் ஏளனமாகப் பார்த்தார்கள். இன வெறிக் கோட்பாட்டை இறுகப்பிடித்து அதில் பெருமை கொண் டார்கள். நாட்டுப் பற்றை வெறித்தனமாகக் கடைப்பிடித்தார்கள்.

இவையெல்லாம் அவ்விரு சமுதாயங்களிடையே இருந்த ஒற்றுமைகள். இஃதன்றி அவ்விரு இனங்களிடையே இருந்த மற்றொரு ஒற்றுமை என்னவென்றால் (இறைவனின் ஆற்றலை வல்லமையை உணராமல்) தம் சொந்தத் திறமை ஆற்றல்

இவற்றையே பெரிதெனப் போற்றினர். அதையே வணங்கிப் பூஜிக்கும் நிலைக்குப் போய் விட்டனர்.

ரோமர்களுக்கு தமது மதத்தின் மீது அவ்வவளாக நம்பிக்கை இருந்ததில்லை என்பது வரலாறு பளிச்சென்று கூறும் செய்தி.

இதற்காக நான் அவர்களைக் குறை சொல்ல மாட்டேன். ஏனென்றால் ரோம் நாட்டின் மதம் கட்டுக்கதைகளையும் சிலை வணக்கத்தையும் கொண்டதாக இருந்தது. இப்படிப்பட்ட மதங்கள் மக்கள் மத்தியில் அவ நம்பிக்கையையும், குழப்பத்தையும், ஐயங்களையுமே ஏற்படுத்தும். அதுதான் ரோமிலும் நடந்திருக்கிறது.

அவர்கள் அறிவில் ஏற்றம் பெற்று சிந்தனைத் தெளிவு அடையும் போதெல்லாம் மதத்தை இழிவாகவே பார்த்தார்கள்.

அரசியலிலும் உலகக் காரியங்களிலும் கடவுளுக்கு எந்தத் தலையீடும் இருக்கக் கூடாது என்பது தொடக்க நாள் தொட்டே அவர்கள் எடுத்த முடிவு.

அறிஞர் Cicsero கூறுகிறார் : ‘உலகக் காரியங்களில் தலையிட தெய்வத்துக்கு எந்த உரிமையும் இல்லை’ என்று கருத்துள்ள பாடல்களை நாடக மேடைகளில் நடிகர்கள் பாடிய போது மக்கள் அதை ரசித்துக் கேட்டு மகிழ்ந்தார்கள். (கோபப்படவில்லை) (ஆதாரம் : அதே நூல் : பக்கம் 178)

அகஸ்டின் Augustine என்ற துறவி கூறுகிறார் : ‘உருவவழிபாட்டைக் கடைபிடித்து வந்த ரோமர்கள் தமது தெய்வங்களை ஆலயங்களில் வணங்கிக் கொண்டிருந்தாலும் நாடக அரங்குகளில் இழிவாக விமர்சித்தனர்.’ (ஆதாரம் : அதேநூல் பக்கம் : 179)

இப்படி சில நேரங்களில் தம் தெய்வங்களையே இழிவு படுத்தத் துணிந்து விட்டனர். அந்த அளவுக்கு மக்கள் மனதில் மதம் மதிப்பிழந்து போயிருந்தது. மதம் மக்களை வசீகரிக்க முடியாமல் துவண்டு கிடந்தது.

வரலாறு விண்டுரைக்கும் ஒரு தகவலைப் பாருங்கள். அகஸ்டஸ் Augustus என்ற மாமன்னருக்குரிய போர்க்கப்பலொன்று கடலில் மூழ்கியது அதைக் கேட்ட மன்னர் கோபத்தில் கொதித்தான். Neptune எனும் கடல் தெய்வத்தின் சிலையை உடைத்தெறிந்தான்.

அது போல மற்றொரு நிகழ்வு Germanicus என்ற அரசன் மரணித்த போது மக்களெல்லாம் அது வரை ரத்த பலியிட்டு பூஜித்து வந்த தம் தெய்வங்களை கல்லால் அடித்துத் தாக்கினார்கள். (Source : History of European morals the Pagan empire P.178)

**தொடரும்**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**

# தரீக்குல் குர்ஆன்



இல்யாஸ் ரியாஜி

**அத்தியாயம் : அல்பகரா**

**வசனம் : 125**

**மக்களுக்கு இந்த (கஅபாஎனும்) ஆலயத்தை ஒன்று கூடும் இடமாகவும், அபய பூமியாகவும் நாம் ஆக்கியதை நீங்கள் எண்ணிப் பாருங்கள். இப்றாஹீம் நின்ற இடத்தை நீங்கள் தொழும் இடமாக ஆக்கிக் கொள்ளுங்கள். (தவாஃப்) சுற்றுவோருக் காகவும், தங்கி வழிபாடு (இஃதிகாஃப்) செய்வோருக்காகவும் குனிந்தும், சிரம்தாழ்த்தியும் வணங்குவோருக்காகவும் என்னுடைய (இந்த) ஆலயத்தை நீங்கள் இருவரும் தூய்மைப்படுத்துங்கள் என்று இப்றாஹீமிடமும், இஸ்மாயீலிடமும் நாம் உறுதி மொழி பெற்றோம்.**

## விரிவுரை

ஏக இறைவனை வணங்குவதற்காக இந்த பூமியின் மேல் பரப்பில் முதன் முதலாக எழுப்பப்பட்ட இறையில்லம் கஅபா. இது மக்கா நகரில் உள்ளது.

இப்றாஹீம் (அலை) இஸ்மாயீல் (அலை) ஆகிய இரு இறைத்தூதர்களும் இதைக் கட்டினார்கள்.

அது கட்டப்பட்ட நோக்கத்தையும், அது அமைந்துள்ள நிலப்பரப்புக்கு, அல்லாஹ் வழங்கியுள்ள மாண்பையும் இவ்வசனம் எடுத்துரைக்கிறது.

இந்த ஒரு வசனத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

முதல் பகுதி : மக்களுக்கு இந்த (கஅபா எனும்) ஆலயத்தை ஒன்று கூடும் இடமாகவும் அபய பூமியாகவும் ஆக்கினோம்.

அதன் விளக்கம் : 'மஸாபத்' என்ற சொல்லை ஒன்று கூடும் இடம் என்று நாம் மொழி பெயர்த்துள்ளோம். 'மக்கள் மீண்டும் மீண்டும் வர விரும்பும் இடம்' என்றும் இதற்குப் பொருள் கூறலாம்.

அன்றைய காலம் முதல் இன்று வரை உலகிலேயே மிக அதிகமான மக்கள் ஒன்று கூடம் இடம் இது மட்டும்தான். அதிலும் குறிப்பாக இஸ்லாமிய ஆண்டின் கடைசி மாதமான துல் ஹஜ் மாதத்தின் பிறை எட்டு முதல் பதிமூன்று வரை ஆறு நாட்களில் மட்டும் இங்கே லட்சக்கணக்கான மக்கள் குழுமுகின்றனர்.

இஃதன்றி ஆண்டு முழுவதுமுள்ள இதரமாதங்களிலும் லட்சக்கணக்கானவர்கள் யாத்ரீகர்களாக வந்து செல்கின்றனர். குறிப்பாக ரமழான் மாதத்தில் ஹஜ்ஜை விட அதிகமாக கூட்டம் கூடுகிறது.

இந்த மாண்பு உலகிலுள்ள வேறு எந்த இடத்துக்கும் இல்லை. உலகில் எவ்வளவு கண்ணைக் கவரும் காட்சிகளும் மகிழ்ச்சியூட்டும் சுற்றுலாத் தலங்களும் இருந்த போதிலும் இன்றுவரை அதிகமான மக்கள் ஒன்று கூடும் இடம் என்ற பெருமை கஅபாவுக்கு மட்டுமே இருந்து வருகிறது.

"ஒன்று கூடும் இடமாக நாம் ஆக்கினோம்" என்ற வார்த்தை கவனிக்கத்தக்கது. 'கஅபா'வுக்கு இந்த மாண்பை வழங்கிய பெருமை என்னை மட்டுமே சாரும் என்று அல்லாஹ் உரிமை கொண்டாடுகிறான். அதிகமான மக்கள் கூட்டத்தை அங்கே வரவைக்கும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுக் கொண்டதால் அந்தப் பெருமையை கஅபா விடமிருந்து பறிக்க வேறு எந்த இடமும் இறுதி நாள் வரை வரமுடியாது என்பதும் புலனாகிறது.

கஅபாவுக்கு அதிகமான மக்கள் கூட்டம் வந்து செல்வதைப் பார்த்துப் பொறாமைப்பட்ட அன்றைய ஏமன் நாட்டின் மன்னன் அப்ரஹா கஅபாவுக்கு போட்டியாக தன்னுடைய நாட்டில் ஓர் ஆலயத்தை எழுப்பினான். இறுதியில் அவன் எப்படி அழிக்கப்பட்டான் என்பதை திருக்குர்ஆனின் 105 வது அத்தியாயம் சொல்கிறது.

கஅபா ஒரு 'மஸாபத்'தான் (மக்கள் ஒன்று கூடும் இடமாக) இருப்பதைத் தடுக்க எவராலும் இயலாது என்பதற்கு இது ஒரு சான்று.

இந்த 'மஸாபத்' என்ற சொல்லுக்கு மக்கள் திரும்பத் திரும்ப வர விரும்பும் இடம் என்றும் பொருள் உண்டு.

ஆம்! கஅபாவுக்குச் சென்று வருபவர்கள் எல்லோருமே பிரியாவிடை யுடன் தான் திரும்புகின்றனர். அவர்களின் உடல் அங்கிருந்து வந்து விட்டாலும் மனம் அங்கேதான் நிலை கொண்டிருக்கும். மறுபடியும் அங்கே செல்லவேண்டும் என்று பேரார்வத்துடன் இருப்பார்கள்.

"அபய பூமியாகவும் ஆக்கினோம்" என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

"அதில் நுழைந்தவர் அபயம் பெற்றவராவார்" என்று அல்லாஹ் மற்றொரு (3:97) வசனத்தில் கூறியுள்ளான்.

ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகிறார்: கஅபா என்ற புனிதப்பள்ளி வாசலின் நிர்வாகிகளாக இருந்த குறைஷிகள் அங்குள்ள முஸ்லிம்களை மிரட்டினார்கள். துன்புறுத் தினார்கள். மார்க்கத்தின் படி வாழவிடாமல் எல்லா வகையான இடையூறுகளையும் தந்து தடுத்தார்கள். இறுதியாக முஸ்லிம்கள் (தாம் நேசித்த) கஅபாவை விட்டு (ஹிஜ்ரத்) தியாகப் பயணம் மேற்கொள்ளும் நிலைக்கு ஆளானார்கள்.

அந்த கஅபாவின் பூமியை மக்கள் எல்லோரும் ஒன்று கூடும் இடமாக ஆக்க அல்லாஹ் விரும்பினான். உயிருக்கும், உடைமைக்கும் அச்சுறுத்தல் ஏதுமின்றி பத்திரமாக பாதுகாப்பு உணர்வுடன் அங்கு மக்கள் வரவேண்டும் என்று விரும்பினான்.

எனவே அபயம், நிம்மதி, அமைதி இவையெல்லாம் அங்கு கிடைப்பது அல்லாஹ் தந்திருப்பதால் கிடைக்கிறது (நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)

**இரண்டாம் பகுதி :**

இப்றாஹீம் நபி நின்ற இடத்தை நீங்கள் தொழும் இடமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

**அதன் விளக்கம்**

கஅபாவைக் கட்டும் போது இப்றாஹீம் (அலை) அவர்கள் உயரத்துக்காக ஏறி நின்ற கல் தான் 'மகாமுஇப்றாஹீம்' ஆகும். அந்தக் கல்லில் இப்றாஹீம் (அலை) அவர்கள் இரு கால்களின் தடங்களும் பதிந்துள்ளன.

நபித் தோழர் ஜாபிர் (ரழி) கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் கஅபாவை வலம் வரும் (ஏழு சுற்றுக்களில்) போது முதல் மூன்று சுற்றுக்களில் தோளைக் குலுக்கியபடி விரைவாக நடந்தார்கள். மீதியுள்ள நான்கு சுற்றுக்களில் வழமை போல நடந்தார்கள். பிறகு தவாஃப் முடிந்த பின் மகாமு இப்றாஹீமுக்கு வந்து அதன் பின்னால் நின்று இரண்டு ரகஅத் தொழுதார்கள். பின்னர் "இப்றாஹீம் நின்ற இடத்தை நீங்கள் தொழும் இடமாக ஆக்கிக் கொள்ளுங்கள்" என்ற

வசனத்தை ஓதினார்கள். (நூல்: திர்மிதி, இப்னுகதீர்)

ஆக மகாமு இப்றாஹீம் என்பது இப்றாஹீம் நபி கஅபாவைக் கட்டும் போது ஏறி நின்றி கல்லையே குறிக்கும். அதை நீங்கள் தொழும் இடமாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று கூறும் போது அதன் பரப்பளவு எவ்வளவு என்பதைத் தீர்மானிப்பதில் அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு இருக்கிறது.

“ஹரம் எனும் புனித எல்லை முழுவதும் மகாமு இப்றாஹீம் தான்” என்று இப்னு அப்பாஸ் (ரழி) கூறுகிறார்கள். அதாவது புனித எல்லையில் நின்று தொழுதாலும் மகாமு இப்றாஹீம் அருகே நின்று தொழுதாலும் நன்மை கிடைக்கும் என்று பொருள்.

“ஹஜ்ஜின் வழிபாடுகள் நடைபெறும் இடங்களான மினா, அரஃபா, முஸ்தலிஃபா, ஸஃபா, மர்வா ஆகிய அனைத்தும் மகாமு இப்றாஹீம் தான்” என்று இப்னு அப்பாஸ் (ரழி) கூறியதாக இக்ரிமா முஜாஹித் அதாவு (ரஹ்) ஆகியோர் கூறியுள்ளனர்.

அதாவது இறை வணக்கத்துக்காக இப்றாஹீம் நபி தங்கியிருந்த, பயன்படுத்திய, நின்ற எல்லா இடங்களும் ‘மகாமு இப்றாஹீம்’ என்ற வார்த்தையின் கீழ் வரும் என்று பொருள்.

**மூன்றாம் பகுதி**

தவாஃப் சுற்றுவோருக்காகவும் தங்கி (இஃதிகாஃப்) வழிபடுவோருக்காகவும் குனிந்தும், சிரம் தாழ்த்தியும் வணங்கு வோருக்காகவும் என்னுடைய இந்த ஆலயத்தை நீங்கள் இருவரும் தூய்மைப் படுத்துங்கள் என்று இப்றாஹீமிடமும், இஸ்மாயிலிடமும் நாம் உறுதி மொழி பெற்றோம்.

**அதன் விளக்கம்**

அஹித எனும் வினைச் சொல் இலா எனும் இடையெழுத்துடன் சேர்ந்து வரும் போது அது பொறுப்பை ஒப்படைப்பது, நிபந்தனை விதிப்பது என்ற பொருளைத் தருகிறது.

இங்கே அஹித்னா இலா என்ற இரு சொற்களும் வருகின்றன. எனவே இதன் பொருள், கஅபாவின் பொறுப்பை இப்றாஹீம் நபி மீதும் இஸ்மாயில் நபி மீதும் சுமத்தினான். தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தான் என்று பொருள் வரும்.

தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்றால் அது கட்டப்பட்ட நோக்கங்களை சிதைக்கின்ற எதுவும் அதனருகே வரக் கூடாது. அங்கு வழிபட வருவோரை அருவருப்படையச் செய்யும் அசுத்தங்களை அகற்றித் தூய்மையாக வைத்திருக்கவேண்டும். ஏக இறை வழிபாட்டுக்கு ஊறுவிளைவிக்கும் படியான கேளிக்கைகள், கூத்துக்கள் போன்ற கீழான செயல்களை விட்டு தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இறையில்லத்தை கோவிலாக உருமாற்றி விடுகின்ற கற்சிலைகள் மரச் சிலைகளை விட்டும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

தம்மீது சுமத்தப்பட்ட இந்தப் பொறுப்பை இப்றாஹீம் நபி, இஸ்மாயில் நபி இருவரும் முழுமையாக நிறைவேற்றினார்கள்.

பின்னர் அவர்களின் வழித் தோன்றல் கள் இணைவைப்பில் மூழ்கினர். அந்த நிபந்தனையைக் கைவிட்டனர்.

ஓரிறைவனை குனிந்தும், சிரம் பணிந்து வணங்கிய மக்களை, அங்கே தங்கியிருந்து வழிபாட்டில் திளைத்தவர்களை, கஅபாவை வலம் வந்து அதைக் கண்ணியப்படுத்தியவர் களை அநியாயமாக அப்புறப்படுத்தினார்கள்.

எனவே கஅபாவை நிர்வகிக்கும் பொறுப்பிலிருந்து இவர்கள் அப்புறப்படுத்தப் பட்டார்கள். (நூல் : ததப்புருல் குர்ஆன்)

**தொடரும்**

Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.